# வரததீபம்

## மணிவிழா சிறப்புமலர்



ஆவது விழா

THE EXPRESS INSTITUTE KOPAY

A BOON TO STUDENTS

**The Express Institute**

Irupalai Junction, Kopay

## மணிவிழா சிறப்பு மலர்

# வரததீபம்



வெளியீடு

The Express Institute

01.03.2015

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | வரததீபம் (மணிவிழா சிறப்பு மலர்) |
| உரிமை | : | The Express Institute |
| பதிப்பு | : | 2015.03.01 |
| வெளியீடு | : | The Express Institute |
| பதிப்புரிமை | : | கரிகணன் (தனியார்) நிறுவனம்<br>இல. 681, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். |

# கடவுள் வாழ்த்து



கணபதி என்றிடக் கலங்கும் வல்வினை
கணபதி என்றிடக் காலனுங் கைதொழும்
கணபதி என்றிடக் கருமம் ஆதலால்
கணபதி என்றிடக் கவலை தீருமே.

ஓரானைக் கன்றை உமையாள் திருமகனை
பேரானைக் கற்பகத்தைப் பேணினால்
வராத புத்திவரும் வித்தை வரும்
புத்திர சம்பத்துத் தரும் சக்திதரும் சித்திதரும் தான்.

**(நக்கீரர்)**

# நிறுவன கீதம்

இராகம்:-காபி

வாழிய வாழிய எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்
வாழிய வாழியவே
வளர்வுறு கலைகள் அழகுடன் ஊட்டும்
வனப்பினள் வாழியவே


யாழ் இருபாலை எழில்பெற வாய்ந்த
இனியவள் வாழியவே
எம் தமிழ் மக்கள் மாணவர் போற்றும்
இயல்பினள் வாழியவே

அறிவியல் துறையும் அழகியல் துறையும்
அரியநற் கலைத்துறையாவும்
உரிய நன்முறையில் ஊட்டியே வளர்க்கும்
உத்தமி வாழியவே

உடலியல் துறையும் கணிதநற்துறையும்
உயர்வுறு பல்கலை யாவும்
திடமுடன் ஊட்டி செயல் வழிகாட்டும்
செந்தமிழ் அன்னையே வாழ்க

அதிபரும் எங்கள் ஆசிரியர்கள்
அத்துடன் மாணவர் வாழ்க
மதிதரு கற்பக பிள்ளையார் அருள
மகிழ்வுடன் நாம் பயில்வோமே.

ஆக்கம்
கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை


மாட்சியுடன் மகிமை பெறும்
விழா
வரததீபம்
மணிவிழா நாயகன்

## மணிவிழாக் குழுவினர்

1. திரு. இ. மருதலிங்கம் – தலைவர்
2. திரு. ந. மோகநேசன் – செயலாளர்
3. திரு. ஐ. றமேஷன் – பொருளாளர்
4. திரு. சு. கு. சண்முகலிங்கம்
5. திரு. இ. அரசகுலசூரியன்
6. திரு. ச. குகதாசன்
7. திரு. ஞா. திருக்கேதீஸ்வரன்
8. திரு. இ. சந்திரராஜா
9. திருமதி. க. றஞ்சனாதேவி
10. திரு. பொ. வரதராஜன்
11. திரு. மு. சதீஷ்

# அருளாசிச் செய்தி



கல்விச் செல்வத்தை அள்ளி வழங்கி மாணவர் சமுதாயத்தை மேலோங்கச் செய்யும் பணியில் சிறப்புற்றுத் திகழும் எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் நிறுவனத்தின் முதல்வரும் கணித ஆசானுமாகிய திரு. த. வரதராஜா அவர்களின் அறுபதாவது அகவையை முன்னிட்டு வெளியிடப் பெறும் மணி விழா மலருக்கு அருளாசிச் செய்தி வழங்குவதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

"மாணவ சக்தி மாபெரும் சக்தி" என்றபடி எதிர்காலம் சிறப்புற கல்வி விருத்தி செய்து 'சேவையே தமது தேவை' என்று துலங்குகின்ற நல்ல நிறுவனமாகிய எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் முதல்வர் திரு. த. வரதராஜா அவர்கள் அகவை அறுபதில் அளப்பரிய சேவையாற்றும் தன்மையில் உயர்வுற்று சீரோடுஞ் சிறப்போடும் வாழ வேண்டும் என்று எல்லாம் வல்ல நல்லைக் கந்தனைப் பிரார்த்தித்து அருளாசிகள் நல்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்.

மணிவிழா நாயகன் நல்லபடி வாழ்ந்து அனைவருக்கும் மகிழ்ச்சியை வழங்கி இனிதே வாழ வாழ்த்துகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

**நல்லை திருஞானசம்பந்த ஆதீன குரு முதல்வர்**
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**
**இரண்டாவது குருமஹா சந்நிதானம்.**

**எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் முதல்வர் திரு. த. வரதராஜா அவர்கள் அகவை அறுபதில் அளப்பரிய சேவையாற்றும் தன்மையில் உயர்வுற்று சீரோடுஞ் சிறப்போடும் வாழ வாழ்த்துகின்றோம்.**





# ஆசிச் செய்தி

தமிழ்ப் பாரம்பரியம், சமயநெறி ஆகியவற்றைப் போற்றி வளர்க்கும் எம் இருபாலைக் கிராமத்தில் கடந்த 42 வருடங்களாகத் தன் நிகரற்ற கல்வித்தானத்தை வழங்கி வரும் "எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்" அதிபரும் சிறந்த கணித ஆசானுமாகிய திரு. தம்பிப்பிள்ளை வரதராஜா அவர்களின் மணிவிழா சிறப்பு மலருக்கு ஆசி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தொடர்ந்து நான்கு தசாப்தங்களுக்கு மேலாக ஒரு தனியார் கல்வி நிறுவனம் தன் சேவையில் உயர்ந்து நிற்கிறதென்றால் அந்தப் பெயரும் புகழும் அதை நிர்வகிப்பவரின் ஆளுமையையே சாரும். அந்த வகையில் இன்று அறுபதில் கால் பதிக்கும் அதிபர் வரதன் அவர்கள் நாற்பத்திரண்டு ஆண்டுகள் புகழ் பூத்து மிளிரும் தன் கல்வி நிறுவனத்தைத் தன் பதினெண் வயதில் ஆரம்பித்திருப்பதை எண்ணி வியப்படைகிறேன். தன் இளமைப் பருவக்காலத்தை நற்சிந்தனையில் ஓடவிட்டு இன்று எம் கிராமத்து மாணவர்களுக்கு அறிவுப் பசியைப் போக்கும் ஓர் சிறந்த தனியார் கல்விக் கூடத்தைத் தந்த பெருமை "வரதன்" அவர்களைப் பெற்றெடுத்த பெற்றோரையும் சாரும் எனலாம்.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்ற வாக்கிற்கு அமைய பாடசாலைக் கல்விக் குறைநிரப்பும் பணியினை மேற்கொண்ட அதிபர், வரதன் அவர்கள் பலருக்கும் கசக்கும் கணிதபாடத்தில் விற்பன்னர் மட்டுமல்ல அதனை மாணவர் மூளைக்குள் புகுத்துவதிலும் சிறந்தவர். தான் சார்ந்த கணிதத் துறையுடன் நின்றுவிடாது மிகுந்த கட்டுப்பாட்டுடன் கூடிய சமய சமூக ஒழுக்க நெறிகளைத் தானும் கடைப் பிடித்துத் தன் மாணாக்கருக்கும் புகட்டி வருபவர் என்பதை, தன் கிராமத்துக்கும், தன்நிறுவன அயலுமான எம் கற்பவிநாயகர் ஆலயத்தில் அவர் கொண்ட பற்றும் பக்தியும் சான்று பகரும்.



"குருவும் தாரமும் தலைவிதிப்படி" என்பர். எம் கிராமச் சிறார்களுக்கு நல்லதொரு குருவைத் தந்த கற்பக விநாயகரைப் பணிந்து, இன்று மணி விழாக்காணும் திரு. த. வரதராஜா அவர்கள் நோய் நொடியின்றி தம் வாழ்வில் மட்டுமல்ல, தன் கல்விப் பணியிலும் சதம் அடிக்க வேண்டுமென எல்லாம் வல்ல கற்பக விநாயகரைப் பிரார்த்தித்து ஆசி கூறுகின்றேன்.

சுபம்

**கற்பகவிநாயக கிரியா உபாசகர் சிவஸ்ரீ. பா. செல்வசேனக்குருக்கள்**

*பிரதம குரு, தென்கோவை கற்பகப்பிள்ளையார் தேவஸ்தானம்,*

*இருபாலை, கோப்பாய்.*

# நல்லாசி உரை



அன்பும், பண்பும், அறிவும், ஆற்றலும், அனுபவமும் மிக்க ஆசிரியராக, அதிபராகத் திகழும் பெருமை மிக்கவர் திரு. த. வரதராஜா அவர்கள். "எக்ஸ்பிறஸ்" என்ற கல்வி நிறுவனத்தை 40 ஆண்டுகளுக்கு மேலாக நடத்தி வருகின்ற பெருமை மிக்கவர். அந்த நிறுவனத்தில் படித்தவர்கள் பலர் வைத்தியர்களாக, பொறியியலாளர்களாக, ஆசிரியர்களாக, எழுதுவினைஞர்களாக மேலும் பல துறைகளில் சிறப்பாகக் காணப்படுகின்றனர். மேலும் வெளிநாடுகளில் பலர் சிறப்பாக வாழ்கின்றனர். இவ்வாறு பல உயர் மக்களை உருவாக்கிய சிறப்பு வரதராஜா அவர்களுக்கு உண்டு. கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற ஒழுங்கில் கல்வி நிறுவனத்தை நடாத்தி வருகின்றார். நிறுவனத்தின் மாணிக்கவிழாவை சிறப்பாக நடத்திய சிறப்பும் உண்டு. அதனால் மாணவர்கள் பலருக்கு பல சலுகைகளை வழங்கிய பெருமையும் உண்டு. யாழ் மாவட்டத்தில் "எக்ஸ்பிறஸ்" கல்வி நிறுவனம் முதன்மை பெற்று விளங்குவதைக் காணலாம். எல்லாச்சிறப்புக்கும் காரணமான வரதராஜா அவர்கள் மணிவிழா காண்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம். அகவை அறுபதில் அறிவொளி காண உருவாக்கிய பெருமையோடு என்றும் ஆரோக்கியமாக வாழ வேண்டி இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். மேலும் கல்விசார் திறமைசாலிகளை உருவாக்க வேண்டும். ஆரோக்கியமான வாழ்வோடு பவளவிழா, அமுதவிழாவையும் அவர் காண வேண்டும் ஆயிரம் பிறை காணும் பெரியோராக அவர் திகழ வேண்டும். அதற்காக இறைவனைவேண்டி நல்வாழ்த்துக்கூறுகின்றோம். அவரும் குடும்பத்தாரும் சிறப்பாக வாழ நல்லாசிகள் கூறி அமைகின்றோம்.

*நன்றி*

**சிவஸ்ரீ சா. சோமதேவக்குருக்கள் (பிரதமகுரு)**

*ஸ்ரீ அரசகேசரிப்பிள்ளையார் கோவில்,*

*நீர்வேலி.*







# செஞ்சொற் செல்வரின் ஆசிச் செய்தி

கல்விப்பணி காலமெல்லாம் நன்றியோடு போற்றும் பணி. பல நூறு மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பங்கு கொண்டு உழைத்த திரு. வரதன் அவர்களின் மணிவிழாக் குறித்து வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகிறேன். பல வருட காலமாகக் கோப்பாய் பிரதேசத்தில் பிரத்தியேகக் கல்வி நிலையமான எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டை நடத்தி மாணவர்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற இவரை அறியாதவர்களில்லை. யாழ் மத்திய கல்லூரியில் நீண்ட காலம் ஆசிரியப் பணியாற்றியவர். மாணவர்களின் ஒழுக்காற்றல் பொறுப்பாசிரியராக விளங்கியவர். மாணவர்களை ஆற்றுப்படுத்துவதில் வல்லவர். இவரது மணிவிழாச் சிறக்க வாழ்த்துவதோடு, அவர் சகல வளங்களுடனும் நிறைவாக வாழ இறையருளை வேண்டி வாழ்த்தி அமைகிறேன்.

**கலாநிதி ஆறு. திருமுருகன்,**
*தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பளை,*
*தலைவர், சிவபூமி, அறக்கட்டளை.*





# ஆசிரியருக்கு இலக்கணமான பெருந்தகை



எனது நண்பரும் எக்ஸ்பிறஸ் நிறுவனத்தின் முதல்வருமான ஆசிரியர் திரு. த. வரதராஜா அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். கற்பித்தல் எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கு இலக்கணமாக விளங்கிய அவரது ஆசிரியப்பணி மாணவர்களது கட்டுப்பாடு எவ்வாறு அமைய வேண்டும் என்பதனை உள்ளடக்கியதாக அமைந்ததே அவரது பணிக்குக் கிடைத்த தனித்துவமாகும். யாழ். மத்திய கல்லூரியில் பிரபலமான கணித ஆசிரியராக விளங்கியது மட்டுமன்றி அக்கல்லூரியின் மாணவர் ஒழுக்கத்தை மேற்பார்வை செய்வதற்குப் பொறுப்பான ஆசிரியராகவும் நியமனம் பெற வைத்தது. அக்கல்லூரியில் முத்திரை பதித்துச் சென்ற ஆசிரியர்களுள் நண்பன் வரதராஜா அவர்களும் ஒருவர் என கூறினால் அதில் மிகை ஒன்றும் இல்லை. அதிபராலும் ஆசிரியர்கள், மாணவர்களாலும் விரும்பப்பட்ட கணித ஆசிரியராக விளங்கிய வரதராஜா அவர்கள் கல்லூரியின் வளர்ச்சியில் முக்கிய பங்காளியாக விளங்கியதை நான் அறிவேன். கல்லூரியில் நடைபெறும் எந்த ஒரு விழாவிலும் காத்திரமான பங்கை வகித்து வந்த வரதன் அவர்கள் கற்பித்தலால் தனக்கொரு இடத்தை வகித்து வந்தமையினாலேயே கல்லூரியில் கணித பாடத்திலான பெறுபேறு என்றுமே உயர்வாகக் காணப்பட்டமையை நான் அறிவேன். அதுமட்டுமன்றி, என்றுமே அதிபருக்கும் ஆசிரியர்களுக்கும் ஒத்துழைப்பு வழங்குவது வரதன் அவர்களின் இயல்பாகும்.

திரு. த. வரதராஜா கல்லூரியில் மட்டுமன்றி எக்ஸ்பிறஸ் நிறுவனத்தினூடாக ஆற்றிவரும் சேவைகளும் பாராட்டப்பட வேண்டியவையாகும். அவர் இக் கல்வி நிலையத்தின் முதல்வராக இருந்த காரணத்தால் தனது ஆளுமையின் மூலம் ஒரு தனியார் பாடசாலை



போன்றே அதனது நிர்வாகத்தை மேற்கொண்டிருந்தார். நான் எண்பதுகளில் இக்கல்வி நிலையத்தில் கல்வி கற்பித்த காரணத்தால் நேரடியாகவே இவரது நிர்வாகத்திறமையைக் கண்டு வியந்திருக்கிறேன். நேர முகாமைத்துவத்தில் அவர் காட்டி வந்த அக்கறை மாணவர்களதும் ஆசிரியர்களதும் வரவில் மிகச்சிறப்பான ஒழுக்கத்தைப் பேண உதவியது. தமது பிள்ளைகளது கல்வியையும் ஒழுக்கத்தையும் மேம்படுத்த விரும்பிய பெற்றோர்கள் எக்ஸ்பிறஸ் நிறுவனத்தை நோக்கிப் படையெடுப்பதனை நான் நேரடியாகவே கண்டு மகிழ்ந்திருக்கிறேன். நண்பன் வரதன் அவர்கள் நட்புக்கு இலக்கணமாகத் திகழ்பவர் என்பதை மகிழ்ச்சியுடன் கூறுவதற்கு விரும்புகிறேன். அதன் காரணமாகவே, ஒரு பெரிய நண்பர் கூட்டத்தை வைத்திருக்கின்ற ஆற்றல் அவருக்கு ஏற்பட்டது. அது மட்டுமன்றி, என்றுமே உயர் சிந்தனை கொண்ட ஒருவராகவும் மனிதநேயம் கொண்ட ஆசிரியராகவும் இருந்தமையால் சமூகத்தில் மிகச் சிறந்த உறவைப் பேணக்கூடிய பெருந்தகையாக அவர் விளங்கியதுடன் சமூகத்தவரால் நன்கு மதிக்கப்படும் ஒருவராகவும் காணப்படுகிறார். “செய்யும் தொழிலே தெய்வம்” என்ற மனப்பாங்கு கொண்ட வரதன், மாணவர்களுக்கு நல்ல தரமான கல்வியை வழங்க வேண்டும் என்பதிலே அசையாத நம்பிக்கை கொண்டவர். இதன் காரணமாகவே, பெருமளவு பணச்செலவில் தனது கல்வி நிலையத்துக்கென பௌதிக வளங்களை விருத்தி செய்துள்ளார். அதே போன்று நல்ல தரமான ஆசிரியர்களை இனங்கண்டு வேலைக்கு அமர்த்துவதன் மூலம் உயர்தரத்திலான கல்வி வழங்கப்படுவதனை உறுதி செய்திருப்பதனைக் காணமுடிகின்றது. ஆண்டு தோறும் பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் க.பொ.த சாதாரண தரத்தில் சித்தி பெற வைக்கும் பெருமையும் நண்பர் வரதராஜா அவர்களையே சாரும். மொத்தத்தில் நல்ல கல்வியாளராக, சிறந்த நிர்வாகியாக, உயர்ந்த சமூக சேவையாளராக விளங்கும் வரதராஜா அவர்களின் சேவை, கல்வியுலகில் பாராட்டப்பட வேண்டியதென்பதை உறுதிபடக் கூறுவதுடன், அவர் மேலும் பல்லாண்டு காலம் உடல், உள ஆரோக்கியத்துடன் வாழ்ந்து மாணவர் உலகின் விடிவெள்ளியாகத் திகழ எனது உளமார்ந்த வாழ்த்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*வாழ்க வளமுடன் என வாழ்த்தும் நண்பன்*

**பேராசிரியர் க. தேவராஜா**

*தலைவர்/வணிகத்துறை,*

*யாழ். பல்கலைக்கழகம்.*

# சத விழாக்காணவும் வாழ்த்துக்கள்



ஒருவர் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார் என்பது முக்கியமன்று; வாழ்ந்த ஆண்டுகளில் சமூகத்திற்கு எத்தகைய நற்செயல்களைச் செய்தார் என்பதையே வரலாறு பதிவு செய்கின்றது. அந்த வகையில், ஒரு நல்லாசானாக, நல்லாளுமை கொண்ட நிர்வாகியாகக் கல்விப் புலத்தில் ஆற்றிவரும் சேவைக்காக இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் அதிபர் உயர்திரு. த. வரதராஜா அவர்கள் வரலாற்றில் அறியப்படுவார்.

நான் ஆசிரியப் பணியில் நுழைந்த 1977 காலப்பகுதியில் ஒரு கண்டிப்பான ஆசிரியராக எனக்கு அறிமுகமானவர் உயர் திரு. த. வரதராஜா அவர்கள். தொடர்ந்தும் இடுக்கண் களையும் நட்பாளனாக என்னுடன் உறவு பூண்டிருக்கிறார்.

உயர்திரு த. வரதராஜா அவர்களின் 60 ஆவது அகவையையொட்டி நடைபெறும் மணிவிழா சிறக்கவும் அவர் தம் அகவை நூறாண்டுகளைக் கடந்து சத விழாக் கொண்டாடவும் நான் வணங்கும் எல்லாம் வல்ல இயற்கை என்ற இறைவனை இறைஞ்சுகின்றறேன்.

**பொ. ஐங்கரநேசன்**
*விவசாய அமைச்சர்*
*வடக்கு மாகாணம்.*



# கோப்பாய் பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி



எக்ஸ்பிறஸ் கல்வி நிறுவனத்தினுடைய முதல்வரும் பிரபல கணித ஆசானுமாகிய திரு. த. வரதராஜா அவர்களின் 60ஆவது அகவையை முன்னிட்டு வெளியிடப்படும் மலருக்கான வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். எமது வலிகாமம் கிழக்கு கோப்பாய் செயலக பிரிவில், சிறந்த நிர்வாகக் கட்டமைப்புடன் இயங்கிவருகின்ற தனியார் கல்வி நிறுவனங்களில் எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் தனக்கென தனியான இடத்தினைப் பெற்று மிளிர்வது யாவரும் அறிந்ததே.

42 வருடங்களாக எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டினுடைய புகழ்பூத்த கணித ஆசானாகத் தன்னுடைய பணியை மிகச் சிறப்பாக ஆற்றி வரும் திரு. த. வரதராஜா அவர்கள் பல நல் மாணாக்கர்களை சமூகத்திற்கு உருவாக்கிய பெருமைக்குரியவர். இந் நிறுவனத்தில் கல்வி கற்ற மாணவர்கள் பல நற்பிரஜைகளாகவும் சமூகத்தில் உயர் பதவிகளையும் வகித்து வருகின்றனர்.

எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டினை நின்று நிலைக்கக் கூடிய கல்வி நிலையமாகத் தொடர்வதற்கு பௌதிக ரீதியான வளங்களைப் பெருக்கி நிரந்தரக் கட்டிடத்தொகுதியிலே கல்வி நிலையத்தினை நடாத்திவருவது பாராட்டுதற்குரியதாகும்.



சிறப்பான முறையில் வெள்ளி விழா, மாணிக்க விழா ஆகியவற்றினைக் கொண்டாடி பொன்விழாக் காணவிருக்கும் எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டினுடைய பணியினை வாழ்த்திப் பாராட்டுவதோடு அந்நிறுவனத்தின் முதல்வர் திரு. த. வரதராஜா அவருடைய மணிவிழா நிகழ்வு சிறப்பாக அமையவும் அவர் தேகாரோக்கியத்துடன் நீண்ட காலம் வாழ்ந்து நல் மாணாக்கர்களைத் தொடர்ந்தும் உருவாக்கவும் எல்லாம் வல்ல இறையருளை வேண்டி நிற்கின்றேன்.

**மருதலிங்கம் பிரதீபன்,**
பிரதேச செயலர்,
வலிகாமம் கிழக்கு, கோப்பாய்.

# வாழ்த்துச் செய்தி



நம் தமிழ்ப் பரம்பரையின் முதுசமான கல்விப் பாரம்பரியத்தைக் காவி சந்ததிக் கடத்தல் செய்யும் வரதனுக்கு மணிவிழா எனும் செய்தி மனதுக்கு மகிழ்ச்சி தருகின்றது. இவரால் உருவாக்கப்பட்ட, கட்டமைக்கப்பட்ட அவரைச் சார்ந்த சமூகம் எடுக்கும் மணி விழாவுக்கு வாழ்த்துச் செய்தி எழுதும் போது, பேராசிரியர் ஒருவர் கல்விப் புலத்தில் சாதித்த ஆசிரியர் ஒருவருக்கு எழுதும் செய்தியாக நான் இதை உணரவில்லை. சக நண்பனை வாழ்த்தி அவனோடு பயணித்த நினைவுகளை மீட்டி எழுதும் செய்தியாகவே உணர்கின்றேன்.

ஆசிரியர் வரதன் அவர்கள் ஆரம்பித்து இன்றும் நாற்பது வருடங்களைத் தாண்டிப் பயணிக்கும் அவரது தனியார்துறை கல்விக் கூடத்தில் ஐந்து ஆண்டுகள் கற்பித்த அனுபவம் என்றும் மறக்கற்பாலது. நம் சமூகத்துக்குத் தனியார் கல்வித்துறை சம்பந்தமான அறி முகம் எழுந்தபோது மிகவும் நேர்த்தியாகக் கட்டமைக்கப்பட்ட ஒரு நிறுவனத்தை "எக்ஸ்பிறஸ்" எனும் பெயரில் ஆரம்பித்து ஒவ்வொரு பாடப்பரப்புகளிலும் நுண்மான் நுழைபுல அறிவுமிக்க ஆசிரிய குழாத்தை வெவ்வேறு இயங்கு தளங்களிலிருந்து ஒன்று சேர்த்துக் கட்டுப்பாடும் ஒழுக்கமும் நிறைந்த ஒரு பாடசாலைக்கு ஒப்பான பக்குவத்தோடு, நாற்பது வருடங்கள் தாண்டியும் அக் கல்வி நிலையத்தை இயக்கும் வல்லமை இவரைத் தவிர யாழ்ப்பாணத்தில் எவருக்கும் வாய்த்ததில்லை என்பதை உறுதியாகச் சொல்வேன்.

இவரின் ஆளுமைமிக்க நிர்வாகத்தில் புடம் போடப்பட்ட மாணவர்கள் பலரை நான் நன்கு அறிவேன். அவரது கண்டிப்பும் தேவைப்படும் வேளைகளில் எழும் தண்டிப்பும் மாணவர்கள் மத்தியில் ஒரு மரியாதை கலந்த பற்றுணர்வை அவருக்கு ஏற்படுத்தியிருப்பதை அவர்கள் வழி உணர்ந்திருக்கின்றேன். குறிப்பாக, யாழ்ப்பாணத்தின் முக்கிய அரச கல்விக்கூடங்களில் ஒன்றான யாழ். மத்திய கல்லூரியில் நீண்ட காலமாக கணித ஆசிரியராகவும் அதேவேளை, மாணவர்களின் ஒழுக்கத்தைக் கண் காணிக்கும் பொறுப்பிலும் அவர் வகித்த வகிபாகம் நம் கல்விச் சமூ கத்தில் அவருக்கு ஒரு நிரந்தரமான மரியாதைக்குரிய இடத்தைத் தக்க வைத்துள்ளது.



போர் நெருக்கடி மிக்க காலங்களில் அவரோடு இணைந்து தனியார் துறை ஆசிரியனாகப் பணியாற்றும் போது நமக்குக் கிடைத்த அனுபவங்கள் என்றும் மறக்கும் தன்மையற்றன. பொருளாதார நெருக்கடி மிக்க குடும்பப் பின்னணியிலிருந்து வரும் மாணவர்களின் வருத்தம் போக்கியும், கல்விப் புல அறிவு வறுமைமிக்க பெற்றோர்களின் பிள்ளைகளுக்குப் பெற்றோரின் இடத்திலிருந்து நல்ல வழிகாட்டியாகவும் அவர் இன்று வரை செயற்பட்டுவருவதை நான் அறிவேன்.

ஆண்டுகள் கடந்து அகவைகள் அதிகரிப்பதும் அறுபதைத் தொட்டு மணிவிழாக் கொண்டாடுவதும் மகிழ்ச்சியான விடயம் என்கின்றபோதும், வரதன் போன்று என்றும் இளமையாக இருக்கும் மனிதர்களுக்கு மூப்புக் கிடைப்பது சற்று சங்கடமாகவும் இருக் கின்றது. அவர் காலங்களைத் தாண்டி என்றும் இளமையோடும் துடிப்போடும் நம் சமூகத்துக்காக வாழவேண்டியவர். அவரது நல்ல மனது குறிப்பாக, முன்னோக்கி நகரும் நேர்ச் சிந்தனைகளும் அவரை என்றும் இளமையோடு வாழ வைக்கும். அறுபதுகள் கடந்தும் ஆண்டுகள் பல தாண்டி நம் சமூகத்துக்காக இனிய நண்பர் வரதன் என்றும் ஆரோக்கியத்துடன் வாழவும் அவரது கல்விப் பணி இடையறாது தொடரவும் இறையருள் துணைநிற்கப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.



**என்றும் மாறாத நட்புணர்வுடன்**
**பேராசிரியர் தி. வேல்நம்பி**
*பீடாதிபதி, முகாமைத்துவ வணிக பீடம், யாழ். பல்கலைக் கழகம்,*
*தலைவர், யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம்.*

# மணிவிழா வாழ்த்து



எனது அன்பிற்கும், அபிமானத்திற்குரியவரும், அயலவரும் சிறந்த ஆளுமைமிக்க கணித ஆசானுமாக விளங்குகின்ற திரு. த. வரதராஜா அவர்களின் அறுபது அகவை நிறைவு மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

இவரது சேவையின் அர்ப்பணிப்பாக "எக்ஸ்பிறஸ்" கல்வி நிறுவனத்தை ஒர் ஓலைக் கொட்டிலில் ஆரம்பித்து தற்போது இந் நிறுவனமானது பல கட்டிடங்களும் வளங்களும் நிறைந்த ஒரு தனியார் கல்வி நிறுவனமாக யாழ்ப்பாணத்தில் திகழ்வதையிட்டுப் பெருமைப்பட வேண்டியுள்ளது. கடந்த 2013ஆம் ஆண்டு மாணிக்க விழாவைக் கண்ட இந்த நிறுவனத்தின் இயக்குநர் அவர்கள் கல்வி மேம்பாட்டில் மாணவர்களை முன்னிலைக்குக் கொண்டு வருவதுடன் மட்டுமன்றி, அவர்களை ஒழுக்கத்திலும், கட்டுப்பாட்டிலும் வழி நடத்தும் ஒரு ஆளுமைமிக்க முதல்வர். மாணவர்களை சமூகப் பணிகளிலும் ஈடுபடுத்திச் செயற்பட வைக்கும் ஒரு முற்போக்காளன். இவரிடம் கற்ற மாணவர்கள் பலர் உயர் பதவிகளில் இலங்கையில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் சேவையாற்றுகின்றனர்.



இவரது கல்வி நிறுவனத்தின் வளர்ச்சியை ஆரம்ப காலம் முதற்கொண்டு, கண்டு கொண்டு வருவதால் இவரின் ஆளுமையின் திறமையை கண்கூடாகக் காணமுடிகிறது. மாணவர்களை ஒழுக்கக் கண்டிப்புடன் வழி நடத்தும் விதமே தனி. இவரது நிறுவனத்தில் கல்வி கற்கும் மாணவர்களின் தொகையைக் கொண்டு, இவரது செயற்பாட்டின் திறமையை மக்கள் அறிந்துள்ளார்கள் என்பதைக் கண்டுகொள்ளலாம்.

இவ்வாறு செயற்படும் ஒருவருக்கு மணிவிழாக் கொண்டாட ஏற்பாடு செய்த மணி விழாக் குழுவினருக்கு முதற்கண் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிப்பதுடன், விழா நாயகன் எல்லா நலன்களும் பெற்று சகல சௌபாக்கியங்களுடன் நல்வாழ்வு வாழ இறையருளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

வளர்க சேவை! வாழ்க பல்லாண்டு!

லயன் Dr. வை. தியாகராஜா MJF, J.P.
உப ஆளுநர்
லயன்ஸ் கழகம் 306 B

# பல்லாண்டு காலம் வாழவேண்டும்



எனது நண்பனும், யாழ்ப்பாணம் எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டின் அதிபருமான திரு. த. வரதராஜா அவர்கள் கணிதத்துறையில் புகழ்பூத்த ஆசிரியராவார்.

கற்பித்தல் பணியில் தனக்கென ஒரு பாணியை வகுத்து, கடின பாடம் கணிதம் என்ற மாணவர்களின் தவறான எண்ணத்தை முறியடித்தவர் வரதராஜா. எல்லோருக்கும் உரிய இடத்தில் உதவி செய்கின்ற மனப்பக்குவம் உள்ள இவருக்கு ஏராளமான நண்பர்கள் இருக்கின்றனர்.

நீண்ட காலம் குடும்ப நட்புடன் பழகுகின்ற வரதன், எந்தச் சவாலையும் துணிந்து எதிர்கொள்ளும் ஆற்றல் உள்ளவர்.

எனக்குப் பல வழிகளில் உதவிய நண்பன் வரதனின் நட்பானது, மிகவும் உன்னத மானது. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நூற்று ஐம்பது ஆசிரியத் தோழர்களுடன் நாம் செய்த பணிகளை இப்போதும் எண்ணிப் பார்க்கிறேன். இரண்டாயிரத்து எண்ணூறு மாணவர்கள் கற்ற காலங்களில் ஆசிரியப் பணியின் உண்மையான மகத்துவத்தை உணர்ந்து நாம் கடமையாற்றிய காலமது. எமது காலத்தில் வடக்கின் பெரும்போர் என வர்ணிக்கப்படும் பெருந் துடுப்பாட்டப் போட்டியில் மத்திய கல்லூரி அணி நீண்டகால இடைவெளியின் பின்னர் வாகை சூடியதற்கு அத்தனை ஆசிரியர் களும் பங்காளிகளே.



ஆசிரியப் பணியை வாஞ்சை யுடன் ஆற்றுவோருக்கு இறைவன் வழங்குகின்ற பரிசு நல்ல மாணவர்கள்தான். அதனை வரதன் நிறையவே பெற்றிருக்கின் றான் என்றுரைத்து பல்லாண்டு காலம் வாழ அகவை அறுபதில் வாழ்த்துகின்றேன்.

**சரா. புவனேஸ்வரன்**

*விரிவுரையாளர், பொதுச் செயலாளர்,*

*இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.*

# வாழ்த்துரை



தம்பிப்பிள்ளை வரதராஜா தமது அறுபதாவது அகவையைக் கொண்டாடுகின்ற இந் நாளில் அவருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன். 40 ஆண்டுகளுக்கு மேலாகக் கல்வி உலகில் மாணவர்கள் பலரின் உயர்வுக்கு உழைத்தவர் இவர். புகழ்பெற்ற கணித ஆசிரியராக மிளிர்ந்தவர். தனது சேவையில் கஷ்டப்பிரதேசங்களில் கடமையாற்றி, நிறைவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நீண்டகாலம் ஆசிரியராகப் பணியாற்றியவர்.

இக் கல்லூரியில் ஒழுக்காற்றுக்குழுவில் இணைந்து பணியாற்றினார். தன்னுடைய ஆசிரியர் பணியோடு தனியாக ஒரு கல்வி நிறுவனத்தை நிறுவி இன்று வரை ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட கட்டுக்கோப்பினுள் தனியார் கல்வி நிறுவனத்தின் அதிபராக கடமையாற்றுவது வாழ்த்துதற்குரியது.

40 வருடங்களாக ஒரு கல்வி நிறுவனத்தை இயக்கி வருவது பாராட்டிற்குரியது. பாடசாலை மாணவர்களின் ஒழுக்க விழுமியங்களில் அக்கறை கொண்டு, தனது கல்வி நிறுவனங்களிலும் நெறிமுறையான சிறந்த ஒழுக்கக் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தி, வெற்றிகண்ட ஒரு ஆசிரியராக வரதராஜா அவர்களை நான் பார்க்கிறேன்.



கல்விக்கு முதற்படி ஒழுக்கம் என்பதை நினைவில் நிறுத்தி மாணவர்களின் கல்விக்குப் பல பணிகள் ஆற்றிவருவது பாராட்டிற்குரியது. தொடர்ந்தும் கணித பாடத்தை ஒரு மகிழ்ச்சியான பாடமாக மாணவர்கள் விரும்பிப் படிப்பதற்கு தங்களைப் போன்றவர்கள் மேலும் இணைந்து பலருடன் பணியாற்ற வேண்டும் என்பது பலரது விருப்பம்.

அகவை அறுபதைக் கொண்டாடும் தாங்கள் மேலும் நீண்டகாலம் நலமுடன், வளமுடன் கல்விப்பணியாற்ற எனது வாழ்த்துக்கள் பல.

**பொ. அருணகிரிநாதன்,**

*பிரதிக்கல்விப் பணிப்பாளர், யாழ் வலயம்.*

# A HEART FELT MESSEAGE FROM A FORMER RETIRED ENGLISH TEACHER OF THIS INSTITUTION



I Consider this a great privilage and honour to say a few words of message on the occasion of the "Diamond Jubilee celebration of my close associate' Varathan' whom I have had acquaintance with for over 35 years .

Varathan is a class by himself in adiministration. No one can denyit. A typical example is his institution "The Express Institute"

Looking back 35 years, I remeber how he was so involved in administering his institution. He was only 25 then. I Started my tuition career at his institution in 1981 with some breaks in between due to two or three displacements of ours. What amount of hardship he underwent during the time. He was lika "Trojan" Clearing all those hurdles and now he is in his sixtienth year celebrating the "Diamond Jubilee Celebration"

He is a strict disciplinarian who insists on punctuality. He still accomplishes his tasks skilfully and excels in all duties and activities associated with administration. Aprat from his great capabilities as an administrator his a teacher par - excellence in mathematics. He gives his students comfort, love and care.



"Never say die" is his moto.

May his selfless service continue for many more years to come with all the blessings from the Almighty Ambal is my earnest wish and prayers.

"LONG LIVE VARATHAN!"

**S.K. Mahalingam**
*Rtd. English Teacher*
*38/1, Kachcheri East Lane,*
*JaΓna.*

# வாழ்த்துச் செய்தி



எக்ஸ்பிறஸ் கல்வி நிறுவனத்தின் முதல்வரும் பிரபல கணித ஆசானுமாகிய திரு. த. வரதராஜா அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

நான் கணித பாட உதவிக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய காலத்தில் மிகச் சிறந்த கணித ஆசிரியராகப் பணியாற்றியவர். "பயிற்சி உயர்ச்சி தரும்" என்ற கூற்றுக் கிணங்க, நிறையப் பயிற்சிகள் வழங்கி மிகுந்த கண்டிப்புடன் அத்தனை மாணவர்களையும் அவற்றைச் செய்யவைத்து உயர்ச்சி பெற வைத்தவர்.

கோப்பாய்ப் பிரதேசத்திலே எக்ஸ்பிறஸ் இன்ரிரியூட்டை ஆரம்பித்து அன்று முதல் இன்றுவரை மிகவும் கட்டுக்கோப்புடன் நிறுவனத்தை நிர்வகித்துப் பெருமை பெற்றவர். மாணவர்களின் வளர்ச்சியில் மிகவும் கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டவர். நிறுவனத்திற்கு மாணவரதும் ஆசிரியர்களதும் ஒழுங்கான வரவு மிகவும் முக்கியமானது என்பது அவரது சிந்தனையாகும். கோப்பாய்ப் பிரதேசத்திலும் அயற்பிரதேசத்திலும் வாழ்ந்த பல நூற்றுக்கணக்கான மாணவர்களிற்காகப் பல ஆண்டுகளாக அரும்பணியாற்றி அவர்களைச் சிறப்பாக வாழவைத்த பெருமை இந் நிறுவனத்திற்குரியது. "சிறந்த ஆசிரியர் சிறந்த நிர்வாகி" என்பதை மெய்ப்பிக்கும் வகையில் நிறுவனத்தை நிர்வகித்துக் கொண்டிருக்கும் திரு. த. வரதராஜா அவர்களின் சேவை பாராட்டுக்குரியதே.



1991ஆம் ஆண்டு யா/கோப்பாய் மகாவித்தியாலயத்தில் முதன் முதலாக கணித மூலவளநிலையம் ஒன்று என்னால் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து 40க்கும் மேற்பட்ட பாடசாலைகள் கணித மூலவள நிலையங்களை தமது பாடசாலைகளில் அமைப்பதில் ஆர்வம் காட்டின. ஆனால், ஒரே ஒரு தனியார் கல்வி நிறுவனம் தான் தமது பிள்ளைகள் பயன்பெறும் வகையில் தமது நிறுவனத்திற்கென கணித மூலவள நிலையம் ஒன்றை அமைத்துப் பெருமை பெற்றது.

தன்னிடம் வரும் ஒவ்வொரு மாணவரதும் கல்வியிலும் ஒழுக்கத்திலும் தனிக் கவனம் செலுத்தி ஆசிரியர்கள் நலம் பேணி பெற்றோர் சமூகத்தின் மதிப்பைப் பெற்று செழிப்புடன் மிளிரும் எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டின் முதல்வர் திரு. த. வரதராஜா அவர்களின் எதிர்காலம் சிறக்கவும் நிறுவனம் மேலும் சிறப்படையவும் வாழ்த்துகின்றேன்.

**திருமதி அ. வேதநாயகம்,**

*ஓய்வுநிலை வலயக்கல்விப் பணிப்பாளர், யாழ் வலயம்.*

# மனிதருள் மாணிக்கம்



இன்று அறுபது அகவையில் மணிவிழாக்கொண்டாடும் வரதன் ஆசிரியர் எனது பால்ய நண்பர். அவரது மாணவப்பருவம் எப்படியெல்லாம் சிறந்த கணித ஆசானாக மிளிரப் போகின்றார் என்பதை அப்போதே பறைசாற்றிவிட்டது. சகல பாடங்களிலும் முதல் மாணவராகத் திகழ்ந்தாலும் கணித பாடம் அவருக்கு கனிவினைக் கொடுத்தது. தானாகப் பயிற்சிகளை மேற்கொள்வது அவரது இயல்பு.




"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

என்று வெற்றி வேற்கைப் பாடல் வரதன் ஆசிரியருக்கு மட்டுமே மிகப் பொருந்தும். கல்வியில் மட்டுமன்றி, இணைபாடவிதான செயற்பாடுகளிலும் முன்னணி மாணவரா கத் திகழ்ந்த அவரது மாணவப்பருவத்தை நான் இப்போது மீட்டுப் பார்க்கின்றேன்.; பெருமிதம் அடைகின்றேன்.

ஆசிரியப் பணியில் அவர் இணைந்த காலங்கள், அவரது கற்பித்தல் நுட்பங்கள் யாவும் கல்விச் சமூகம் நன்கறியும். தன்னம்பிக்கை, தற்துணிவு, பிரச்சினைகளை விடுவிக்கும் திறன், சிறந்த ஆளுமை, ஆலோசனைகளில் சிறந்த வழிகாட்டி, வெளிப்படாத அவரது ஆழமான

அன்பு எனப் பல்வேறு இயல்புகள் வரதன் ஆசிரியரிடத்தில் நிறைந்து, பொதிந்து, மறைந்து உள்ளன. அவையாவும் எனக்கு நன்கு தெரியும்.

மணிவிழாக் கொண்டாடும் வரததீபம் இன்னும் பல விழாக்களைக் கொண்டாட வேண்டும். அதுவே எனது பிரார்த்தனையும் இறை வேண்டுதலுமாகும். அவர் கட்டி எழுப்பிய "எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்" விரைவில் பொன்விழாக் காண உள்ளது என்ற செய்தி என் காதுகளுக்கு எட்டிய போது நான் அடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை"

என்ற வள்ளுவர் வாக்கினை வரதன் ஆசிரியர் உள்வாங்கி மாணவச் செல்வங்களிற்குச் சேவையாற்றி வருகின்றார். அவர் சேவை வளர, மேலோங்க மென்மேலும் புகழ் பரவ என் வாழ்த்துக்கள்.

இன்று எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டால் மட்டுமே கோப்பாய் - இருபாலை என்ற கிராமங்கள் புகழ்பெறுகின்றன. பண்டைய புலவர்கள் தமது பெயரையும் தாம் வாழ்ந்த ஊரின் பெயரையும் குறிப்பிடுவதை இலக்கியங்களில் காண்கின்றோம். ஆனால், வரதன் ஆசிரியர் இதற்கு விதிவிலக்கானவர், தன்னாலும், தன் நிறுவனத்தாலும் ஊரின் பெருமையைப் பறைசாற்றி யுள்ளார்.

நண்பன் வரதன் ஆசிரியர் நூற்றாண்டு விழாவினையும் மிகச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்பதை இந் நேரத்தில் மன மகிழ்ந்து வெளிப்படுத்தி எல்லாம் வல்ல இருபாலை கற்பக விநாயகர் அவரோடு துணை நிற்பார் என்று வேண்டி வாழ்த்தி அமைகின்றேன்.

**வே. க. கணபதிப்பிள்ளை,**
*ஓய்வுநிலை அதிபர்,*
*கோப்பாய் ஆசிரிய கலாசாலை.*



# வாழ்த்துச் செய்தி




கணித ஆசான் திரு. த. வரதராஜா அவர்களின் மணிவிழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன். திரு. வரதராஜா அவர்கள் கற்பித்தலில் மிகச் சிறந்த ஆசான் என்ற எல்லைக்கோட்டோடு நின்று விடவில்லை. சிறந்த நிர்வாகத்திற்குரிய அத்தனை ஆளுமைக் கூறுகளுக்கும் அவர் சொந்தக்காரனாக விளங்குகின்றார்.

எக்ஸ்பிறஸ் என்ற கல்வி நிறுவனம் தனியார் கல்வி நிறுவனங்களுக்கெல்லாம் முன்னுதாரனம் என்று போற்றும் அளவில் ஆசிரியர் வரதனின் ஆளுமை கொண்டுள்ள உன்னதம் உணரப்படும். கற்றல், செயற்பாடு, ஒழுக்கம், கட்டுப்பாடு என்ற பண்பாட்டுக் கூறுகளை மாணவர்களிடம் வளர்க்க வேண்டும் என்பதில் அவர் மிகுந்த அக்கறையோடு இருந்தார். அதன் நிமிர்த்தம் அவரிடம் இருந்த கண்டிப்பு அவரின் இலக்கை அடைய வைத்தது.

ஆசிரியர் வரதனின் கல்வி நிறுவனத்தில் தமது பிள்ளைகள் கற்பதை பெற்றோர் விரும்பினர் என்பதோடு, பெற்றோர்கள் எதை எதிர்பார்த்தனரோ அந்த எதிர்பார்ப்பைத் தனது கல்வி நிறுவனத்தினூடு ஆசிரியர் வரதன் அமுல்ப்படுத்தினார். அதுவே அவரின் மிகப் பெரும் பலமாக இருந்தது.

யாழ்ப்பாணத்தின் கல்விக்கு திரு. த. வரதராஜா ஆற்றிய - ஆற்றி வரும் அளப்பரிய சேவைக்கு தமிழ் மண் என்றும் நன்றி கூறிக் கொள்ளும். ஏகப்பட்ட மாணவர்களின் மரியாதைக்குரிய ஆசானாக விளங்கும் திரு. வரதனின் மணிவிழா நன்னாளில் அவரை வாழ்த்துகின்றோம். அவருக்கு எல்லா நலனும் கிடைக்க இறைவனின் திருவருளை வேண்டுகின்றோம்.



**நல்லையா விஜயசுந்தரம்,**

*பிரதம ஆசிரியர், வலம்புரி நாளிதழ்.*

# நூற்றாண்டு பணி செய்ய வாழ்த்துகின்றேன்



யாழ்ப்பாண மண்ணில் மகத்தான கல்விப் பணியாற்றிக் கொண்டிருக்கும் தம்பிப்பிள்ளை வரதராஜா அவர்களின் மணிவிழாவைக் கொண்டாடும் முகமாக வெளியிடப்படும் மணிவிழா மலருக்கான வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். மணிவிழா நாயகனையும் அவரால் சிறந்த முறையில் நடத்திவரும் எக்ஸ்பிறஸ் இன்ரிரியூட்டை யும் நான் நீண்டகாலமாக அறிவேன். பாடசாலையிலும் சரி, கல்வி நிறுவனத்திலும் சரி சிறந்த கற்பித்தலையும், நிர்வாகத்தையும் நடத்திவரும் தன்நிகரில்லா ஓர் ஆசானாக விளங்கு பவர் எனக் கூறினும் மிகையாகாது.

யாழ். மண்ணில் இற்றைக்கு நாற்பது வருடங்களுக்கு மேலாக இயங்கி வரும் கல்வி நிறுவனமான 'எக்ஸ்பிறஸ்' ஒரு தனித்துவம் மிக்க கல்வி நிறுவனமாக இயங்கி வருகிறது. ஆரம்பக் காலங்களில் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் இருந்து வந்து மாணவர்கள் கல்வி கற்றார்கள். இதனால் இக் கல்வி நிறுவனத்தின் புகழ் பலராலும் அறியப்பட்ட தொன்றாகும். சிறந்த கல்விமான்களை மட்டுமல்ல, சிறந்த ஒழுக்கமுள்ள மனிதர் களையும் உருவாக்கிய ஒரு நிறுவனமாகவும் விளங்குகிறது. எனவே, இவ்வாறான புகழைப் பெறுவதற்கு தன்னையே அர்ப்பணித்தவர்தான், இன்று மணிவிழாக்காணும் மணிவிழா நாயகன் வரதராஜா அவர்கள்.

வரதன்சேர் என மாணவர்களால் அழைக்கப்பட்டு வரும் இவர், கணித பாடத்தைச் சிறந்த முறையில் பல்வேறு உத்தி முறைகளைக் கையாண்டு கற்பித்து மாணவர் மனங்களில் ஆழ வேரூன்றி இருக்கும் ஒருவராகவும் விளங்குபவர். இவர் தனது நிறுவனத்தின் மூலம் கல்வி மட்டுமல்ல சிறந்த விழுமியப் பண்புகளை வளர்க்கும் முகமாக பல நிகழ்வுகளையும் நடத்திவருவது, அனைவரும் அறிந்த விடயமாகும். இன்று நவீன வசதிகளுடன் கூடிய மாணவர்கள் விரும்பிக் கற்கக் கூடிய, கட்டிடத் தொகுதிகள் அமைக்கப்பட்டு கவின் நிலை ஆக்கப்பட்டுள்ளன. இது இன்றைய தலைமுறையினருக்கு ஒரு வரப்பிரசாதமாகும். அத்துடன், மாணவர்களுக்கு வேண்டிய கற்றல் உபகரணங்கள், போக்குவரத்து வசதிகள் என்பவற்றையும் சிறந்த முறையில் வழங்கி வருகின்றார். இவற்றை எல்லாம் பார்க்கும் பொழுது இன்று ஓர் அரசாங்க பாடசாலையிலும் பார்க்க கல்விப் புலத்திலே ஒரு சிறந்த சேவையை செய்து வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகவே, இவ்வாறான உன்னத சேவையினைச் செய்து இன்று மணிவிழாவினைக் கொண்டாடிக்கொண்டிருக்கும் வரதராஜா அவர்கள், இந் நிறுவனத்தின் வெள்ளிவிழா மாணிக்கவிழாவினைக் கொண்டாடியதைப் போல் பொன்விழாவையும், மணிவிழாவை யும் கொண்டாட வேண்டும். அதற்கு எல்லாம் வல்ல இறைவன் அருள் வேண்டி மணிவிழா நாயகனை வாழ்த்தி அமைகின்றேன். வாழ்க வளமுடன்.

**S. வேலழகன்**

*அதிபர், யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, கோப்பாய்.*

# மணிவிழா வாழ்த்து



யாழ்ப்பாணத்தின் கல்விச் சிறப்பிற்கு உறுதுணையாக நின்று செயலாற்றுபவை தனியார் கல்வி நிறுவனங்களாகும். பல்வேறு விமர்சனங்களையும் தாங்கிநின்று சளைக்காது பணிபுரியும் தொண்டு நிறுவனங்களாகப் பிரகாசிக்கும் இந் நிறுவனங்களில் முன்னணியில் வைத்து எண்ணப்படக் கூடியவ வரிசையில் இடம் பிடிக்கும் ஓர் நிறுவனம் தான் இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டாகும்.

கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக இந்நிறுவனத்தைக் கட்டமைப்புடன் வழி நடத்தியவர்தான் கணித ஆசான் திரு. த. வரதராஜா அவர்கள். அரச கல்லூரிகளுக்கு நிகராக கல்வியுடன் ஒழுக்கத்தையும் போதிக்கும் இடமாக எக்ஸ்பிறஸ் திகழ்வதற்கு அதன் முதல்வர் கணித ஆசிரியராக இருப்பதும் ஓர் காரணமென்றால் அது மிகையாகாது. இப்பிரதேச மாணவர்களின் கல்விச் சிறப்பிற்கு கைகொடுத்து உதவிய கணித ஆசிரியரின் மணிவிழாவை செய்ந்நன்றி மறவாமல் பிரதேச மக்கள் ஒன்றிணைந்து கொண்டாடுவது அனைவராலும் பாராட்டப்பட வேண்டிய ஒன்று.

தொடர்ந்தும் ஆசிரியர் வரதராஜாவின் பணி சிறக்கவும் எக்ஸ்பிறஸ் வளரவும். எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.



**மு. ரவிச்சந்திரன்**

*அதிபர், யா/அத்தியார் இந்துக் கல்லூரி.*

# பல்லாண்டு சேவை செய்து வாழ்க



"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற வள்ளுவர் வாக்கிற் கிணங்க, கல்வி வழங்கல் என்னும் செங்கோலைக் கையில் ஏந்திச் செங்கோலோச்சும் வரதராஜனை அறியாதவர் இல்லை. வவுனியா கன்னியர்மடம் கல்லூரியில் இருந்து இவரிடம் கணிதம் கற்றுத் திறமையான இடங்களில் இன்று அமர்ந்திருப்பவர் முதல் யாழ். மத்திய கல்லூரியில் இவரது ஆக்கத்தில் வளர்ந்தவர் வரை எல்லோரும் இவரது தேர்ச்சி மிகு பணிக்கு எடுத்துக் காட்டாவர்.

சாதாரணமாக வரதராஜா என்பவரை விட, எக்ஸ்பிறஸ் வரதன் என்றால் எல்லோரும் அறிவர். கணிதம் என்றால் வரதன்; வரதன் என்றால் கணிதம் என்றாலும் மிகையாகாது. அவரது வெற்றிக்குக் காரணம் கட்டுப்பாடான வகுப்பறை முகாமைத் துவம் என்பதே அடிப்படை. நேரமுகாமையைப் பலருக்குக் கற்றுக் கொடுத்த பெருமையும் இவருக்குண்டு.

இந்த வகையில், ஆண்டுகள் வேகமாக ஓடி மணிவிழாவை அண்மித்து விட்டமை ஆச்சரியத்துக்குள்ளாக்குகின்றது. ஆயினும், மனநிறைவான சேவையினை நாட்டுக்கு வழங்கிய பெருமையுடன் அவர் இணைந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதே.

அவரும், அவரது குடும்ப உறுப்பினர்களும் இன்னும் பல்லாண்டுகாலம் சேமமுடன் வாழ்ந்து சேவையாற்றிட இறைவனை வேண்டி வாழ்த்தி அமைகிறேன்.


நன்றி

**நா. இரட்ணசிங்கம்,**

*ஆசிரிய நிலைய முகாமையாளர்.*



# மணிவிழா சிறக்க மத்தியின் வாழ்த்துக்கள்



கால்கோள் விழாவிலிருந்து மிலேனியம் விழாவரை மனிதர் கொண்டாடும் விழாக்கள் பலவாகும். அவற்றுள் மணிவிழா மகத்தானதாகும். அறுபது வயதைப் பூர்த்தி செய்யும் அனைவரும் கொண்டாடும் விழா அல்ல அது. தாமே தமக்குக் கொண்டாடும் விழாவும் அல்ல. கொண்டாடப்பட வேண்டியவர்களென்று பொதுமக்கள் கருதுவோர்க்கு அம்மக்களாலே எடுக்கப்படும் விழாதான் அது. Express Institute அதிபரும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் முன்னை நாள் கணித ஆசானுமாகிய திரு. த. வரதராஜாவின் மணிவிழா மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

திரு. த. வரதராஜாவுக்கு மணிவிழா எடுப்பதனால் அவருக்குப் பெருமை ஏற்படாது. அவ்விழாவே பெருமையடைகிறதெனக் கருதலாம். ஒரு காலத்தில் மிகவும் பின்தங்கிப்போயிருந்த யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கணிதத்துறை, ஒழுக்காற்றுத்துறையென்பன அமரர் இராஜதுரை, திரு. த. வரதராஜா அவர்களின் கூட்டினால் நிமிர்ந்தெழுந்தன. சீரியநோக்கு, சிறந்த சிந்தனை, தெரிந்து வினையாற்றும் பண்பு, சிறு பிழையையும் ஏற்க முடியாத கண்டிப்பு ஆகிய பல நிர்வாகத்திறமைகளின் கூட்டிணைந்த உருவமே திரு. த. வரதராஜா எனலாம். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவ முதல்வர் சபையும், அறிவிப்பாளர் கழகமும், இடைநிலைப் பிரிவின் கணித பாடத் தேர்ச்சியும் பீடும் பெருக்கும் பெற்று நீடுயர்ந்து வளரக் காரணமாக இருந்த இவ்வாசானின் வாசல் தலமும் தனியார் கல்வி நிலையமும் ஒன்றாகவே அமைந்ததால் பெற்றோரின் நம்பிக்கைக்குரிய நிறுவனமாக அவரது நிறுவனம் தனிமுத்திரை பதித்துள்ளது.



மாணவர்க்கு நல்வழிகாட்ட விரும்பும் பெற்றோர் அவர் வரவேண்டாம் என்று தடுத்தாலும் தமது பிள்ளைகளை அவரது நிறுவனத்திலேயே சேர்க்கிறார்கள் என்றால் கல்வி மட்டுமன்றி, நற்பழக்க வழக்கமும் மாணவர்க்கு அவசியமென்ற கருத்தியலின் தாக்கமேயாகும். மணிவிழா நாயகன் நூற்றாண்டு விழாக் காண வாழ்த்துகின்றேன்.

**S.K. எழில்வேந்தன்**
*அதிபர், யா/மத்திய கல்லூரி.*

# மணிவிழா நாயகனுக்கு மனமுவந்து ஆசிகள்...




கணிதத்துறை பேராசானாக அறுபது ஆண்டுகள் பூர்த்தி செய்யும் எனது குரு திரு. த. வரதராஜா அவர்களின் மணிவிழா மலருக்கு ஆசி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். தனது வாழ்நாளில் பெரும் பகுதியை யாழ்ப்பாண மாவட்டத்தின் கல்வி வளர்ச்சிக்காக அர்ப்பணித்து "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" எனும் பொன் மொழிக்கேற்ப கணித பாடத்தைக் கவர்ச்சிகரமாகக் கற்பித்துத் தனி முத்திரை பதித்த பேராசானை வாழ்த்துகிறேன்.

கட்டுப்பாடு, ஒழுக்கம், கடமை தவறாமை என்பனவற்றைத் தனித்துவ அடையாளமாகவுடைய எங்கள் ஆசான் தலை சிறந்த நிர்வாகி. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி போன்ற பிரபல தேசிய பாடசாலைகளில் இடைநிலைப் பிரிவின் கணிதத் துறை முன்னேற்றத்திற்கும் ஒழுக்க மேம்பாட்டிற்கும் அத்திபாரமிட்ட பெருமைக்குரியவர். அவர் நிர்வகித்து நடத்தி வரும் Express Institute "நல்ல தொரு குடும்பம் பல்கலைக் கழகம்" பாடலை ஞாபகமூட்டுகிறது.

அத்தகு கல்விச் சாலையில் ஆயிரம் ஆயிரம் மாணவர்கள் ஆண்டாண்டு காலமாகக் கற்று உயர்ந்திருக்கிறார்கள். அவர்களில் நானும் ஒருவன் என்பதைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். அது மட்டுமன்றி இந் நிறுவனத்தில் சில ஆண்டுகள் இடைநிலைப் பிரிவிற்கு ஆசிரியராகக் கற்பித்தமையையும் பெரும் பேறாகக் கருதுகிறேன்.

தனியொரு மகுடமாக, தனியொரு கல்விநிறுவனமாக, தனியொரு பாடசாலையாக, தனியொரு கலைக் கூடமாக விளங்கும் Express Institute பல தனி முத்திரைகளைப் பதிப்பித்துள்ளதென்றால் இந்நிறுவனத்தை இல்லமாகக், கோவிலாகப் போற்றி வாழ்ந்து வந்துள்ள இவ் வரதராஜாவின் அர்ப்பணிப்பான சேவையே இதன் அடித்தளமாகும் இத்தனை நினைவுகளைக் கண்டு எத்தனையோ பேருக்கு வழிகாட்டியாக விளங்கிக் கொண்டிருக்கும் கணித பேராசான் திரு. த. வரதராஜா அவர்கள் நூறாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன்.



**திரு. சி. திரிகரன்**

*அதிபர், யா/ஊரெழு கணேச வித்தியாசாலை.*


# வாழ்க நீடூழி, வளர்க பல்லாண்டு



இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டின் அதிபரும், சிறந்த கணித ஆசானும், நண்பனுமான திருவாளர் தம்பிப்பிள்ளை வரதராஜா அவர்கள் இன்று மணிவிழாக் காண்பதில் நானும், எனது பலாலி ஆசிரியர் கலாசாலை சமூகத்தினரும் பெருமகிழ்வடைவதோடு இறைவனுக்கு நன்றிகள் பலவும் நவில்கின்றோம்.

எமது பலாலி ஆசிரியர் கல்லூரியின் பழைய ஆசிரிய மாணவன் என்ற ரீதியில் இவரை வாழ்த்துவதில் உரிமையும், உடையவர்களாக இருக்கின்றோம் என்பதில் அளவில்லா மகிழ்ச்சியும், பெருமிதமும் கொள்கின்றோம்.

மேலும் இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டை கடந்த 1973இல் ஆரம்பித்து, பல போர்ச் சூழல்கள் பொருளாதார கஸ்ரங்கள், அரசியல் குழப்பங்கள், மற்றும் பல்வேறு இடர்கள் தடைகள் போன்றவற்றை எதிர் கொண்டு, அவற்றை வீரத்தோடு வெற்றி கொண்டு இருபாலை, கோப்பாய்ப் பிரதேச மக்கள் மட்டுமன்றி யாழ்ப்பாணம், அதற்கு வெளியேயும் பல அரிய பெரிய கல்விச் சேவைகளை இன்றுவரை வழங்கி, சமுதாயத்தை கல்வியிலும் மட்டுமின்றிக் குறிப்பாக ஒழுக்கக் கட்டுப்பாடுகள், பண்பாடுகள் என்பவற்றிலும் நேரிய வழியிலும் கொண்டு செல்லும் திரு. த. வரதராஜா அவர்களுக்கு நன்றிகள் பல தெரிவிப்பதோடு, பல ஆண்டுகள் சேவைகள் பல புரிந்து உடல் நலத்துடனும், மனத்தைரியத்துடனும் வாழ்ந்து சரித்திரத்தில் இடம் பெற வேண்டும் என்பதில் ஆவலாக இறைவனை வேண்டுகின்றோம்.



**ஆ. இக்னேசியஸ்**

*அதிபர், பலாலி ஆசிரியர் கலாசலை,*


*திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.*

# மணிவிழா நாயகனை மனதார வாழ்த்துகின்றேன்



அறுபதாவது அகவையில் கால்பதிக்கும் எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டின் முதல்வரும், கணித ஆசானுமாகிய திரு. த. வரதராஜா அவர்களது பணிகளைப் பாராட்டி வெளிவரும் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் அகமகிழ் வடைகிறேன்.

இவர் இருபாலை "எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்" எனும் தனியார் கல்வி நிறுவனம் ஒன்றை உருவாக்கி நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் தரமான கற்பித்தலுடன், சிறந்த ஒழுக்க நெறிகளையும், மிகுந்த கட்டுப்பாட்டுடனும் முன்மாதிரியான நிறுவனமாக நிர்வகித்து வரும் அவரது ஆற்றலையும் ஆளுமையையும் விதந்து கூறாமல் இருக்க முடியாது. பிரதேச அர்ப்பணிப்போடு அவர் இயக்கி வரும் கல்வி நிலையம் கோப்பாய் பிரதேச மாணவர்களுக்குப் பெருங்கொடை என்றே கூறலாம்.



மாணவர் நலனில் அக்கறை கொண்ட திரு. வரதராஜா அவர்கள், எத்தகைய தீர்மானத்தை எடுப்பதிலும் அதனை நடைமுறைப்படுத்துவதிலும் தனியான ஆளுமை யும் ஆற்றலும் இருப்பதை மறுக்கமுடியாது. அவரது இக்கல்வியுலக சேவையானது எதிர்காலத்திலும் தொடர வேண்டுமென வாழ்த்துவதுடன், அவர் தனது குடும்பத்துடன் சீரோடும் சிறப்போடும் பல்லாண்டு காலம் வாழ மனதார வாழ்த்துகின்றேன்.

**திருமதி சாந்தினி வாகீசன்**

*அதிபர், யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்.*

# வாழ்க வளமுடன் பல்லாண்டு



தனியார் கல்வி நிறுவனங்களில் ஒரு முன்னோடி "எக்ஸ்பிறஸ்" கல்வி நிறுவனம் என அன்றிலிருந்து இன்றுவரை அந்த நிறுவனத்திற்கு ஒரு முத்திரை உண்டு என்றால் அதற்குக் காரணம் அந்த நிறுவன இயக்குனரும் ஆசிரியருமான வரதரே. அந்த நிறுவனத்தின் ஆரம்ப காலத்தின் ஆசிரியராகக் கடமை புரிந்த காரணத்தால் அன்றி லிருந்து அந்த நிறுவனத்தின் பல பரிமாண வளர்ச்சிகளை என்னால் காணமுடிந்தது. இந்த வளர்ச்சிகள் அனைத்துக்குள்ளும் வரதரது பெரு முயற்சி இருந்தமையைக் காணமுடிகின்றது. கட்டிட வளம், ஆசிரிய வளம், சிறந்த முகாமைத்துவம் என எந்த நோக்கிலும் இந்த நிறுவனம் ஏனைய நிறுவனங்களிற்கில்லாத தனித்துவச் சிறப்பைப் பெறுகின்றது என்றால் அதுவும் வரதரின் பெரு முயற்சிக்குக் கிடைத்த வெற்றி ஆகும்.

ஒரு காலத்தில் கல்விப்புலத்தில் உள்ளவர்கள் தனியார் கல்வியையும், நிறுவனங் களையும் தேவையற்றதாக விமர்சித்த வேளையிலும், விமர்சனங்களுக்கு உட்படுத்தப் படாத கல்வி நிறுவனங்களில் ஒன்றாக "எக்ஸ்பிறஸ்" விளங்கியது. என்றாலும் அதுவும் அவரின் சாதுரியமான செயற்பாடுகளாலேயே ஆகும். பாடசாலை ஆசிரிய தொழிலிலி ருந்து தன்னை விலக்கிக் கொண்டாலும் தனியார் கல்வி நிலை ஆசிரியராக இன்றும் தன் பெயரைத் தக்கவைத்து அத்தொழிலைப் புனிதமாகவும் கண்ணியமாகவும் நடத்திவரும் பண்பு அவருக்கே உரிய தனித்துவம். அரச உத்தியோகம் என்பது கிடைத்தால் குறிப்பிட்ட காலம் வரை அதிலே இருந்து ஓய்வு பெறவேண்டும் என்ற நியதியுண்டு. ஆனால், ஒரு தனியார் கல்வி நிறுவன ஆசிரியர் மாணவர்களால் விரும்பப்படும் வரையில் அந்தப் பணியைத் தொடரமுடியும். அந்த வகையில் அவரது 60 அகவையையும் தாண்டிய பின்னும் தொடரும் ஏனெனில், அவர் மாணவர் மனங்களில் மறக்கப்படமுடியாத ஓர் ஆசிரியர் என்பதனை அவர் நிறுவனத்தின் வளர்ச்சி கோடிட்டுக் காட்டுகின்றது. பொருளைக் கொடுத்தோ வேறு எதைக் கொடுத்தோ வாங்க முடியாதது தனியார் கல்வி நிலைய ஆசிரியப்பதவி. மாணவர்கள் மனங்கொடுத்தால் மட்டுமே அதைப் பெறமுடியும். அதனைப் பெறக்கூடிய பாக்கியம் உள்ள சிலரில் வரதரும் ஒருவர். எத்தனையோ பேர் வந்தார்கள் போனார்கள்; கற்பித்த காலங்கள் அவர்களைப் பொறுத்தமட்டில் குறைவானது. ஆனால் இந்த ஆசிரியர் கற்பித்த காலத்திலிருந்து இன்றுவரை மங்காத புகழுடன் இருக்கின்றதைப் பார்க்கின்ற பொழுது அவரது ஆளுமை, திறமை என்பவை வெளிப்படுத்துகின்றன. இங்ஙனமாக சிறந்த முகாமையாளராக, ஆசிரியராக, மனித நேயம் மிக்க மனிதராக வாழ்ந்து கொண்டிருக்கும் வரதர் அவர்கள் மணிவிழாக் காண்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். மணிவிழாமட்டுமல்ல பவள விழா அமுதவிழா கண்டு பல்லாண்டு வாழ வாழ்த்துகிறேன்.

**S. அருள்நங்கை**

*அதிபர், புதிய உயர்கல்லூரி.*

# கலங்கரை விளக்காகக் காலமெல்லாம் வளமுடன் வாழ்க...



மனிதருள் மாணிக்கமாகத் திகழ்ந்து வரும் இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் நிறுவனத்தின் இயக்குனரும் கணித ஆசானுமாகிய உயர்திரு. தம்பிப்பிள்ளை வரதராஜா அவர்களின் மணிவிழா நன் நாளில் எமது யா/கோப்பாய் மகா வித்தியாலயம் சார்பாக அவரை வாழ்த்தி நிற்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

"தோன்றிற் புகழோடு தோன்றுக" எனும் திருவள்ளுவரின் வாக்கிற்கு அமைய இருபாலை எனும் நன்நகரிலே 1955.03.01ஆம் திகதி தோற்றம் பெற்றார். இவர் தமது ஆரம்பக்கல்வியினை எமது கோப்பாய் மகாவித்தியாலயத்தில் கற்றுக்கொண்டமையினால் எமது மகாவித்தியாலயமும் பெருமை கொள்கின்றது. இடை நிலைக் கல்வியினை யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் கற்று திறமைச் சித்திகள் பெற்றுக் கொண்டார். உயர்கல்வியினை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் கற்று உயர்ச்சி பெற்றுக் கொண்டார். கல்வியில் தொடர்ந்த இவர் தேசிய கல்வி நிறுவகம் ஊடாக கல்விமாணிப்பட்டம் பெற்றுக் கொண்டு ஓர் கல்விமானாகத் திகழ்ந்து வருகின்றார்.



கணித பாடத்தையே தமது விருப்பத்திற்குரிய பாடமாகத் தேர்ந்தெடுத்துக் கற்றுத் தேர்ந்தமையினால் இன்று "கணித ஆசான்" என்னும் பெருமைக்குரியவராகத் திகழ்ந்து வருகின்றார். பலாலி ஆசிரிய கலாசாலையில் கணித பாடத்தில் பயிற்சியினை மேற்கொண்ட போது சிறந்த ஆசிரிய மாணவனென அதிபராலும், ஆசிரியர்களாலும் பலமுறை பாராட்டைப் பெற்றுக் கொண்டவராகத் திகழ்ந்தார்.

புனிதமான ஆசிரியத் தொழிலினைத் தேர்ந்து கொண்டதனூடாகத் தமது முதல் நியமனத்தினை யா/வாதரவத்தை வித்தியாலயத்திலே கற்பிக்க ஆரம்பித்தார். இவரது காலத்தில் கற்ற மாணவர்கள் இன்றும் புகழுடன் திகழ்ந்து வருவதனூடாக இவரது சேவையின் ஆரம்பமே ஒரு மைல்கல்லாக அமைந்துள்ளது எனலாம். பின்னர் சிறிது காலம் யா/நீர்வேலி றோ.க.த.க பாடசாலையில் கற்பித்தல் பணியினை மேற் கொண்டிருந்தவேளையில் இவரின் திறமையினை உணர்ந்து கொண்ட யா/மத்திய

கல்லூரி அதிபர் உடனடியாகத் தம்முடன் இணைத்துக் கொண்டார். இங்கு கணித பாடம் கற்பித்தலுடன் நின்று விடாது மாணவர்களின் ஒழுக்கஞ்சார் விடயங்களில் கூடிய அக்கறை செலுத்தி வந்தார். இதன் பயனாக, ஒழுக்காற்றுத் தலைவராகவும், மாணவர் முதல்வர் சபைப் பொறுப்பாசிரியராகவும் பணிபுரிந்து மிகவும் புகழ்பூத்த ஆசிரியராகத் திகழ்ந்ததனூடாக "மத்தியின் மைந்தன்" என்று அழைக்கப்பட்டார். 2011.09.05ஆம் திகதி வரை பணிபுரிந்து ஓய்வு நிலையடைந்து கொண்டார். இவரது பணிக் காலம் மத்திய கல்லூரியின் வரலாற்றில் "பொற்காலம்" என்று வர்ணிக்கப்படுகின்றது.

தமது ஆசிரியப் பணியுடன் நின்று விடாது 1973.03.01ஆம் திகதி இருபாலையில் "எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்" எனும் தனியார் கல்வி நிறுவனத்தை ஆரம்பித்து மாணவர் களின் மேலதிக கற்றலுக்கு வழிவகுத்தார். இந் நிறுவனத்தின் இயக்குநராகவும் கணித பாட ஆசானாகவும் இருந்து மாணவர்களை வழிப்படுத்தி வந்தார். இவரது நிறுவனத்தை நாடிவந்த மாணவர்கள் அனைவரும் சித்தியடைந்து உயர்கல்விக்குச் செல்வது வழக்க மான செயற்பாடாகும். கோப்பாய் பிரதேசத்திலிருந்து மாணவர்கள் அனேகர் நகர்ப்புறங் களுக்கு நாடிச் சென்று கற்றலை மேற்கொண்டிருந்த வேளையிலே நகரப்புற மாணவர் களை கோப்பாய் பிரதேசத்திற்கு கற்றலுக்காக வர வைத்த பெருமைக்குரியவராக இவர் மட்டுமே திகழ்ந்தார் என்பது உலகறிந்த உண்மையே

கல்வி கற்பித்தல் பணியில் மட்டுமல்ல, தனது கல்வி நிறுவனத்தின் மாணவர்களின் ஒழுக்கம் சம்பந்தமான விடயங்களில் முழுமையான அக்கறை கொண்டு நெறிப்படுத்தி பெற்றோரின் நன்மதிப்பிற்குரிய நிறுவுனராகத் திகழ்ந்தார்.

தமது கல்வி நிறுவனத்தினை எங்குமில்லாதவாறு நவீனவசதிகளுடன் அமைத்துக் கொண்டார். மாணவர்களின் வகுப்பறைகள் மிகவும் கற்றல் சூழலுக்கு ஏற்றதாக அமைத்துக் கொண்டார். அவர்களுக்கான கணித, விஞ்ஞான ஆய்வு கூடங்களும் மிகவும் நேர்த்தியாகச் செயற்படுத்தப்பட்டன. முன்பள்ளி மாணவர்களையும் தமது நிறுவனத்து டன் இணைத்து அவர்களுக்கான போக்குவரத்து சேவையினையும் நடாத்தியதுடன் சிறுவர் விளையாட்டுமுற்றம் அமைத்து அவர்களின் மகிழ்ச்சியுடனான கற்றலுக்கு வழி வகுத்து உதவி புரிந்தார். மாணவர்களுக்கான மலசலகூட வசதிகளையும் தமது நிறுவனத் தினுள் அமைத்து சுகாதார வசதிகளையும் ஏற்படுத்தினார். அத்துடன், மாணவர்களுக் கான கற்றல் உபகரணங்களைக் குறைந்த விலையில் இலகுவில் பெற்றுக் கொள்வதற்கான ஒழுங்குகளும் நிறுவனத்தினுள்ளே ஏற்பாடு செய்து கொண்டுள்ளார். இவ்வாறான பல வசதிகளை உள்ளத்திலே கொண்ட கல்வி நிறுவனத்தை நிர்வகித்து வருகின்றார்.

இவ்வாறாக, தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்துப் பணிபுரிந்து வரும் உயர்திரு. தம்பிப்பிள்ளை வரதராஜா அவர்களின் மணிவிழாவின் போது அவரை வாழ்த்துவதில் நாம் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம். பாடசாலைச் சமூகம் சார்பாக பெருமையடைகின்றேன்.

T. **ஞானப்பிரகாசம்**

*அதிபர், கோப்பாய் மகாவித்தியாலயம், கோப்பாய்.*

புகழ் பூத்த கணித ஆசானும் எக்ஸ்பிறஸ் கல்வி நிறுவன அதிபருமாகிய


திரு. த. வரதராஜா அவர்கள்

அகவை அறுபது எய்தி மணிவிழாக் காண்பதையொட்டி

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி அதிபர்

செந்தமிழ்ச் சொல்லருவி ச. லலீசன் அவர்கள் வழங்கிய

## வாழ்த்து



*புன்னகை முகமும் பூத்துப்*
*பொங்கிடும் அன்பும் என்றும்*
*தன்னலங் கருதாத் தொண்டும்*
*தாய்மையாய் அணைக்கும் பண்பும்*
*என்றுமே சேர்ந்து வாழும்*
*இனியவர் வரதராஜா*
*நன்றென மணிவிழாக் காண்க*
*நாளுமே பெருமை சேர்க!*

*வியத்தகு விஞ்ஞான பாடம்*
*விளம்பவே வாய்ப்புத் தந்தீர்*
*நயத்தகு பண்பு காட்டி*
*நன்றெனப் புரந்து நின்றீர்*
*செய்தகு செய்கை வீர!*
*செம்மையாங் கணிதத் தீர!*
*உயர்ச்சியே பிறர்க்குப் பாடம்*
*உலகமே போற்றும் நாளும்!*

**ச. லலீசன்**
*பிரதி அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை.*



# மணிவிழாக் காணும் ஆசான் - கல்வித்தொண்டன்

இன்று அகவை அறுபதில் அனைவரின் பாராட்டைப் பெறும் ஆசான் உயர்திரு. த. வரதராஜாவுக்கு எல்லாம் வல்ல ஸ்ரீ வரதராஜப்பெருமானின் திருவருள் இன்றுபோல் என்றும் கிடைக்க எம் வாழ்த்துக்கள்; பிரார்த்தனைகள்!

ஆசான் வரதராஜா அரச கல்லூரிகளில் தரமான சேவையின் பின்னர், புகழுடன் ஓய்வு பெற்றுத் தம் கல்வித் தொண்டினை இருபாலை - கோப்பாயில் நிறுவிய தனியார் கல்விக் கழகமாம் Express Institute இன் மூலம் பல காலமாக ஆற்றும் தரமான பணிகளை சமூகம் நன்கு அறியும்; நலமே போற்றுகின்றது!

கனதியான, பலதரப்பட்ட, விரிவான, கல்விப் பணியில் தன் நிர்வாகத் திறனால் தரமான ஆசிரியர்கள் மூலம் எம் மாணவ மணிகளுக்கு அவர் ஆற்றும் பணிகளை சமூகம் நன்கேயறியும்; தொடரட்டும் அவர்பணி!

தன் அனுபவமும், ஆற்றலும், நிர்வாகத் திறனும் தொடர்ந்து இயங்க, "ஆய கலைகள் அறுபத்து நான்கும்" அன்னையின் கிருபை என்றுமிருக்க உயர்திரு. த. வரதராஜாவின் புனிதப்பணி தொடர எனது வாழ்த்துக்கள்! பிரார்த்தனைகள்! மேலும் வளம்பல கண்டு அவர் சேவை பல்லாண்டு தொடரட்டும்; வாழ்த்துக்கள்!

அவர்தம் கல்விப்பணியை என்றும் வாழ்த்தும்

**த. ந. பஞ்சாட்சரம்,**

(ஆங்கில பிரபல ஆசான்) ஓய்வுநிலை ஆசிரியர், நீர்வேலி.



# மாநிலம் பயனுற வாழ்பவர்



"வல்லமைதாராயோ இந்த மாநிலம்
பயனுற வாழ்வதற்கே"

என்றான் புதுமைக்கவி பாரதி. மாநிலம் பயனுறச் சிந்திப்பவர்கள், செயலாற்றுபவர்கள் யாவரும் பிறரது வாழ்த்துதலுக்கும் போற்றுதலுக்கும் தகுதியானவர்கள். அந்த வகையில், கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாகத் தொய்வின்றித் தொடர்ச்சியாக பிரத்தியேகக் கல்வி நிறுவன மொன்றைச் சீராக இயக்கி பலர் பயன்பெற வழிசெய்தவர் இன்றைய மணிவிழா நாயகர்.

இருபாலையை இனங்காட்டும் எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் இப் பிரதேசப் பிள்ளைகளுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளதோடு, தூர, இடங்களிலிருந்து பிள்ளைகளைப் பெற்றோர் அழைத்துவந்து அயலிலே வீடெடுத்துத் தங்கி பிரத்தியேகக் கல்வியைப் பெற வழி செய்தமையும் அண்மைக்கால வரலாறாகும். சிறந்த தேர்ச்சி பெற்ற கணித ஆசானாகிய அவர், கல்வியோடு கட்டுப்பாடும், ஒழுங்கும் கடைப்பிடித்த காரணத்தாலேயே பெற்றோரது நம்பிக்கையை வென்றெடுக்க முடிந்தது.

மகிழ்ச்சிகரமான கற்றலுக்கு ஏதுவாக உட்கட்டமைப்பு வசதிகள் பூரணமாகச் செய்யப்பட்டுள்ளமை, பிள்ளைகள், பெற்றோர்கள் எதிர்பார்ப்பை நிறைவுசெய்வதாக உள்ளது. கல்வியும் ஒழுக்கமும் உள்ள மாணவர் சமுதாயத்தின் மூலம் வளமான மானிட சமூகத்தை உருவாக்க முயலும் அவரது மனிதாபிமான நோக்கு மதிக்கப்படவேண்டியது. இத்தகைய சமூக அக்கறையோடு தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்துப் பணியாற்றும் திரு. வரதன் சேர் நீண்ட ஆயுளோடு தனது சமூகப் பணியைத் தொடர அவரது குலதெய்வமாகிய கற்பக விநாயகனது பாதார விந்தங்களைப் பணிந்து யாசித்து வேண்டுகிறோம்.



**இ. மருதலிங்கம்,**

*ஓய்வு நிலை விரிவுரையாளர், ஆசிரிய கலாசாலை, (நிறுவன ஆசிரியர்).*





# வாழ்க பல்லாண்டு

*ஈன்றபொழுதில் பெரிதுவக்கும் தன் மகனை சான்றோன் எனக் கேட்டதாய்*
*பெற்றெடுத்தஎம் அன்னைக்கு பெருமைசேர்த்தவன் நீகட்டியணைத்து*
*தோள் சுமந்துவளர்த்தஎம் தந்தைக்கும் புகழ் கொடுத்தவன் - நீ*
*சந்ததிக்காய் எம் சந்தோஷ வாழ்வுக்காய் சகோதரனாய் எம் மத்தியில்*
*வந்து சஞ்சரித்தவன் - நீ*
*கற்றுக்கொடுத்த உன் ஆசானைக் கனப்படுத்தி வாழ்கின்றவன் - நீ*
*பெற்ற உன் கல்வியும் அறிவும் பெருகிடவே இவ்வுலகில் - நீ*
*ஆரம்பித்த அரும்பணிகள் இன்று அவனியெல்லாம் பவனிவந்து - நீ*
*அறுபதை அண்மித்தாலும் என்றும் இருபதாய் வாழ்கின்றாய் எம்மில்*
*இதயத்தில் கல்விதனைக் கண்களென்று கனவுகளாய் காண்பவரின்*
*நினைவுகள் நிஜமாகக் கல்விக்கு வித்திட்டு விருட்சமாக்கி அவர்கள்*
*இலட்சியங்கள் நிறைவேற இரவுபகல் இல்லாமல் இன்புற்று இருந்தவன் - நீ*
*மறையாது உன் சேவை - தமிழ் மண் மீதுவாழும் வரை குறையாதுநின்*
*புகழ் - என்றும் அழியாது இவ்வுலகில் வளர - மனநிறைவோடு*
*வாழ்த்துகின்றோம் குடும்பமாக.*
*வாழ்கநீ பல்லாண்டு! வளர்க உன் சேவை நூறாண்டு!*

பரிவுகொண்ட பாசத் தம்பிமாரும், நிறைவான நேசத் தங்கைகளுடனும் இணைந்து

**அளவில்லா அன்புடன் அண்ணன்**

**திரு. திருமதி கருணானந்தராஜா குடும்பத்தினர்.**


*சவுதி அரேபியா*

# அன்புள்ள நண்பன்
# ஆசிரியர் திரு. த. வரதராஜா பற்றி
# என் மனதில் தோன்றியவை...



"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற வள்ளுவர் வாக்கிற்கு ஏற்ப 'வரதன் சேர்' சிறுவயதில் இருந்தே கல்விச் செயற்பாட்டில் இறங்கிச் சேவையாற்றிய பெருந்தகை. வரதன் என்றால் கணிதம்; கணிதம் என்றால் வரதன் என்ற பொன்மொழிக்கு ஏற்ப வாழ்ந்து வருகின்றார். சேவைகளுள், தானங்களுள் மிகச் சிறந்த தானமாகிய கல்வித் தானத்தை 40 வருடங்களுக்கு மேலாக வழங்கி வருகின்றார். நன் மாணவர்கள் ஏராளமானவர்களை உருவாக்கியவர். இன்று அவர்களை எத்தனையோ உயர் பதவியில் சேவையாற்ற வைத்துள்ளார். கல்வி தொடங்கும் முன்னர் ஒழுக்கம் கட்டுப்பாட்டையே முக்கிய நோக்கமாகக் கொண்டவர். இதனால் தான் பெற்றோர்களினது நன்மதிப்பை பெற்ற காரணத்தால், இன்றும் நிலைத்து செயற்படுகின்றார். ஒரு காலத்தில் வலி கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மூன்று ரியூசன்கள் மட்டுமே இருந்தன. அவையாவன: இருபாலை எக்ஸ்பிறஸ், புத்தூர் ஞானம்ஸ் அக்கடமி, அச்சுவேலி கமலநாதன் கல்வி நிறுவனம். இம் மூன்றிலுமே நான் சமூகக்கல்வியும் வரலாறும் என்ற பாடத்தைக் கற்பித்தேன். வரதன் மாஸ்டரிடம் இருந்து நான் பல விடயங்களைக் கற்றுக் கொண்டேன். வெளியில் பார்த்தால் கடுமையானவர் போலத் தெரியும். உள் மனதில் நல்ல அன்பும் இரக்கமும் கொண்டவர். அதனால் தான் அவர் இன்றும் பெரிய விருட்சம் போலத் திகழ்கின்றார். தம்பி வரதன் வெண்கட்டி எடுத்தால் கணிதம் கணிதமாக இருக்கும், வகுப்பும் மிக அமைதியாக இருக்கும் என ஆசிரியர்கள் பலரும் ஓய்வு பெற்ற அதிபர்களும் கூறினார்கள்;






அக்காலத்தில் (1990)க்கு முற்பட்ட காலத்தில் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் இருந்து மாணவர்கள் பெரும்பாலானோர் இருபாலை எக்ஸ்பிறஸ் ரியூட்டறிக்கு அண்மையில் வீடு வாடகைக்கு எடுத்து இங்கு கல்வி கற்ற பெருமை விசேட அம்சமாகவும் இதனால் இன்றும் வவுனியாவில் எக்ஸ்பிறஸ் என்ற நிறுவனம் தொழிற்பட்டு வருகின்றது.

ஒழுக்கம், கட்டுப்பாடு, கல்வி யூட்டல், மிளிரச் செய்தல் ஆகியவற்றில் மாணவர்களை மிளிரச் செய்த அவர், சமூகத்தில் நடைபெறுகின்ற நன்மை, தீமை, எழுச்சி ஆகியவற்றில் முன் நின்று சேவையாற்றுகின்றவர். குடும்பத்தை விட தனது நிறுவனமான எக்ஸ்பிறஸ் கல்வி நிறுவனத்தையே விரும்பி நடத்தி வருகின்ற இவர், இன்று மணிவிழாக் காண்கின்றார். இவரை வாழ்த்தி மேலும் நீண்டகாலம் வாழ கல்விச் சேவை வழங்க, சமூகத்தில் தொடர்ந்து ஒளிவிட எல்லாம் வல்ல கற்பகப்பிள்ளையாரை வேண்டி வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

**Saba Kugathasan**
Justice of Peace (Whole Island)
Rege, No. 11/09/NP/WI/127.
Puthu Valavu, Idaikkadu,
Atchuvely, Srilanka.

# வாழ்த்துச் செய்தி




திரு. தம்பிப்பிள்ளை வரதராஜா அவர்கள் 40 வருடங்களுக்கு மேல், எனது உற்ற நண்பர். தனது இளமைக் காலத்திலேயே கணித பாடத்திலே அதீத தேர்ச்சி பெற்று விளங்கினார். அதன் காரணமாகக் கணித பாடத்தை மற்றவர்களுக்கும் போதிக்க எண்ணி சிறியதாக ஒரு கல்வி நிலையத்தைத் தொடங்கி அதைத் திறம்பட நிர்வகித்து கணித பாடத்தைத் தானே போதித்து வந்தார். தற்போது Express Institute என்னும் நாமத்துடன் வடமாகாணத்திலேயே ஒரு திறமையான கல்வி நிலையமாக உயர்த்திய பெருமைக்கு அவரின் விடாமுயற்சியும் எண்ணிய கருமத்தைச் சாதித்து முடிக்கும் ஆற்றலுமே சான்றாகும்.

அவர் தனது 60ஆவது அகவையைக் கொண்டாடும் இந் நாளில் அவரை இன்னும் நீண்டநாள் இந்தக் கல்விச் சேவையைத் தொடர வேண்டி நிறை ஆயுளுடன் வாழ இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

**க. மனோகரன்,**
*முகாமையாளர்,*
*இலங்கை வங்கி, அச்சுவேலி.*





# பல்லாண்டு வாழ்க



யாழ்நகரில் இருபாலை என்ற ஊரில் தலை நிமிர்ந்து சேவையாற்றிக் கொண்டிருக்கும் கல்வி நிறுவனம் எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டாகும்.

இன்று நேற்றல்ல, இற்றைக்கு நான்கு தசாப்தங்களுக்கு மேலாக மாணவர்க்கு சேவையாற்றும் நிறுவனம் இது. இதன் அதிபர் நண்பன் வரதன்.

நானும் வரதனும் கல்வி பயின்ற காலங்களிலிருந்தே நண்பர்கள். இருவரும் ஒரே காலப்பகுதியில் கற்பித்தல் தொழிலை ஆரம்பித்தவர்கள். எங்களுடன் சேவையாற்ற ஆரம்பித்தோரில் பலர் தங்கள் சேவையை இடையே நிறுத்திக்கொண்டு விட்டனர். எங்கள் இருவரின் சேவை இப்போதும் தொடர்கின்றது. இதைத் தொடர வாய்ப்பளித்த இறைவனுக்கு நன்றிகள்.

எதிர்வரும் மார்ச்மாதம் 01ஆம் திகதி தனது 60ஆவது அகவையை தொடுகின்ற வரதனுக்கு என் மணிவிழா வாழ்த்துக்கள்.

கணிதம் கற்பிக்க எண்ணற்றோர் இருக் கிறார்கள். நேர்த்தியான முறையில் ஒழுக்கக் கட்டுப்பாட்டுடன் கண்டிப்புக்கலந்த கணிதத்தை வரதனிடம் மட்டும்தான் கற்கலாம். வரதனிடம் கல்வி கற்ற பலர் உயர்நிலைகளில் உலகளாவிய ரீதியில் வாழ்ந்து வருகிறார்கள். இவரின் சேவை இன்னும் தொடரவேண்டும். மணிவிழா மட்டுமன்றி, பவள விழா, நூற்றாண்டு விழாக் காணவேண்டும்

இருபாலை ஊர்தனில்
உருவான எக்ஸ்பிறஸே
தரமான கல்வியின் தலைவனே
வரதனே நீ வாழ்க பல்லாண்டு.

V.T. **இராஜேந்திரா** J.P
*முகாமையாளர்,*
இலங்கை வங்கி, கொழும்பு.

# வரதன் அவர் 10 தடவைகள் 60 வயதைத் தாண்டி விட்டார்.



1970களின் ஆரம்பத்தில் அவரது நட்புக் கிடைத்ததும், அவரது கல்வி நிலையத்தில் நான் ஆசிரியனாக பணியாற்றியதும் இன்றும் என் இதயத்தை ஈரமாக்கும் இனிய நிலையான நினைவுகள்.

காலங்கள் உருண்டு ஓடி விட்டாலும் மாணவர் சமூகத்தில் நிலையான இடத்தைப் பிடித்துத் தன்னைக் கல்வியூட்டும் விருட்சமாக வளர்த்துக்கொண்டவர் வரதன். சுவிஸ் வந்தபோது என்வீட்டிலிருந்து ஐரோப்பிய வானொலி ஒன்றிற்கு நேரடி ஒலிபரப்பாகப் பேட்டி அளித்துக் கொண்டிருந்த வரதனின் வளர்ச்சியின் உச்சம், சகல ஐரோப்பிய நாடுகளிலும் இருந்த அவரது மாணவர்களின் தொலைபேசி அழைப்பினால் திக்குமுக்காடிப்போன வானொலி இயக்குநர் தனது பேட்டியை நிறுத்தி மாணவர்களின் நேரடி உரையாடலுக்கு இடமளிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டதானது புலம் பெயர்ந்த தமிழர் மத்தியில் வரதன் என்ற இமயத்தின் உயரத்தை உணர்த்தியது.



என் நண்பன் ஒருவன் கூறுவது போல சாதாரண கண்களுக்கு அவர் அன்றும் வரதன் இன்றும் வரதன். நேற்றுப் பார்த்த ஆற்றை இன்று பார்க்கும் போது எமக்குப் புதிதாக ஒன்றும் தெரிவதில்லை, ஆனால் அந்த ஆற்றில் நேற்று இருந்த நீர் இன்று இல்லை என்பதும், இன்று அது புதிய நீர் என்பதையும் நாம் காணத் தவறுவது போலவே இன்றைய வரதனது புதிய உயர்ச்சிகளைக் காணத் தவறக்கூடாது. மாணவர்களின் வளர்ச்சியே வரதனின் வளர்ச்சி.

நண்பா! இன்னும் பல 60 வயதுகளை நீ கடந்திட வேண்டும் என்று அவரை வாழ்த்திடும் போது நானும் அதனைக் கண்டிட வேண்டும் என்ற சுயநல ஆசையும் எனக்கு உண்டாகின்றது.

**நண்பன் N.U. மூர்த்தி,**

*விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம், தொழில் நுட்பக் கல்லூரி,*

*ஓய்வுபெற்ற கணினி விஞ்ஞானி, நொவார்ற்றிஸ் சுவிஸ்,*

*மொழிபெயர்ப்பாளர், சுவிஸ் நீதி மற்று அரச திணைக்களங்கள்,*

*நிர்வாகி, அடம்பன் பண்ணை, அடம்பன்.*

# அறுபதாவது அகவை வாழ்த்து



மனிதர்கள் எவருமே பிறக்கும்போது ஆளுமைகளுடன் பிறப்பதில்லை. வாழும் காலத்திலேயே பலர் தமது ஆளுமைகளை பல்வேறு தளங்களில் துறைகளில் பதியமிடுகிறார்கள்; வளர்த்துக்கொள்கிறார்கள். அதனால் பலருக்கு முன்னுதாரணமாக மிளிர்கிறார்கள்.

அவ்வாறு ஓர் ஆளுமையின் உருவமாக, வழிகாட்டியாகத்தான் நான் வரதனைப் பார்க்கின்றேன். நல்லாசிரியராக, நல்ல நிர்வாகியாக விளங்குகின்ற அதே சமயம் நல்ல நண்பனாகவும் அதற்கும் மேலாக நல்ல மனிதனாகவும் தன்னை அடையாளப்படுத்திய ஒருவர். இருபாலை "எக்ஸ்பிறஸ்" கல்வி நிலையம் என்றால் வடபுலத்தில் தெரியாதவர்கள் இருக்க முடியாது. எண்ணற்றவர்களுக்கு கல்விப் பசி போக்கிய தாய்மடி, பல்துறைசார் வல்லுநர்களை உருவாக்கிய கழகம்.

இவ்வாறான ஒரு தனியார் கல்வி நிறுவனத்தை நாற்பது வருடங்களுக்கு மேலாக இயக்குவதென்பது வார்த்தைகளுக்குள் அடக்கமுடியாத சவாலான பணி. ஸ்தாபகராய், நிர்வாகியாய், ஆசிரியராய் இப்பெரும் பொறுப்பை விருப்போடு சுமக்கிறார் வரதன். நான் அறிந்தவரையில் வேறு எந்த தனியார் கல்வி நிறுவனங்களும் ஒரே நிர்வகிப்பில் இத்தனை வருடங்கள் தரமாக இயங்கியதில்லை. நான் கற்பித்த 80களின் ஆரம்ப காலத்திலேயே கல்விச்சுற்றுலா, கல்விப்போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள் என்று பல வழிகளில் தரத்தைப்பேணி புதுமைகளைப் புகுத்தியவர். கற்பித்தல் நேரங்களில் தேவைக் கேற்ப கண்டிப்பைக் காட்டினாலும் மறுபுறத்தே கனிந்து குளிர்ந்து அனைவருக்கும் உதவும் மனப்பாங்கு வரதனுக்கே உரியது.

மூன்று ஆண்டுகள் நான் "எக்ஸ்பிறஸ்" கல்வி நிலையத்தில் கற்பித்ததால் கிடைத்த வரதனின் நட்பு முப்பது ஆண்டுகளைக் கடந்தும் இன்றும் தொடர்கிறது. இன்று அறுபது அகவை காணும் வரதன் மேலும் பல ஆண்டுகள் நலமாக வாழ்ந்து ஒரு தரமான கல்விச் சமூகத்தை உருவாக்க வேண்டும், வழிநடத்த வேண்டும்.

நோர்வேயில் வாழ்கின்ற அவரின் பழைய மாணவர்களும் இம் மடலூடாக தம் வாழ்த்தையும் அன்பையும் பகிர்ந்து கொள்கிறார்கள். வரதன் ஆரோக்கியமாக, தான் உயிராக நேசிக்கும் கல்விப்பணியைத் தொடர்ந்திட இந்த இனியநாளில் மனமார வாழ்த்துகின்றேன்.

**தோழமையோடு**
**சிவதாஸ் சிவபாலசிங்கம்**
நோர்வே.

# எக்ஸ்பிறஸ் அன்னையின் ஸ்தாபகருக்கு மணிவிழா.....



கல்வி உலகில் மகத்தான நிர்வாகியும் கணித ஆசானுமாகிய எங்கள் வரதராஜாவுக்கு மணிவிழா.

கோவையூர் பெற்றெடுத்த அருந்தவப் புதல்வராய் அவனியில் தரணி ஆழப் பிறந்த எங்கள் வரதராஜா கல்விக் காருண்யனாக கல்விப்பயிர் வளர்த்திடும் ஆசானுக்கு 60 அகவையை முன்னிட்டு வாழ்த்துவதில் உவகை கொள்கின்றேன்.

கல்வியைக் கண்ணாகக் கொண்டு "கல்வியே கண்" என்ற மகுட வாசகத்துடன் தொடர்ந்து 4 தசாப்த காலங்களுக்கு மேலாக கட்டுக் கோப்பான உன்னத நிறுவனத்தினை நிறுவிய அகிலம் போற்றும் நல்லாசான்.

தளராத துணிவோடு கொண்ட கொள்கையில் மாற்றம் இன்றி நடத்தி வரும் நல்ல நிர்வாகியும் கணிதம் கற்பிப்பதில் வல்லுனராகவும் மாணவரின் கல்வி முன்னேற்றத்திற்கு அயராது பாடுபடும் ஆசானுக்கு விழா எடுப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி.

வடக்கில் கல்வி நிறுவனங்களுள் தனித்துவமான இடத்தினைப் பெற்று மற்றைய கல்வி நிறுவனங்களுக்கு முன்மாதிரியாகச் செயற்பட்டு சிறந்த ஆசிரியர் குழுவினைக் கட்டுக்கோப்புடன் நிர்வகித்து அரிய கல்வி புகட்டும் உத்தம சீலனாய் கோவையூரில் மிளிர்கிறார் எங்கள் ஆசான்.

இருபாலை மண்ணிற்கு மகத்துவத்தைத் தேடித்தந்த நிறுவனம் எங்கள் எக்ஸ்பிறஸ். அதன் ஸ்தாபகர் கல்விச்சிந்தனையாளர், நல்ல செயல்வீரன் திட்டமிடுவதிலும் நேர முகாமைத்துவத்திலும் அவருக்கு நிகர் அவரே என்று கூறுவதில் ஐயம் இல்லை.

எமது மண்ணிற்கு நல்ல கல்வியாளர்களையும் கல்விமான்களையும் உருவாக்கிய பெருந்தகை கல்விப் புலத்திலே தனக்கோர் அடையாளத்தினைப் பதித்து ஏறுபோல் வீறு நடை போட்டுக் கொண்டு இருக்கும் நிறுவனத்தின் தலை மகனுக்கு விழா எடுப்பதில் பெருமிதம் அடைகின்றேன்.

எமது தலைமுறைக்கு உன்னத சேவையினை வளங்கும் நிறுவனத்தில் ஓர் மாணவனாக, ஆசிரியராகக் கடமை புரிவதில் பெருமை அடைகின்றேன். மாணவத்துவத்தையும் ஆசிரியத்துவத்தையும் கற்ற உயரிய வாய்ப்பாகக் கருதுகின்றேன்.

எமது ஆசானுக்கு மணிவிழா எடுப்பதில் அகமகிழ்ந்து இதயபூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றேன். பல்லாண்டு காலம் நோய்நொடி இன்றி சீரும் சிறப்பும் பெற்று வாழ எல்லாம் வல்ல கற்பகப் பிள்ளையாரை வேண்டி வாழ்த்துகின்றேன்.

S.M. **சதீஸ்,**

*நிறுவன பழைய மாணவனும்,*

*நிறுவன ஆசிரியரும்.*

# நினைவில் நீங்காத நினைவுகள்



அன்பு நண்பன் வரதனின் அறுபதாவது அகவை விழாக்கோலம் காண்பதையிட்டு மிகவும் மகிழ்வடைகிறேன். அருகில் இருந்து அளவளாவி வாழ்த்தும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லையே என்ற ஏக்கத்துடன் இங்கிருந்து வாழ்த்துகிறேன் வாழ்க பல்லாண்டு.

ஆயிரத்துதொழாயிரத்து எழுபதின் காலப்பகுதிகளை எண்ணி மீட்டுப் பார்க்கிறேன். அப்பொழுது நான் Northern Best Institute. Jaffna Law Center ஆகிய தனியார் கல்விக் கூடங்களை ஆரம்பித்து நடத்திக்கொண்டிருந்த காலம்; அன்று தொடக்கம் எனக்கும் வரதனுக்கும் நெருக்கிய நட்பு. அக்காலப் பகுதியிலேயே வரதனும் Express Institute என்ற தனியார் கல்விக்கூடத்தை இருபாலையில் ஆரம்பித்தார். அந்த இனிமையான, பசுமையான காலங்களை என்னால் இலகுவில் மறந்துவிட முடியாது. அதன்பின் நான் புலம்பெயர்ந்து வந்தபொழுதும் வரதன் தாய் மண்ணிலேயே இருந்து தமது கல்விப் பணியைத் தொடர்ந்து இன்றுவரை பணியாற்றுவது எமக்குப் பெருமையாகவும், மகிழ்வாகவும் இருக்கிறது. அவரது வழிகாட்டலில் எத்தனையோ மாணவர்கள் பயன் அடைந்து, உயர்வடைந்தது எமக்குப் பெருமையாகவும், மகிழ்வாகவும் இருக்கிறது.

வரதனின் கல்விப்பணியால் உயர்வடைந்த மாணவர்கள் பலரைப் புலத்திலும் சந்திக்க நேர்ந்தது. அவர்கள் வரதனின் கற்பித்தல் முறைமையையும், திறமையையும் மிகப் பெருமையாகக் கூறி சந்தோசப்பட்டனர். "துள்ளித் திரியும் வயதில் துடுக்கை அடக்கிப் பள்ளிக்கு அனுப்பிய தாய்போல்" எம்மைக் கண்டிப்பாகவும், கரிசனையுடனும் அவர் கற்றுத்தந்த பாடங்கள் எம் மனதில் இன்றும் நிலைத்து நிற்கின்றது. அவரது இறுக்கமான கண்டிப்புத்தான் எம்மைப் பரீட்சைகளில் முதல் சித்தி அடையவைத்ததுடன், புலம் பெயர்ந்துவந்த நாட்டிலும் ஒழுக்கம், கலை, பண்பாட்டுடன் வாழ்வதற்கு உறுதுணை யாக அமைந்தது. எமது பிள்ளைகளுக்கு வீட்டுப்பாடம் கற்றுக் கொடுக்கும் பொழுதுங் கூட எமக்கு அவர் கற்றுத்தந்த முறைமையும், அறிவுரைகளும்தான் முன்வந்து நிற்கின்றன எனக் கூறுகையில் நானும் அப்பணி இருந்தவன் என்ற வகையில் ஆசிரியத்தின் மகிமையையிட்டு பெருமகிழ்வடைந்தேன். அந்த இனிய உள்ளங்களுடன் இணைந்து வாழ்த்துகின்றேன்.

வாழ்க Express Institute
வாழ்க வரதனின் கல்விப்பணி
வாழ்க பல்லாண்டு.

**அன்புடன்**

**தமிழ்மணிப் புலவர், ஆ. விவேகானந்தா,** ஜேர்மனி.

# வாழ்த்துச் செய்தி



கோப்பாய் மகாவித்தியாலயத்தில் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே எனது நட்பிற்குப் பாத்திரமானவர் திரு. வரதன் அவர்கள். எனது தாயார் இப் பாடசாலையில் ஆசிரியராகப் பணியாற்றிய வேளை அங்கு கற்கும் வாய்ப்புப் பெற்ற யான் வரதனின் அண்ணா கருணாவுடன் படித்தேன். வரதனுடன் எனது தம்பி குகமூர்த்தி படித்தார். அன்று முதல் இன்று வரை வரதன் அவர்களை நன்கு அறிவேன். மிக ஆற்றலும், ஆளுமையும் மிக்க ஒருவர்.

இவரது கணித பாடக் கற்பித்தல் திறமை, மாணவரைக் கவரும் ஆற்றல் தனித்துவமானது. இவரது "எக்ஸ்பிறஸ்" கல்விச்சாலை பல மாணவர்களின் முன்னேற்றத்திற்குப் பேருதவியாக அமைந்ததை நான் அறிவேன். நேரக்கட்டுப்பாடு முதல் மிகச் சிறந்த நல்லாசிரியர்களை ஒன்றாக அரவணைத்து தன் கல்விச் சாலையை மிளிரச் செய்தவர்.



தனியார் கல்வி நிறுவனம் எப்படி அமைய வேண்டும்? அதன் பணி எப்படி? எப்படி? சிறக்க வேண்டும்? என்பதற்கு "எக்ஸ்பிறஸ்" கல்விச்சாலை ஒரு எடுத்துக்காட்டாக அமைந்ததோடு பல தனியார் கல்வி நிலையங்கள் "எக்ஸ்பிறஸ்" கல்விச்சாலை நிர்வாக முறையைப் பின்பற்றி, மாணவருக்கு உதவியதோடு நற் பெயரையும் பெற் றுள்ளன. பெருமைக்குரிய எக்ஸ்பிறஸ் கல்விச்சாலையின் அதிபரது மணிவிழாச் சிறக்க வாழ்த்துகிறேன். நண்பர் வரதன் சகல செல்வங்களுடனும் பல்லாண்டு வாழ நல்லூர் முருகனை வேண்டி வாழ்த்தி நிறைவு செய்கிறேன்.


**ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி**

*முன்னாள் அதிபர்,*

*கோப்பாய் ஆசிரிய கலாசாலை*

*ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர்.*


*தென்மராட்சிக் கல்வி வலயம்.*



# என்றும் இனிய நினைவுகளுடன்

யாழ்ப்பாணத்தில் தனியார் நிறுவனங்களின் ஆரம்ப காலப் பட்டியலில் இடம் பெறும் நிறுவனம் 'எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டாகும்' தனியார் கல்வி நிறுவனங்கள் தேவை தானா? என்ற பெருஞ் சர்ச்சை நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் நிமிர்ந்து நின்ற நிறுவனங்களில் இதுவும் ஒன்றாகும். இந்த நிறுவனத்தின் வெற்றிக்குக் காரண கர்த்தாவாக அமைந்தவர் இதன் நிர்வாகி நண்பர் த. வரதராஜா (வரதன்) அவர்கள்.

வரதனுக்கும் எனக்குமிடையிலான தொடர்பு முப்பது ஆண்டுகளுக்கும் மேலானது. எனக்கும் அவருக்குமிடையில் நெருக்கமான தொடர்பு ஏற்பட்டதற்குக் காரணம், 1987ஆம் ஆண்டு இந்திய இராணுவம் பிரசன்னமாகித் தனியார் கல்வி நிறுவனங்கள் மூடப்பட்ட நிகழ்வாகும். என் போன்ற சிலருக்கு தனியார் கல்வி நிறுவனங்கள் தான் வாழ்வளித்தன. வரதன் பாடசாலை ஆசிரியராக இருந்ததைவிட எக்ஸ்பிறஸ் நிர்வாகி என்பதே அவரது அடையாளமாக இருந்தது. மூடியிருந்த தனியார் கல்வி நிறுவனங்களை மீண்டும் திறப்பதற்கு BOND ஆனந்தகுமார், திருமதி அருள் நங்கை சண்முகநாதனும், அடியேனும்



முயன்றபோது எங்களுக்குப் பக்கபலமாக இருந்தவர்களில் வரதனும் ஒருவராவர். அந்தச் சூழ்நிலையை நினைத்துப் பார்க்கிறேன். பெருமூச்சு ஏற்படுகிறது.

இந்திய இராணுவம் வெளியேறிய பின்னர் ஏற்பட்ட நிர்வாகம் (நிழல் நிர்வாகம்) தனியார் கல்வி நிறுவனங்களை "வர்த்தக மையம்" ஆக்கியது. அவர்களுடைய தேவைக் காக உருவாக்கப்பட்டது தனியார் கல்வி நிறுவன ஒன்றியம். இதன் தலைமைப் பொறுப்பை நீண்டகாலமாக அடியேன் ஏற்றிருந்தேன். அதற்குக் காரணம் தனியார் கல்வி நிறுவனங்களை நம்பி வாழ்க்கை நடத்திய நூற்றுக்கணக்கானவர்களின் வாழ்க்கை நிலை பாதிப்படையக்கூடாது என்பதுதான். இந்தச் சந்தர்ப்பத்தில் என்னோடு மிகவும் நெருக்கமாகச் செயற்பட்டவர் நண்பன் வரதன் ஆவார். இந்தச் சூழலில் எனக்கும் வரதனுக்குமிடையில் பலமான கருத்துமுரண்பாடு இருந்ததை மறுக்கமுடியாது. இங்கு தான் வரதன் எனது மனதில் இடம்பிடித்தார். கருத்து முரண்பாட்டை கருத்து முரண்பாடாக மட்டுமே கருதி, தோழமையுடன் நடந்து கொண்டது வரதனின் உயர் பண்பின் வெளிப்பாடாகும்.

வரதனின் திருமணம், மகளின் பிறந்தநாள் போன்ற இன்ப நிகழ்வுகளிலும், பின்னர் ஏற்பட்ட சில துன்ப நிகழ்வுகளிலும் நான் உடனிருந்திருக்கிறேன். அந்த நாள் ஞாபகங்கள் என்றும் பசுமையானவை.

எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டில் ஆசிரியராக சில வருடங்கள் யான் கடமையாற்றி யிருக்கிறேன். அந்த சந்தர்ப்பங்களில் நல்ல நிர்வாகியாக வரதனைக் கண்டிருக்கிறேன். ஆளுமை மிக்கவர்கள் ஒரே அணியில் இருப்பது கடினம் என்பது தானே உண்மை!


தனியார் நிலையங்களுக்கு உயிர் கொடுத்தவர். BOND மாஸ்டர், ஆனந்தகுமார் அவர்களின் மறைவையொட்டி அஞ்சலி நிகழ்வு ஒன்றினை ஒழுங்கு செய்தோம். அன்றிருந்த சூழ்நிலையில் யாழ் நகர்ப்பகுதியில் அதனைச் செய்ய முடிய வில்லை. நண்பர் வரதன் அந்த நிகழ்வைப் பொறுப்பேற்று எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டில் சிறப்பான அஞ்சலி நிகழ்வை ஒழுங்கு செய்து தனியார் கல்வி நிறுவனங்கள் சார்பான நன்றிக் கடனைப் பூர்த்தி செய்து வைத்தார். இந்த சந்தர்ப்பத்தில் வரதனுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இனிய நண்பா! ஆண்டுகள் அறுபது ஆகலாம் ஆனால் மனது என்றும் இளமையாக இருக்கட்டும். அது ஒன்றுதான் சோர்வை ஏற்படுத்தாத அருமருந்தாகும். உன் வாழ்வின் வெற்றிக்கும், செழிப்புக்கும் எனது இனிய வாழ்த்துக்களை இதயபூர்வமாகத் தெரிவித்து மகிழ்கிறேன்.

**அன்புடன்**

**சொல்லின் செல்வர் இரா. செல்வவடிவேல்**

# ஆசிரியர் திலகம் வாழி





நல் லொழுக்கம் காத்தாய்
நற்கல்வி புகட்டி வைத்தாய்
எல்லையில்லாப் புகழ் கண்டாய்
எக்ஸ்பிறஸ் நிறுவி நின்றாய்
எத்தனை ஆண்டுகளாய்
ஏற்றம் பெற்ற நிறுவனமாம்
எங்கள் வரதன் சேரின்
மணிவிழாக் காணுகின்றோம்

கணிதம் என்ற கற்கைநெறி
கணக்கில்லாமல் கற்பித்தாய்
துணிவுடனே செயலாற்றும்
தூய்மையான உள்ளம் கொண்டாய்
பணிவுடனே பெரியவரை
போற்றுகின்ற பண்புடையோய்
அணிகலனாம் அறுபதிலே
அகவைதனை காண்கின்றாய்

கண்டிப்பு நிறைந்த கல்வி
கற்பிக்கும் நிறுவனத்தை
கண்ணெனக் காத்து வந்தாய்
கணக்கில்லா உயர்வு கண்டாய்
எண்ணற்ற மாணவர்கள்
ஏற்றங்கள் பெறவே செய்தாய்
அண்ணலே அறுபதிலே
அகவை கண்டாய் வாழி வாழி!

மாணவர் ஒழுக்கம் என்றால்
மன்னவனே பணி உனதுஅன்றோ
மாண்புடன் கல்வி தந்தாய்
மாநிலம் போற்ற வாழி!
பல்லாண்டு வாழி வாழி!
பணி செய்து வாழி வாழி!
பலசெல்வம் பெற்றே வாழி!
பல்லாண்டு வாழி வாழி!

A.T.C. **இரா. அருட்செல்வம்**

K.T.C. ஞான. திருக்கேதீஸ்வரன்

# வாழ்த்துரை



இன்று மணிவிழாக் காணும் இனிய நண்பர் திரு. த. வரதராஜா அவர்களுடனான முப்பது வருடங்களுக்கு மேற்பட்ட நட்பை எண்ணிப் பார்க்கிறேன். ஆசிரிய நண்பர்களோடு க.பொ.த. உயர்தர வகுப்பிற்குக் கணக்கியல் கற்பித்த அந்தக் காலம்! ஆம், வசந்த கால நினைவுகள் தான். மாணவர்களது மேலதிகக் கற்றல் வசதிக்காக சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்ட எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் இன்று மாடிக் கட்டடங்களாக உயர்ந்து தனியார் பாடசாலைகளை ஒத்தது வசதிகளோடு விளங்குவதைக் கேட்டு புளகாங்கித மடைகின்றேன். சிறுவயதில் தந்தையை இழந்த குடும்பத்தைக் கட்டிக் காத்து அவர்கள் யாவரையும் உயர் நிலை அடையச் செய்த பொறுப்புணர்வு மிக்க ஒருவர் இதனைச் சாதித்திருப்பது வியப்புக்குரியது. கணிதத்துறையில் சாதனையாளரான அவரிடம் கற்ற மாணவர்கள் வெளிநாடுகளில் மருத்துவர், பொறியியலாளர், முகாமையாளர்கள் என உயர்நிலைகளில் நன்றியோடு வரதன் சேர் பற்றியும், எக்ஸ்பிறஸ் பற்றியும் உரையாடும்போது அவரது சேவையின் பெறுமானத்தை என்னால் உணரமுடிகிறது.



ஆசிரியர்கள், நண்பர்கள் மற்றும் மாணவர்களதும் சுகதுக்கங்களில் கலந்து சிறப்பிப்பதோடு விளம்பரமின்றித் தேவையறிந்து நிதியுதவிகளும் செய்துள்ளார். தான் கற்ற பாடசாலைகளை நன்றியோடு நினைப்பதுடன் தேவைகளுக்கும் உதவுபவர். பொது நிறுவனங்களிலும் தன்னை ஈடுபடுத்திப் பொதுத் தொண்டாற்றுபவர். சமூகப் பெறுமதி மிக்க நல்ல நண்பர். தொடர்ந்து வரும் பல விழாக்களையும் கண்டு சிறப்போடு வாழ எனது மனைவி, மகள், மருமகன் பேரக் குழந்தைகள் சகிதம் இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**மா. மரியதாஸ்,**
*பிரான்ஸ்.*

# வாழ்த்துச் செய்தி



இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டின் ஸ்தாபகரும், இயக்குநருமாகிய திரு. த. வரதராஜா அவர்கள் 60ஆவது அகவை நிறைவை எய்தி மணிவிழாக்காண இருப்பதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

"எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்" என ஔவையார் கூறிய கருத்துக்கமைய ஆயிரம் ஆயிரம் மாணவர்களின் அறிவுக்கண்களைத் திறந்த பேராசான்.

"இளமையில் கல்வி சிலையில் எழுத்து" எனும் கூற்றுக்கிணங்க சிறுபிள்ளைகளுக்கு ஏட்டுக்கல்வியுடன் மாணவர்களின் ஒழுக்கம், கண்ணியம், கட்டுப்பாடுகளையும் கவனித்து வழிநடத்தி வரும் பேராசானின் சேவை மென்மேலும் தொடர்வதற்கு நல் ஆரோக்கியமாக நூறாண்டுகாலம் வாழ வேண்டும் என்றும், மன நிறைவுடன் வாழ்த்துவதோடு கற்பகவிநாயகரின் அருள் ஆசிகள் பெறவேண்டும் எனவும் வாழ்த்துகின்றேன்.

*'வாழ்க வழமுடன்'*

**திரு. க. உபேந்திரன்**

*கிராம உத்தியோகத்தர், இருபாலை கிழக்கு.*



# மணிவிழா நாயகரே நீவிர் நீடூழி வாழ்க...

அகவை அறுபதில் மணிவிழாக் காணும் கணித ஆசானும், நிர்வாகியுமான திரு. த. வரதராஜா அவர்களை வாழ்த்துவதில் நான் பெருமகிழ்வுறுகின்றேன்.

இப்பெருமகன் ஒரு தனியார் கல்வி நிறுவனத்தை 40 வருடங்களுக்கு மேலாக மிகச் சிறந்த முறையில் அதன் தனித்துவம் சிறிதளவேனும் குறைவுபடாமல் நிர்வகிப்பதில் பெரு வெற்றி கண்டுள்ளார்.

இடைநிலை வகுப்புக்களில் கணித பாடத்தை மாணவரது தனியார் அடைவு மட்டத்தை அறிந்து ஏற்றாற்போல் கற்பிப்பதில் வல்லோனாகத் திகழும் ஆசிரியர் அவர்கள் சிறந்த ஓர் கணித ஆசான் ஆவார்.

நிறுவனத்தில் பயிலும் மாணவர்களது கல்வி வளர்ச்சியில் எவ்வளவு கரிசனையுடன் செயற்படுகின்றாரோ அவ்விதமே மாணவரது ஒழுக்கம் சார் நடவடிக்கைகளிலும் மிகுந்த அக்கறை கொண்டு வருகின்றார். இதன் மூலம் மாணவர்கள் ஆர்வமுடன் கற்பதற்கும் ஆசிரியர்கள் சிரமமின்றிக் கற்பிப்பதற்குமான ஒரு கவிநிலையை அவரது நிறுவனத்தில் காணக்கூடியதாகவுள்ளது. மேலும் நிறுவனத்தில் பரிசளிப்பு விழா, நவராத்திரி விழா, ஆசிரிய, மாணவர் ஒன்று கூடல் போன்ற பல்வேறு இணைச்செயற்பாடுகள் நடைபெறுவது அவரது நிர்வாத் திறமைக்கு எடுத்துக் காட்டாக அமைகின்றது.

இவ்விதம் பன்முக ஆளுமை கொண்ட திரு. த. வரதராஜா ஆசிரியர் அவர்களது பணி தொடர, அவர் நல்ல உடலாரோக்கியத்துடனும், மகிழ்வுடனும் பல்லாண்டு காலம் வாழ இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

**திரு. B.P. பாஸ்கரன்,**
*நிர்வாகி, எடிசன் கல்வி நிறுவனம்.*

# வாழ்த்துச் செய்தி



எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டின் அதிபர் உயர்திரு. த. வரதராஜா சேர் அவர்கள் இன்று அறுபது வயதைப் பூர்த்தி செய்து மணிவிழாக் காணும் இவ்வேளையில் அவருக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## மணிவிழாக் காணும் மனிதருள் மாணிக்கம்

மணிவிழாக் காணுகின்ற
மாண்புமிகு அதிபர் - இவர்
மண்ணிலுள்ள மக்களுக்கு
அறிவு தந்த பேராசான்
எக்ஸ்பிறஸ் என்ற பெரும்
அறிவு தரும் ஆலயத்தை
அன்றுமுதல் இன்று வரை தனித்துவமாக
நடத்தி வருகின்ற
மனிதருள்ளே தெய்வம் - இவர்
கடமை, கண்ணியம், கட்டுப்பாடு
என்ற பண்புகளை மாணவர்க்கு
கல்வியுடன் ஊட்டி வளர்த்த
பாசமிக்க அன்னை - இவர்
எந்நாளும் மக்களுக்கு
சேவை செய்யும் பெருந்தகையே
எங்களூர் மாணவர்கள்
கல்வியிலே உயர்ந்தது என்றால்
உங்கள் நாமம் தான் என்று
உறுதியாகக் கூறிடுவோம்.

எம் மண்ணுக்குப் பெருமை சேர்த்த மணிவிழா நாயகரை மன மகிழ்வுடன் பல்லாண்டு வாழ்கவென கோப்பாய் தெற்கு சூரியோதய சனசமூக நிலையம் உவகையுடன் வாழ்த்துகின்றது.

**நா. பாஸ்கரன்.,**
தலைவர், சூரியோதய சனசமூக நிலையம்

# வாழ்த்துச் செய்தி



பிரபல கணித ஆசானும், இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டின் ஸ்தாபகரும், அதிபருமான திரு. தம்பிப்பிள்ளை வரதராஜா அவர்களின் மணிவிழாச் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

அகவை அறுபது கண்ட விழா நாயகனை மனதார வாழ்த்துவதில் மனநிறைவடைகின்றேன்.

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்னும் உயரிய கொள்கைக்கிணங்க தனது 18ஆவது வயதிலேயே 01.03.1973இல் இருபாலையில் தனியார் கல்வி நிறுவனத்தை ஆரம்பித்துத் தொடர்ந்து 42 வருடங்களாக சிறப்பானமுறையில்தனதுகிராமத்து மாணவர்களுக்கு மட்டுமன்றி, இம்மாவட்டத்திலுள்ள பல மாணவர்களுக்கும் கல்விப் பணியாற்றிவருவது பாராட்டப்பட வேண்டியதே. சுமார் 800 மாணவர்களுக்கு மேல் கல்வி கற்கும் இக் கல்வி நிறுவனம் மாவட்டத்திலேயே தனக்கெனத் தனியிடம் பதித்துக் கொண்டது. இவரது ஆளுமை, கட்டுப்பாடு நிறைந்த நிர்வாகக் கட்டமைப்பு பலரதும் பாராட்டுதல்களைப் பெற வைத்தன.

விசேட கணித பயிற்சி பெற்ற இவர் பிரபல கணித ஆசானாகவிருந்து சாதாரண மாணவர்களுக்கு மட்டுமன்றி கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மாணவர்களுக்கும் எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டினூடாக விசேட கணித வகுப்புகள் நடத்திக் கணித பாட போதனை நடத்திவந்தமை அவரது ஆசிரியப் பணிக்கு மகுடம் வைத்தாற்போல அமைந்துள்ளது.

அரசினர் ஆசிரிய சேவையை 33 வருடங்கள் செய்து பல நன் மாணவர்களை உருவாக்கி, அவர்கள் உள் நாட்டிலும், வெளிநாடுகளிலும் கல்வியில் உயர்ச்சி பெற்று நன் நிலையில் வாழ்வதால் தனது சேவையால் சிறப்பும், மன நிறைவும் கொண்ட பெருமைக்குரியவர் 'அக இருளை நீக்குபவன் ஆசிரியன். அறிவுப் பசி தீர்ப்பவனே ஆசிரியன், என இவரது ஆசிரியப்பணியைப் பாராட்டி பல்லாண்டு காலம் வாழ்ந்து தளராத கல்விப் பணியால் மென்மேலும் நன்மாணாக்கர்களை உருவாக்கி சேவைசெய்ய இறையருள் கைகூட வேண்டுமென இறையருளைப் பிரார்த்தித்து வாழ்த்தி அமைவோமோக.

**த. பரராஜசிங்கம்**

*சமாதான நீதிவான், நீர்வேலி வடக்கு, நீர்வேலி.*



# பண்புடையோர் தம்மை அறிவுடையோர் ஆக்கினீர் வாழ்க!



உலகில் சரியான முறையில் வாழவேண்டும் என நினைக்கும் மனிதர்கள் தம் வாழ்வில் ஏதாவது ஓர் இலக்கினைக் கொண்டு முன்னேறுவர். இன்றைய சூழ்நிலையில் இவ்விலக்கானது பெரும்பாலான மனிதர்கள் தன்னலம் சார்ந்ததாகவே தமது இலக்கினை அமைத்துக் கொண்டு தாங்கள் மட்டும் வாழ்ந்தால் போதும் என்ற அடிப்படையில் தமது வாழ்வினை முன்னெடுக்கின்றனர். தானும் வாழவேண்டும், தன்னால் பிறரும் வாழவேண்டும் என்ற யதார்த்த நினைப்பினை அடிப்படையாகக் கொண்டு முன்வந்து தமக்காகவும், சமூகத்திற்காகவும் உழைப்பவர்கள் சிலரே. அந்த சிலருள் ஒருவரே தான் மதிக்கும் கணித ஆசான் திரு. த. வரதராஜா அவர்கள்.

நாற்பது வருடங்களுக்கு முன் ஒரு தனியார் கல்வி நிறுவனத்தைத் தொடங்கியதன் மூலம் அவர் மேற்குறிப்பிட்ட சிலருள் ஒருவராகத் தன்னையும் இணைத்துக் கொண்டார். தனது நிறுவனத்தில் இணைந்தவர்கள் ஒழுக்கத்துடனும் பண்புடனும் கூடிய கல்வியறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையோடு செயற்பட்டார். இதற்காக அவர் பல கட்டுப்பாடுகளை விதித்து நடைமுறைப்படுத்தினார். இதன் மூலம் சமகாலத்தில் தோற்றம் பெற்ற தனியார் கல்வி நிறுவனங் களுடன் ஒப்பிடும் போது தனித்துவம் மிக்க ஒரு கல்வி நிறுவனமாகத் தனது கல்வி நிறுவனம் திகழ வழிசெய்தார்.



இத்தகைய தனித்துவம் மிக்க கல்வி நிறுவனத்தில் ஐந்தாம் வகுப்பிலிருந்து கல்வி கற்கும் போது எனக்குக் கிடைத்தது இவரது கண்டிப்பும் அக்கறையுமே. நான் இப்போது பெற்றிருக்கும் வைத்திய கலாநிதி என்ற நிலையை அடைவதற்கான உந்துசக்தியினை எனக்கு அளித்து என்னைப்போலவே இவரது வழிப்படுத்தலினால் இன்னும் பலர் சமூகத்தில் உயர் நிலையை அடைந்து வாழ்கின்றனர். இத்தகைய சிறந்த ஒரு வழிகாட்டியாக இருக்கின்ற திரு. த. வரதராஜா அவர்கள் இன்று மணிவிழாக் காண்கின்றார்.

இவர் இன்னும் பல ஆண்டுகள் தனது பணியினை இந்த சமூகத்திற்கு வழங்கி வளமுடன் வாழ இம் மணிவிழா நாளில் வாழ்த்துவதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**வைத்தியகலாநிதி சீ. குணதாசன்,**

இருபாலை.

# வாழ்க வளமுடன்



யாழ்ப்பாணத்தின் கல்விப் பாரம்பரியத்தில் பாடசாலைகளின் கல்விக்கு ஈடாக அதனையொத்த குறிப்பிடத்தக்க தனியார் நிறுவனங்கள் பங்காற்றி வந்திருக்கின்றன. அந்த வகையில் இருபாலை எக்ஸ்பிறஸ் நிறுவனம் ஓர் முக்கியமான இடத்தை வகித்திருக்கின்றதென்றால் அது மிகையாகாது. இக் கல்வி நிறுவனத்தின் தனித்துவம் என்னவென்றால் கல்வியின் குறிக்கோளான ஒழுக்கம், பண்பு சார்ந்த விழுமியங்களைக் கல்வியினூடு வழங்குதலாகும். இந் நிறுவனத்தின் கட்டுப்பாடுகள், கல்விசார்ந்த உந்துதல்கள் ஆகியவற்றால் கவரப்பட்டு மிக நீண்டதூர சுற்றுவட்டத்தில் இருக்கும் மாணவர் சமூகத்தின் பயன்பாட்டிற்குரிய நிறுவனமாக மிளிர்ந்தது. இத்தகு கட்டுப்பாடுடைய கல்வி நிறுவனமாக 40 வருடங்களுக்கு மேலாகச் சேவையாற்ற நிர்வாகப் பணியில் நின்று நிலை நிறுத்திய பெருமைக்குரியவராக கணித ஆசானும் நிறுவனப் பணிப்பாளரும் ஆகிய திரு. த. வரதராஜா அவர்களையே சாரும்.

தன்னுடைய இளமைக்காலம் தொட்டு கணிதத்துறையில் இருந்த ஆர்வத்தினால் சிறுகச் சிறுகக் கட்டியெழுப்பிய கல்விக் கூடம் இன்று பெருவிருட்சமாக வளர்ச்சியடைந் திருக்கின்றதென்றால் அவரது அயராத முயற்சியேயாகும். இத்தகைய பெருமை மிக்க ஆசானிடம் இடைநிலைக் கல்வியை முழுமையாகக் கற்றவள் என்பதால் அன்றிலிருந்து இன்றுவரை கற்பித்தலிலும் நிர்வாகச் செயன்முறையிலும் மணிவிழா நாயகன் ஆற்றிய பணிகளை கண்ணூராகக் கண்டு இறும்பூதெய்துகின்றேன்.

ஒரு சமூகத்தின் நற்பிரஜைகளை உருவாக்குவதில் நான்கு தசாப்தங்களை அர்ப்பணிப்புடன் செயலாற்றிய மாமனிதன் ஒருவருக்கு மணிவிழா எடுக்கப்படுகின்றது என்ற செய்தி என் நெஞ்சை நிறைத்து நிற்கின்றது. நான் இன்று மருத்துவத்துறையில் சாதிப்பதற்கு அடித்தளமிட்ட அதேவேளை அவ்வப்போது உற்சாகப்படுத்தி ஊக்குவித்த நிலமைகள் தான் என்னை இந்த நிலைக்கு உயரவைத்திருக்கின்றது என்று எண்ணிக் கொள்கின்றேன்.

தான் பிறந்த சூழலிலே இக் கல்வி நிறுவனத்தையும் வளர்த்தெடுத்து அவரால் பயன்பெற்றுக் கொண்ட உணர்வுடைய உள்ளங்களால் அவரது அறுபது ஆண்டு முழுமையான சேவையையும் சமூக நலத்தையும் ஒன்று சேர்த்துக் கௌரவிப்பது மிக மகிழ்ச்சிக்குரியதாகும். இத்தகு நன்னாளில் என்னுடைய ஆசானுக்கு அவரது குடும்பம் சுகநலமும் நீடித்த வாழ்வும் பெற்று நிறைசேவையில் தொடர்ந்து பணியாற்ற எல்லாம் வல்ல கற்பக விநாயகரைப் பிரார்த்தித்து வாழ்த்தி வணங்குகின்றேன்.

"வாழ்க வளமுடன்"

Dr. **(திருமதி) தாரணி சிவகோணேசன்,** *(பழைய மாணவி)*

# அறியாமை இருள் அகற்ற உதித்த அறிவுச் சூரியன்



எனைப் பெற்றெடுத்த அன்னைக்கு நிகராகவே எனைக் கற்றெடுத்த ஆசானையும் பார்க்கிறேன். எங்கள் கணித ஆசான் தனது அறுபதாவது அகவையில் காலடி வைக்கும் இந்தத் தருணத்தில் என் வாழ்வில் அவர் காலடி வைத்த தருணங்கள் என் முன்னே நினைவாக வந்து, ஊசலாடுகின்றன. "கணிதம் கசக்கும்" என்று மருந்து போல பார்த்த எனக்கு கணிதத்தை இனிக்கும் விருந்தாக மாற்றி ஊட்டிவிட்டவர் எங்கள் ஆசான்.

இன்று நான் ஒரு பொறியியலாளனாக இருப்பதற்கு அன்று எனக்குள் ஒரு பொறியினையே தட்டி விட்டவர் இவர் என்பதை என்றும் நான் கூறிக்கொள்வதிலும் எண்ணிக்கொள்வதிலும் பெருமையும் மட்டற்ற மகிழ்ச்சியும் அடைகிறேன். எனக்குள் இவர் தூவிய அந்த விதை தான் நான் பொறியியலாளன் எனும் விருட்சமாய் வளர்ந்து நிற்பதற்குக் காரணம். எந்த ஒரு கல்லையும் நல்ல சிற்பமாக்க மிகச் சிறந்த சிற்பியால் தான் முடியும். அதைப்போல எந்த ஒருவனையும் நல்ல மேதையாக்க



இவரால் மட்டுமே முடியும். அந்த அளவுக்குத் திறமையும் ஆர்வமும் தன்னகத்தே கொண்டவர் இவர். இன்று பல படித்த சிற்பங்களை வடித்த பெருமை இவரையே சாரும். பல மேதைகளை உருவாக்கிய, இன்றும் உருவாக்கிக் கொண்டிருக்கும் பெருமையும் இவரையே சாரும். கணிதம் மட்டுமல்ல பல விடயங்கள் கற்றிருக்கிறேன் இவரிடமிருந்து. நேரத்தை மதிக்கும் தன்மை, தகுந்த கண்டிப்பு, தேவையான கவனிப்பு என்று இவரின் இயல்புகளையும் இவரின் உயர்ந்த குணாதிசயங்களையும் பற்றி அடுக்கிக் கொண்டே போகலாம். எம் சமூகத்தில் அறியாமை இருளை அகற்ற எமக்காய் உதித்த அறிவுச் சூரியன் இவர்.

கடினங்களைக் கழித்து கூர்மைத்திறனைக் கூட்டி பெருமை களைப் பெருக்கி நல்வழிகளை வகுத்து சரியான நிலைக்கு எங்களை சமன் செய்தவர் இவர்.

இவர் நல் ஆயுளுடன் நன்றாய் வாழ்ந்தால் நம் சமுதாயம் அறியாமை இருள் அகன்று ஒளிமயமாய் வாழும். இவரை வாழ்த்த வயது போதாது வணங்குகிறேன்.

நன்றி

**எந்திரி சி. பரணிதரன்**
*நீர்ப்பாசனப் பொறியியலாளர்,*
*நீர்ப்பாசனத் திணைக்களம் (வ.மா).*



தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விமாணி பட்டமளிப்பு விழா பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற போது பட்டம் பெறுகையில்




சூரியோதயா சனசமூக நிலையத்தின் 70 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கௌரவிக்கப்பட்டபோது



மழலைப் பூங்கா முன்பள்ளியில் மழலைக் கலையமுதம் நிகழ்வின் போது



மழலைப் பூங்கா முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினருடன்

# டென்மார்க்கில் இருந்து வாதரவத்தை கிருஷ்ணபிள்ளை குடும்பத்தாரின் வாழ்த்து

பிறந்த நாளாம்; பிறந்த நாளாம் எனது மதிப்பிற்கும் பாசத்திற்கும் உரிய ஆசிரியருக்கு எனது உடன் பிறவா சகோதரருக்கு மதிப்பு அளிக்கும் நாளாம் இன்று. முதலில் எனது எங்கள் குடும்பத்தாரினதும் பிறந்த நாள் வாழ்த்துக்கள் உங்களுக்கு உரித்தாகட்டும்.

எங்கள் குடும்பத்தில் எல்லோராலும் பெரிதும் மதிக்கப்பட்டவரும் அன்பிற்கு உரியவர்களில் நீங்களும் ஒருவர். பழைய மாணவர்களில் நானும் ஒருவன். வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம் எங்கள் கிராமத்தின் ஒரேயொரு பாடசாலை. பல வகைகளில் எங்கள் கிராமம் வசதிகள் குறைந்த காலம் அது. குடிநீர் பற்றாக்குறை, போக்குவரத்து வசதிகள் எதுவும் இல்லாத ஊர். பாடசாலையில் மலசலகூடம் கூட ஒழுங்காக இல்லாத இடம். இந்த நிலையில் எந்த ஒரு ஆசிரியராக இருந்தாலும் இந்த ஊருக்கு வரத் தயங்குவார்கள். ஆனாலும் இந்த ஊர் ஏழை மாணவர்களின் கல்வி மேம்பட வேண்டும் என்றே உங்களின் ஒரே குறிக்கோளாக இருந்தது. நீங்கள் நினைத்திருந்தால் எத்தனையோ வசதி வாய்ப்புக்கள் உள்ள பாடசாலை ஒன்றைத் தேர்ந்து எடுத்திருக்கலாம். ஆனால் நீங்கள் அப்படிச் செய்யவில்லை. மாறாக பல வருடங்களாக எங்கள் பாடசாலை மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக இங்கு பணியாற்றினீர்கள்.

**சில ஞாபகத்துளிகள் ......**

மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டாலே பொதுவாக அனேகமான மாணவர்களுக்குத் தெரியும் Sir வந்துவிட்டார், நீட்டமான பலகை ஒன்றை வாசல் படிக்கட்டில் வைத்தால் தான் நீங்கள் மோட்டார் சைக்கிளில் இருந்தவாறே பாடசாலைக் கட்டிடத்தினுள்ளே வண்டியைக் கொண்டு வர முடியும். அதைச் செய்வதற்கு மாணவர்களிடையே போட்டி.

கணித பாடத்தில் homework செய்யாமல் எந்தவொரு மாணவர்களும் வகுப்பிற்கு வரமாட்டார்கள். செய்யாமல் வந்தால் என்ன நடக்கும் என்று ஒவ்வொரு மாணவர்களுக்கும் தெளிவாகத் தெரியும்.

எங்கள் வீட்டிற்கு வரும் போது அம்மாவின் மல்லிபோட்ட கோப்பித்தண்ணியை சிறிய புன்முறுவலுடன் வாங்கி கையில் வைத்துக் கொண்டு இருந்த போது, அம்மா கூறினார் "தம்பி உடம்பிற்கு நல்லது குடியுங்கோ என்று". அதை அருந்திவிட்டு நன்றாக இருக்குதம்மா. எப்படியம்மா எனக்கு வயிற்றில் சுகமில்லை என்று உங்களுக்குத் தெரியும் என்று அம்மாவைக் கேட்டீர்கள். அப்போது அம்மா கூறினா "தம்பியின் முகத்தில், ஏதோ வருத்தமாக உள்ளீர்கள் என்று தெரியுது அதனால் தான் மல்லிபோட்ட கோப்பித்தண்ணி தந்தநான் என்று" இதை அடிக்கடி Sir எனக்குக் கூறி அம்மாவின் அன்பைப் பற்றி மற்றைய சக ஆசிரியர்களுக்கும் பாசத்துடன் கூடிய உங்களின் அன்பையும் வெளிக்காட்டுவீர்கள்.

Sir உங்களுடன் எங்கள் குடும்பத்திற்கு உண்டான நட்பு என்றும் நிலைத்து இருக்கும்.

என்றும் உங்கள் மதிப்பிற்கும் பாசத்திற்கும் உரிய அன்பான மாணவன்,

**உங்கள் அன்புத்தம்பி பாலேஸ்வரன் கிருஷ்ணபிள்ளை.**

# தரணியில் தன்னிகரில்லா ஆசான்



கல்விக்கோர் வித்தாகி நீண்ட நெடிய பரந்த ஆலம் விழுதாகப் பரவி பாரில் கல்விப் பணியாற்றும் உத்தம ஆசான்களில் தரணியில் தன்னிகரில்லாத ஆசான் திரு. த. வரதராஜா என்றால் மிகையான விடயமல்ல.

இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் என்ற நாமம் இலங்கைத்தீவில் சிறந்த கல்வி ஒழுக்கம் என்பதன் கருவூலம். அதன் ஒளியில் தெறித்த விம்பங்களே இன்றைய உலகில் பிரதேசங்கள் எங்கும் சிறந்த கல்வியியலாளர்களாகவும், நெறியாளர்களாகவும், மருத்துவர், ஆசிரியர் மற்றும் சமூக நற்பிரஜைகளாகவும் வாழும் நம்மவர்கள்.



தனியார் கல்வி நிறுவனம் என்ற பாங்கில் பல ஆயிரக் கணக்கான மாணவர்களை அறிவுச் சுடர் மிக்கவர்களாக, ஒழுக்கமுடையவர்களாக உருவாக்க யாழ் மாவட் டத்தில் பல ஆயிரக்கணக்கான குடும்பங்களில் மகிழ்வுக்கு உரமாகச் செயலாற்றிய பெருமை எனது ஆசிரியர் திரு. வரதராஜா அவர்களின் பாதக் கமலங்களையே சாரும்.

எம் வாழ்வின் உயர்விற்கு உறுதுணையாக நின்ற பெரு விருப்பத்துக்குரிய கணிதத்துறை ஆசான் திரு. த. வரதராஜா அவர்களை நான் என்றென்றும் மறக்க மாட்டேன். ஆழ மான நினைவுகளை நீண்டகால கற்பித்தலின் ஊடாகத் தடம் பதித்த பெருமைக்குரிய குரு. பொறுமை, கண்ணியம், அக்கறை, வேகம் என்பவற்றை நாம் தங்களிடமிருந்தே கற்றோம். எனக்கும் எனது பிள்ளைகளுக்கும் கல்வியூட்டிய வல்லமையாளனான எம் ஆசான் சிறந்த ஆளுமையோடு தேக ஆரோக்கியத்தோடு நீண்ட காலம் வாழ்ந்து சேவை செய்ய அறுபதாவது அகவை நிறைவில் இறைவனின் ஆசி வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

**திரு. இராஜேந்திரம் ரகுமார்**
*பழையமாணவர், ஆசிரியர்,*
*கிளி/உருத்திரபுரம் மகாவித்தியாலயம்.*

# 60ஆவது அகவையில் எங்கள் ஆசான்!

அன்பில் அன்னையாகவும், கண்டிப்பில் தந்தையாகவும், நல் ஒழுக்கத்தைப் போதிப்பதில் நல்லாசானாகவும் இருந்து எமை வழிநடத்தி வாழ்வில் சிறக்க வைத்த எம் ஆசான் உயர்திரு. த. வரதராஜா அவர்கள் 60ஆவது அகவையில் காலடி பதிப்பதையிட்டு மகிழ்ச்சியடைவதுடன் மேலும் பல்லாண்டு காலம் ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

"ஆசிரியர் பணியே அறப்பணி
அதற்கே உன்னை அர்ப்பணி"

என்ற கூற்றிற்கிணங்க வாழ்ந்து கொண்டிருக்கும் ஆசானே மென்மேலும் உங்கள் சேவை தொடர என் வாழ்த்துக்கள்.

**நிருபன்**
*பழைய மாணவன், பெல்ஜியம்.*



# அகவை அறுபதில்...

அகவை அறுபதில் அடியெடுத்து வைத்த
அன்பான ஆசானே
மணி விழா ஆண்டில்
மணி மகுடம் சூடும்
மணிவிழா நாயகனே!

கல்விச் சேவைக்கு எடுத்துக்காட்டான சிகரம் நீ
மாணவர் உயர்ச்சிக்கு என்றும் ஏணிப்படி நீ
உன் சிந்தனை செயல் எல்லாமே
மாணவ சமூகத்தை நோக்கியே!



சிறந்த மனிதனாய் நற் சமூக சேவகனாய்
மனிதருள் மாணிக்கமாய் வாழ்ந்து காட்டும்
மணிவிழா நாயகனே
வாழ்க பல்லாண்டு!

உம் குடும்பம் உறவுகள் சுற்றத்தோடு
மாணவச் செல்வங்களின் பாராட்டுக்களோடு
பல்லாண்டு காலம் வாழ உளமார
வாழ்த்துகின்றோம்.

**இவ்வண்ணம்**
**திரு. ஆறுமுகம் விஜயபாலசிங்கம்,** கொலண்ட்,
**திரு. திருமதி விஜயா சுந்தரலிங்கம்,** ஜேர்மனி.



# வாழ்த்துரை

அகவை அறுபதை நிறைவு செய்யும் மணிவிழா நாயகர்

ஆசான் திரு. த. வரதராஜா அவர்களே!

"கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடுஅல்ல மற்றை யவை"

என்ற வள்ளுவர் வாக்கிற்கு அமைய உயர் செல்வமாகிய கல்விச் செல்வமதைத் தான் பெற்றதோடு தனக்கென ஒரு மாணவ பரம்பரையை உருவாக்கிய பெருமை எமது ஆசான் திரு. த. வரதராஜா அவர்களையே சாரும்.

இவர் கணிதத்துறையின் கடினத்தன்மையை இலகுவாக்கி சிறந்த நுட்ப முறைகளைக் கையாண்டு கணித விற்பன்னர்கள் பலரை உருவாக்கியுள்ளார். யா/ மத்திய கல்லூரியில் நீண்டகால ஆசிரியப் பணியாற்றிய இவர் இருபாலையிலுள்ள "எக்ஸ்பிறஸ்" கல்வி நிறுவனத்தின் இயக்குநராகவும், கணித ஆசானாகவும் இருந்து கல்விச் செயற்பாட்டை முதன்மைப்படுத்தி வருகின்றார். வகுப்பறையில் கரிசனையுடன் அவர் காட்டும் கண்டிப்பு கணிதத்தின் பால் பலரை ஈடுபடுத்தின.




இவ்வகையில் இவர் சமூகத்தில் நல் மாணாக்கர் பலரை உருவாக்கியதுடன், புலமையாளர்கள் பலரையும் இம் மண்ணுக்குத் தந்த பெருமை கல்விப்புல வரலாற்றில் மறக்கப்பட முடியாததொன்று.

மாண்புமிகு ஆசானின் கல்விச் சேவைகளும் நற்பணிகளும் பல்லாண்டு காலம் தொடர இறையருளை வேண்டி வாழ்த்துகின்றேன்.

நாம் வாழும் நாளிலும் பன்நாள்
நீரும் நும் சுற்றமும் சீரும் சிறப்பும்
பெற்று பல்லாண்டு வாழ்க வாழ்க.

**பா. சத்தியன் (மாணவன்)**
*பிராந்திய முகாமையாளர்,*
*இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்.*

# நாம் கற்ற அந்த நாள் ஞாபகம்

நாம் அறிந்த நாள் முதல் 'இருபாலை எக்ஸ்பிறஸ்' சிறிதாக இருக்கும் போதே நாம் காலடி எடுத்து வைத்தோம். எல்லாம் பழைய கட்டிடங்கள். ஆனால் இன்றோ ஒரு பக்கமாகவே மாடிக்கட்டடத்தோடு ஓங்கி செழித்து நிற்கும் 'எக்ஸ்பிறஸ்' என்றும் பல மரக்கிளைகளோடு பார்க்க மனம் சந்தோஷமடைகின்றது. இதற்குள் நம் பிள்ளைகள் படிப்பது இன்றும் சந்தோஷம்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற அறிவுரைக்குள் அடங்கிப் படித்த நாள் நினைவில் கல்வியே கண் என்பதுபோல், கணக்கிற்குக் கண் வரதனே. 30,32 வருடங்கள் பாட்டுக்குப் பாட்டு Music Chair என்னும் விளையாட்டில் சேரிடம் கொட்டனால் அடிவாங்கி மோதிரம் நெளிந்து நெளிவை எடுத்தது நினைவில். அரை குறை இங்கிலீசால் கதைத்து உங்களிடம் அடி வாங்கினது (Bus is coming varathan is coming) எப்படி மறக்க முடியும்.


இன்று பெருமையுடன் புன்னகைத்துக் கொண்டிருக்கும் அத்தனை முகங்களின் பின்பும் தழும்புகள் நிறைந்த மனம் இருக்கும். உங்கள் ஆர்வம் எதில் என்பதைக் காட்டி சில மக்கள், எங்களுக்குச் சொத்துக்களையும் பொருட்களையும் சேர்ப்பதில் குறிக்கோளுடன் இருக்கும் மக்களின் மத்தியில் நீங்கள் ஓர் எடுத்துக்காட்டாக, உங்கள் கணிதக் கல்வியோடு மற்றைய கல்விகளையும் கற்கப் பல மாடிக் கட்டிடங்களையும் எழுப்பி பாலர்களின் கதையையும் மகிழ்வித்து எக்ஸ்பிறஸ் வரதன் என்ற பெயர் பெரும் புகழுடன் உங்கள் 60ஆவது வயதை பெருமையுடன் வாழ்த்துகிறேன்.

இன்றைய குடும்ப நிலையறிந்து அவர்களை நேரிலும் பார்த்து கல்வியே கண் என்பதற்கு இலவசமாகப் படிப்பித்தது பெருமைக்குரிய விடயமாகும். எதிர்காலச் சந்ததியினரைப் பூஜித்து சிறந்த வழியை உருவாக்கி "முயற்சியின்றி இன்பம் ஒரு போதும் பிறப்பதில்லை" என்பதற்கு நீங்கள் ஓர் எடுத்துக் காட்டு.

நம்பிக்கையோடு அடியெடுத்து வைத்து சுபமாக சிந்தித்து செயற்பட்டு தன் வாழ்க்கைப்பாதையைத் தானே தேர்ந்தெடுத்து வெற்றியோடு 60 ஆவது வயதை எட்டிக் கொண்டாடும் மனம், மலரத் தேவையான சாவிகள் நம்மிடம் தான் உள்ளது என்பதை வெளிக்காட்டி பெற்றோர், மாணவர்களை தங்கள் சொல்லுக்குக் கட்டுப்பட்டு பேச்சில் பண்பை வெளிப்படுத்தி எல்லார் மனத்திலும் பெருமையை ஏற்படுத்திவிட்டீர்கள். திரும்பவும் உங்களிடம் படிக்க முடியாமல் நிற்கும் பொருட்டு எம் பிள்ளைகள் தங்களிடம் படிப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். 60ஆவது பிறந்த நாளைக் கொண்டாடி என்றும் பேரோடும் புகழோடும் நூறாண்டு காலம் வாழவேண்டும் என்று எம் குடும்பத்தோடு தங்களை வாழ்த்துகின்றோம்.

*என்றைக்கும் தங்கள் பழைய மாணவி,*

**இன்று** Mrs. **V. K. சர்மமாலினி',** *கோப்பாய்.*



வெற்றி வந்தால் பணிவு அவசியம்

தோல்வி வந்தால் பொறுமை அவசியம்

எதிர்ப்பு வந்தால் துணிவு அவசியம்

எது வந்தாலும் நம்பிக்கை அவசியம்

என்று எடுத்துக் காட்டினீர்கள்

நெறிமுறைகள் இல்லாத அரசியல்

உழைப்பில்லாமல் உருவான செல்வம்

மனச்சாட்சி இல்லாத மகிழ்ச்சி

நல்ல நடத்தை இல்லாத அறிவு

மனிதத் தன்மை இல்லாத அறிவியல்

அர்ப்பணிப்பு இல்லாத வழிபாடுகள்

இவை எல்லாம் சமூகப் பாவங்கள்

இவை நான்கும் மீண்டும் திரும்ப வராது.

நம்மை நல்வழிப்படுத்தும்

மிகப் பெரிய நீதி மான்

நம் மனச்சாட்சி தான்.

மனதில் பலமிருந்தால்

சிகரங்கள் நம் காலடியில்.

**Mrs. V. K. சர்மமாலினி**

# ஆயிரம் பிறை கண்டோங்கு

மணி விழா இன்று எங்கள்
மாண்புறு அதிபருக்கு...
இருபாலைக் கிராமம் தன்னை
எழில்பெற வைக்கும் எங்கள்
எக்ஸ்பிறஸ் நிறுவனத்தை
இத்தனை ஆண்டு காலம்
கண்ணெனக் கருதிக் காக்கும்
கணிதத்தின் வித்தகர் நீர்!



பதினெட்டு வயது தன்னில்
பாங்குடன் எக்ஸ்பிறஸைத்
தற்துணிவோடாரம் பித்துத்
தகவுற வளர்த்தெடுத்தீர்!
நாற்பத்திரெண்டாண்டாக
நாடெல்லாம் புகழச் செய்தீர்!
மாடியோடமைந்த நல்ல
வகுப்பறை வசதி தந்தீர்!

கட்டுப்பாடொழுங்கு தன்னைக்
கண்போல போற்றும் கொள்கை
எத்தனை இடர் வந்தாலும்
இறுக்கமாய் அதனில் நிற்பீர்!
ஆட்களைச் சேர்ப்பதற்காய்
அதில்நின்றும் விலகீர் சற்றும்
கற்பக விநாயகனின் கருணையே
துணையாய் கொள்வீர்.!!!
கருத்திலே கொண்ட கல்விக்
கொள்கையைச் செயற்படுத்த



எடுத்த உம் பணியினாலே
ஏற்றத்தைப் பலபேர் கண்டார்
ஏணியாய் அமைந்து மற்றோர்
ஏறியே உயர்ந்து செல்ல
சாதித்த பணிகள் தம்மைச்
சாற்றிட வார்த்தையுண்டோ?

ஆயிரம் பிறைகள் காண்பீர்!
அரும்பெறற் கல்வி தன்னை
சீரொடெம் சிறார்க்களித்தீர்
சிறப்புடன் வாழ்க வென்றே
ஆயிரம் இதயம் வாழ்த்தும்
அன்புடன் நன்றி கூறும்
எக்ஸ்பிறஸ் நிலைத்து ஓங்கி
எம் இன உயர்வு கூறும்.!!!

என்றுமே வளமாய் வாழ்க!
ஈடிணையற்ற எங்கள்
எக்ஸ்பிறஸ் புகழோடோங்க!
எதிர்காலச் சிறார்கள் நல்ல
கல்வியோடொழுக்கம் கொள்க!
கற்பக விநாயகனின் கருணை ஆசி
உங்கள் பக்கமாய் பலமாய் நிற்க!
பல்லாண்டு பல்லாண்டு வாழ்க!!!

**- எக்ஸ்பிறஸ் கல்விச் சமூகம் -**

# மணிவிழாக் காணும் நாயகன்

மணி விழாக் காணும்
மகத்தான சுடரே
வாழ்க நீர் வாழ்கவே
அறியாமை என்னும் இருளை அகற்றி
அகச்சுடர் ஏற்றும் - அற்புதனே
வாழ்க நீர் நீடு காலம்
மனித குலத்திற்கு மகத்தான பணிசெய்யும் நாயகனே
மனிதம் போற்றிட வாழ்க நீர்
மண் குளிர வான்பொழியும் மழைத்துளி போல்
மாணவர் அறிவைப் பெருக்க ஆண்டவர்
கொடுத்த அற்புதக் கொடை நீர்
இருபாலையின் இதயத்துடிப்பே
மாணவர் கல்வியின் அடித்தளமே
இகமதில் நீர் இன்னும் வாழ வேண்டும்
வாடிய பயிரிற்கு மழைபோல
கணித பாடத்திற்கு கங்கை ஆறுநீர்
வரதன் என்னும் உம் பெயரிற்கு
வரலாறுண்டு இம் மண்ணிற்கு
காலங்கள் மாறும் உலகில்
காணவில்லை உம்மில் மாற்றம்
தன்னலம் கருதாது நீர் ஆற்றும் சேவை
நூறாண்டு காலம் தொடர வாழ்த்துகின்றேன்.



**திருமதி அ. மெர்லின்,**

*முன்பள்ளி ஆசிரியை*

# கணிதத்தின் கலங்கரை விளக்கு




எனது நெஞ்சிற்கு நெருக்கமான நண்பன் திரு. த. வரதராஜா அவர்கள் அகவை அறுபதைப் பூர்த்திசெய்து மணிவிழாக் காண்பதையிட்டு உள்ளம் உவகை கொள்கின்றது. நண்பன் வரதனுடன் பலாலி ஆசிரியர் கலாசாலையில் 1982 - 1983ஆம் ஆண்டுவரை பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. அதனைத் தொடர்ந்து இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டில் நானும் ஓர் ஆசிரியராகக் கடமை புரியும் சந்தர்ப்பம் அன்றில் இருந்து இன்று வரையும் எனக்குக் கிடைத்துள்ளது.

இன்று யாழ் நகரில் இயங்குகின்ற தனியார் கல்வி நிறுவனங்களில் புகழ் பூத்த தனியார் கல்வி நிறுவனமாக நாற்பத்திரெண்டு வருடங்களாக இயங்குகின்றது என்றால் கணித பாடத்தை அன்றிலிருந்து இன்றுவரையும் மாணவர்களுக்கு எளியநடையில் இலகு நுட்ப முறையில் மாணவர்களின் மனத்தைக் கவர்ந்து அவர்களை நல்வழிப்படுத்தி அதன் மூலம் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக் கொடுத்து மாணவச் செல்வங்களுக்கு கணித பாடத்தின் 'கலங்கரை விளக்காகத்' திகழ்ந்தவர். அது மட்டுமல்ல தனியார் கல்வி நிலையத்தின் உரிமையாளராக இருப்பதுடன் அதன் அதிபராகவும் கடமையாற்றி அவருடைய நிர்வாகத் திறமையினாலும், ஆளுமை விருத்தியினாலும் இன்று பெரு விருட்ஷமாக அச்சுவேலி தொடக்கம் நல்லூர் வரையான இடங்களில் உள்ள மாணவர்கள் இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டில் கல்வி கற்று வருவதை எம் கண்ணால் காணமுடிகின்றது. இதற்குக் காரணம் நிறுவனத்தின் கடமை, கண்ணியம்,



கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தைச் சிறந்த முறையில் கடைப்பிடித்து வருகின்றமையாகும்.

இவர் முதலில் ஆசிரியராகவும் பின்னர் பயிற்றப்பட்ட கணித ஆசிரியராகவும், அதனைத் தொடர்ந்து பட்டதாரி ஆசிரியராகவும் தன்னை வளர்த்துக் கொண்டு இறுதியாக யாழ்ப்பாண மத்திய கல்லூரி பகுதித் தலைவராகவும் சேவையாற்றி இளைப்பாறினார். அதனைத் தொடர்ந்து தனது கல்வி நிறுவனத்தை ஓர் பாடசாலை போன்று முன்பள்ளி தொடக்கம் தரம் பதினொன்று வரையும் வகுப்புகளை நடத்தி ஏறத்தாழ 800 மாணவர்களையும் நாற்பது ஆசிரியர்களையும் கொண்ட நிறுவனமாகத் திகழ்வதை இன்று எல்லோரும் காணமுடிகின்றது.



இருபாலைகற்பகவிநாயகர் அருட்கடாட்சத்தால் இந் நிறுவனம் வளர்ச்சி அடைந்துள்ளது. இதற்காக வரதன் ஆசிரியர் இந் நிறுவனத்தின் மூலம் ஓர் திருவிழாவையும் செய்து வருகின்றார். தனது கல்வி நிறுவனத்தில் கற்பிக்கும் ஆசிரியர்களின் இன்ப துன்ப நிகழ்வுகளில் எப்படியும் பங்குபற்றி தானும் ஓர் பங்காகச் சேர்ந்து வாழ்கின்ற தன்மையும் கொண்டவர். மாணவர்களை என்றும் நல்வழிப் படுத்த வேண்டும் என்ற எண்ணத்தின் காரணமாக அவர்களுக்கு சாம பேத தான தண்டம் என்ற அடிப் படையில் அவர்களுக்குத் தண்டனை வழங்குவதன் மூலம் சிறந்த நற்பிரஜைகளாக மாற்றி வருகின்றார். அத்துடன் முன்பள்ளி கலைவிழா, நவராத்திரிவிழா, பரிசளிப்புவிழா, வெள்ளிவிழா, மாணிக்கவிழா போன்றவற்றைச் சிறப்புற நடத்தி மற்றவர்களின் நல்லாசிகள் பெற்று தனது நிறுவனத்தைச் சிறப்புற வளர்ச்சி அடையச் செய்து வருகின்றார்.

இவ்வாறு கல்விப்புலத்திற்கு அவர் ஆற்றிக்கொண்டிருக்கும் சேவைகள் மேலும் சிறப்புற அமைவதுடன் அவரின் பணிகளுக்கு மதிப்பளித்து எடுக்கப்படும் மணிவிழா நிகழ்வுகள் சிறப்புற அமைய எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் இறையாசியை வேண்டுகின்றேன்.

**S.K. சண்முகலிங்கம்** J.P
*ஓய்வுநிலை அதிபர்*


# மனிதருள் மாணிக்கம்



யாழ்ப்பாணக் கல்வி உலகத்தில் தனக்கென ஒரு தனியிடம் பிடித்துள்ள இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டின் பணிப் பாளர் திரு. த.வரதராஜா அவர்கள் மணிவிழாக் காணும் காட்சி எமக்கெல்லாம் மிகுந்த ஆனந்தத்தைத் தருகிறது. காரணம் ஒரு ஸ்தாபனத்தலைவர் எப்படி இருக்க வேண்டுமோ அப்படியே அனைத்துத் தகைமைகளும் பெற்று, ஒரு பல்துறை ஆளுமை மிக்கவராகத் தனது ஸ்தாபனத்தை வளர்த்தெடுத்து வருகின்றார். தனது ஸ்தாபனத்தை நோக்கிவரும் மாணவருக்கு ஒரு விடிவெள்ளியாக இருக்க வேண்டும் என்ற வேணாவாக் கொண்டு உழைப்பவர் தான் இவர்.

ஒரு திறமையான ஸ்தாபனத் தலைவராகத் திகழ அவரின் உண்மை, நேர்மை, தூய்மை, அன்பு, அறிவு, கண்டிப்பு, ஆற்றல், எளிமை ஆகிய அனைத்தும் அவரிடம் நிறைந்துள்ளது. இறையன்பு கொண்டவராய் பிறர் நலச் சேர்வைக்காய் தன் உயிர், உடல், ஆவியை அர்ப்பணித்து சேவை புரியும் ஆவல் கொண்டவராய் இருகின்றார். கடமையைக் கண்ணாய், உயரிய இலட்சியத்துடன் உழைக்கும் உன்னத வழிகாட்டியாக இருப்பவர் தான் அவர். இத்துணை நலன்களும் கிடைக்கப்பெற்ற மனித மாணிக்கம் தான் வரதராஜா என்பதில் எமக்கும் மிக்க மகிழ்ச்சியே.

அடைய வேண்டிய இடத்திற்குப் பாதை தெரியாது அங்கலாய்த்து நிற்கும் ஒருவனுக்கு, இந்தா, இப்படிப் போய் அந்தச் சந்தியில் திரும்பி அப்பாற் திரும்பி அடுத்து வரும் சந்தியில் நுழைந்து அங்கே தெரியும் ஆற்றைக் கடந்து அடுத்து வரும் படகில் ஏறிச் சென்று நீ தேடும் ஊரைப் பெற்றடை என்று வகுப்பு எடுப்பதை விட்டு, என்னைப் பின்தொடர் என்று கூட்டிச் சென்று சரியான இடத்தில் விடுபவன் எவ்வளவு உன்னதமானவன்? அவர் தான் வரதராஜா.



கிறிஸ்து நல்வழிகாட்ட 'என்பின்னே வா' என்று மட்டும் சீடரை அழைத்துச் சென்றார். அதேபோல், வளரும் பயிருக்கு நீர் ஊற்றி பசளை இடுவது போல், வளரும்



பிள்ளையொன்றுக்குப் பழக்கவழக்கங்களையும் பண்பையும், நல்லொழுக்கத்தையும் மூளையிலும் இதயத்திலும் புரியவைத்து, அப்பிள்ளைக்கு முன் உதாரணமாகச் செயற்படுவது மிகக் கடின மான காரியம். ஆனால் எம் ஸ்தாபனத் தலைவர் நல்ல தாயாக, குருவாக, காவலனாகச் செயற்பட்டு அவனுக்கு நல்லறிவு ஊட்டுவது நாம் அனைவரும் கண்டு கொண்டதே.

ஒரு பாடசாலையை எடுத்துக் கொண்டால் அங்கு அதிபர், உபஅதிபர், பகுதித்தலைவர், வகுப்பு ஆசிரியர்கள், ஆசிரியர்கள் என்றும் பல குழுக்கள், பல முதல்வர்கள் என்றும் பலர் கடமையாற்றுவர். விளைவு 0 தான். ஆனால் இங்கு தனிஒருவன் விளைவு ஆயிரம் ஆயிரம் நற்பிரஜைகளை உருவாக்கி சமூ கத்தின் உயர் ஸ்தானத்தில் நிலை நிறுத்தி வைப்பவன் யார்? அது வரதராஜா சேர்.

நான் பிறந்தது 1973, சேர் இந்த ஸ்தாபனத்தைத் தொடங்கியதும் 1973, அவர் என்னிடம் கூறினார் " இந்த ஸ்தாபனத்திற்கு உன் வயது, ஒழுக்கமாக நட" என்று இன்றுவரை என்மனதில் அந்தக் கூற்று இருக்கிறது.

சில தனியார் கல்வி நிறுவனங்களில் சில ஆசிரியர்களிற்கு மட்டும் என்ற நிலை உண்டு. ஆனால் எத்தனையோ திறமையான ஆசிரியர்கள் அங்கு எடுபட மாட்டார்கள். ஆனால் இந்த நிறுவனத்தில் மாணவருக்குத்தான் ஆசிரியர் "செய் அல்லது விட்டிட்டுப் போ" என்ற கண்டிப்பு எமது நிறுவுனரது கூற்று.

ஒரு முறை நான் வீட்டுச் சூழ்நிலை காரணமாக அறிவிக்காது நின்று விட்டேன். அடுத்த நாள் வகுப்பிற்கு எப்படிச் செல்வேன், எப்படி சேர்முன் முளிப்பேன் என்ற பயத்தில் அடுத்த நாளும் செல்லவில்லை. மதியம் நான் நித்திரையில் இருந்தேன். திடீர் எனக் கதவைத் திறந்து கொண்டு ஒருவர் நிற்பது தெரிந்தது. எழுந்து பார்த்தால் சேர். ஒரு கதையும் இல்லை. "டேய் பத்து நிமிடத்தில் வகுப்பில் நிற்க வேண்டும்" என்று கூறிவிட்டுப் போய் விட்டார். எனது வீட்டில் எல்லோரும் என்னைப் பேசாத பேச்சில்லை. உடனேயே ஓடிப் போய்ச் சேர்ந்து விட்டேன், ஏன் இதை இவ்விடத்தில் கூறுகின்றேன் என்றால் அவரிடம் கண்டிப்பு நிறையவே இருந்தாலும் இரக்க குணம் அதிகமாகவே உள்ளது.

என்றும் எங்களது தலைவர் சகல வரம்பெற்று, சந்தோஷமாகவும், நோயற்ற வாழ்வும், நீடித்த உழைப்பும் உடையவராய் திகழ வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

நன்றி

**அ. நிரஞ்சன்**

*விஞ்ஞான ஆசிரியர்*

# தலைமையின் சிகரம்



முன்னொரு காலத்திலே தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் போர் இடம் பெற்றது. அப்போரிலே அசுரர்கள் தேவர்களைத் தோற்கடித்து விட்டார்கள். தேவர்கள் தம் தோல்விக்குரிய காரணத்தை ஆராய்ந்து பார்த்த பொழுது தமக்கு ஒரு நல்ல தலைவர் இல்லை என்பதை உணர்ந்து கொண்டார்கள். உடனே தமக்குப் பொருத்தமான சிறந்த தலைவராக இந்திரனைத் தேர்ந்தெடுத்து போரில் வெற்றி பெற்றனர். இக்கதை எமக்கு எதை உணர்த்துகிறது என்றால் எந்த ஒரு செயலாக இருப்பினும் சிறந்த தலைமை வேண்டும். அப்படிப்பட்ட ஒரு சிறந்த தலைவராக, அதாவது மாணவர்களின் வெற்றிக்குரிய தலைவராக விளங்குபவர் இன்று மணிவிழாக் காணும் ஆசான் திரு. த. வரதராஜா அவர்கள் எனக் கூறின் மிகையாகாது.

இற்றைக்கு நாற்பது வருடங்களுக்கு மேலாக கல்விப் புலத்தில் தன்னை இணைத்துக் கொண்டு சேவை ஆற்றிவரும் இவர் தனக்கென்றொரு தனித்துவமான கொள்கைகளை உருவாக்கிச் செயற்படும் ஒருவராக விளங்குபவர். பாடசாலைகளிலும் சரி தனது கல்வி நிறுவனத்திலும் சரி தனது தலைமைத்துவத்தினையும் கற்பித்தலையும் தனித்துவமாகச் செயற்படுத்துபவர். தனது கல்வி நிறுவனமாக விளங்கும் 'எக்ஸ்பிறஸ்' நிறுவனம்





இன்று நாற்பது ஆண்டுகளையும் தாண்டி வீறு நடை போட்டு செயற்பட்டுக் கொண்டு இருப்பதற்கு ஒரே ஒரு காரணம் தான் சொல்ல முடியும். அது மணிவிழா நாயகனின் தலைமையும்அவருடைய நிர்வாகத்திறனுமேயாகும். அன்று தேவர்கள் சிறந்த தலைவனாக இந்திரனைத் தெரிவு செய்தார்கள் இன்று மாணவர்கள் தங்களின் கல்வியின் வெற்றிக்கு சிறந்த தலைவனாக வரதராஜாவைத் தெரிவு செய்தார்கள் அதனால் தங்கள் கல்விப்பெறுபேற்றில் வெற்றி பெற்றார்கள், பெறுகின்றார்கள்.

இன்று யாழ். மண்ணில் எங்கும் காணமுடியாத அளவுக்கு நவீனமயப்படுத்தப்பட்ட கவின்நிலைப்படுத்தப்பட்ட கட்டிடத்தொகுதிகள் கொண்டு இயங்கும் ஒரு கல்வி நிறுவனமாக விளங்கும் 'எக்ஸ்பிறஸ்' பல பரம்பரையினரை உருவாக்கிய நிறுவனம். ஏனெனில் பெற்றோர்கள் தாம் படித்த நிறுவனம் சிறந்த நிறுவனம் ஆகையால் பிள்ளைகளை இணைத்துக் கற்பிக்கும் செயலையும் காணமுடிகிறது. இதற்கு எல்லாம் அடித்தளம் இட்டவராக விளங்குபவர் மணிவிழா நாயகனே.

மணிவிழா நாயகனிடம் இருந்த எம்மைப் போன்ற இளம் ஆசிரியர்கள் பெற்றுக் கொள்ள வேண்டிய படிப்பினைகள்:

i. சிறந்த தலைமைத்துவம்

ii. நேரமுகாமைத்துவம்

iii. நிர்வாக ஒழுங்கமைப்பு

iv. கடமையுணர்வு

v. கற்பித்தல் உத்திகள்

இவ்வாறான சிறந்த பண்புகளைக் கொண்டு விளங்கும் வரதன்சேர் என்று எல்லோராலும் அழைக்கப்படும் திரு. த. வரதராஜா சேர் அவர்களின் சேவை என்றும் மாணவர்களுக்குத் தேவை ஆகையால் அவருடைய சேவை தொடரவும், நீண்ட ஆயுளுடன் வாழவும் எல்லாம் வல்ல கற்பகவிநாயகரை வேண்டி, வாழ்த்தி வணங்கி நிற்கின்றேன்.

"வாழ்க வளமுடன்"

**பொ. கேதீஸ்வரன்**

*நிறுவன ஆசிரியர்*

# சாதனை நாயகன் எம் நிறுவன அதிபர்



"பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்"

உலகப் பொதுமறையாம் திருக்குறள். பெருமை உடையவர் பற்றி மேற்கண்டவாறு கூறுகின்றது. அதாவது பெருமை உடையவர்கள் செய்வதற்கு அரிய செயல்களைச் செய்ய வல்லவர்கள் ஆவார். மணிவிழாக் காணும் நாயகன் எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டின் அதிபர் திரு. தம்பிப்பிள்ளை வரதராஜா அவர்களின் ஆசிரிய வாழ்வும், தன்நலம் கருதாப் பயனுறு பணிகளும் வள்ளுவர் வகுத்த நெறியை வாழ்வில் பின்பற்றிய பெருமைக்குரியவராகவே அவரை எண்ணத் தோன்றுகின்றது.

எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டில் 42 வருடங்களைப் பூர்த்தி செய்து மங்காச் சிறப்புடனே மணிவிழாக் காணும் விழா நாயகன் அவர்கள் பாடசாலைக்கும் எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டிற்கும் அரும்பணி ஆற்றியுள்ளார் என்பது வெள்ளிடை மலை. எனவே தான் எக்ஸ்பிறஸ் சமூகமும் பழைய மாணவர்களும் ஒன்று திரண்டு நிறுவன அதிபருக்கு விழா எடுக்க முன் வந்துள்ளனர்.

நான் இந் நிறுவனத்தில் சேர்ந்து கற்றுக் கொண்ட விடயங்கள் பல. அவற்றை எல்லாம் இங்கு எழுத்துருவில் வடிக்க இயலாது. எம் நிறுவன அதிபரின் செயற்றிறன் பற்றி மற்றவர் கூறி விளங்க வேண்டியதில்லை. மாணவர்களின் ஒழுக்கத்திலும் அவர்களின் கல்வி வளர்ச்சியையும் அவதானிப்பதில் கண்ணும் கருத்துமாக இருப்பவர் ஆசிரியர்களுடன் இங்கிதமாகப் பழகுபவர். தனக்கு சரி என்பதை மற்றவர்களுக்காக விட்டுக்கொடுக்காது உறுதியாக நின்று செயற்பட முனைபவர்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

என்ற குறளுக்கு ஏற்ப புகழுடன் வாழ்ந்து மாணவர் நெஞ்சங்களில் வஞ்சமறக் குடிபுகுந்தவர் "வரதன் சேர்" என்றால் சமூகத்திலும் சரி, பாடசாலைகளிலும் சரி தெரியாதவர்களே இருக்க முடியாது. கட்டாயக் கல்வி விடயத்தில் தொடர்ந்து வராத மாணவர் பற்றிய விபரத்தைத் தெரிந்து அக்கறையுடன் செயற்படுபவர். அப்படியான பல மாணவர்களை இனங்கண்டு பெற்றோருடன் தொடர்புகொண்டு அவர்களைத் திரும்பவும் நிறுவனத்துக்கு வரவைத்து அவர்களின் கல்வியில் ஒளியேற்றுவார். எல்லா வகுப்பு மாணவர்களையும், அவர்களின் செயற்பாடுகளையும் அவதானித்து எப்படி அணுக வேண்டுமோ அவர்களை அப்படி அணுகி நல்வழிப்படுத்துவதில் வல்லவர். அவர்களின் தவறுகளை அவர்களே உணரும்படி செய்வார். கடமை நிமித்தம் சில சமயம் கடுமையாக நடந்து கொண்டாலும் மற்றைய நேரங்களில் எல்லோருடனும் இனிமையாகப் பழகும் சுபாவம் உடையவர். "எக்ஸ்பிறஸ்" நிறுவனத்துக்கு கல்வி கற்க வரும் மாணவர்களின் போக்குவரத்தில் தன் பிள்ளைகள் போல் கவனம் செலுத்தி உறுதுணையுடன் செயற்படுவர்.

இதைக் கண்ணூடாக நாம் காண லாம்.



எல்லாவற்றுக்கும் மேலாக அதீத கடவுள் பக்தி உடையவர். மாணவர்களின் கல்வி வளர்ச்சி மேம்பாடு அடையவும், இறை அருளை வேண்டியும் எம் நிறுவனத்தில் 'சரஸ்வதி தேவி' யின் சிலைவைத்து, அதனை நாள்தோறும் மாணவர்களை வழிபடச் செய்தும், ஆண்டு தோறும் நவராத்திரி விழாக்களை நடாத்தி இலைமறை காயாக மாணவர் திறமைகளை வெளிக்கொண்டு வருபவர். அது மட்டுமன்றி இருபாலை கற்பக விநாயக ஆலயத்தில் மகோற்சவ காலத்தில் எக்ஸ்பிறஸ் நிறுவனமும், ஆசிரியர்கள், மாணவர்கள் இணைந்து ஆலயத் திருவிழாக்களை நடாத்துவது ஓர் எடுத்துக்காட்டாகும்.

அது மட்டுமல்லாது "சிறுவர் மழலைப் பூங்கா" வினை உருவாக்கி மழலைகளின் கல்வி, ஆடல், பாடல், விளையாட்டு, கலைநிகழ்வுகளை நடத்தி சிறார்களின் கல்வியில் விடிவெள்ளியாக இருந்து தன் நலம் கருதா சேவையை வழங்கியவர்.

இவர் பெயரில் வரதராஜா இருப்பினும் எக்ஸ்பிறஸ் நிறுவனத்துக்கே "ராஜ சாம்ராச்சியம்" போல செயற்பட்டார். அவரது நடையின் கம்பீரம், பேச்சில் நேர்த்தி, எதையும் வெளிப்படையாகக் கூறும் இயல்பு, மனதில் இரக்க சுபாவம் என்பன சான்றாகும். சாதனை நாயகன் ஆசிரியர், மாணவர்களுக்கு நல்வழிகாட்டி, பெற்றோர், பழையமாணவர், நலன் விரும்பிகளை இன்முகத்துடன் வரவேற்கும் வரவேற்பாளர் என எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டின் பல்வேறு பரிமாணங்களில் செயற்படுபவர். கல்வி கற்பித்த காலங்களில் நல்ல மாணவர்களை உருவாக்கியவர். இவரது மாணவர்கள் இன்றும் பல இடங்களில் உயர் நிலைகளில் இருப்பதை நான் நன்கு அறிவேன்.

தனது அகவை அறுபதால் மணிவிழா நாயகனாக விளங்கும் அதிபர் திரு. தம்பிப்பிள்ளை வரதராஜா அவர்கள் இனிவரும் காலங்களில் நிறுவனத்தின் பொன் விழா, பவளவிழா, நூற்றாண்டு விழாக்களையும் இனிதே பூர்த்தி செய்து, தன்னுடைய மானிடப் பிறவியை கல்விப்பணிக்காகவும், நிறுவனத்தின் வளர்ச்சிக்காகவும், செலவழித்து அவர் தன் குடும்பத்தாருடன் சிறந்த உடல், உள ஆரோக்கியத்துடன் நீண்ட காலம் வாழ எல்லாம் வல்ல கற்பக விநாயகப் பெருமானை வேண்டி இம் மணிவிழா நாளில் பிரார்த்திக்கின்றேன்.

"நாம் அன்றும் இன்றும் என்றும் அவரது குழந்தைகளே"

வாழ்க பல்லாண்டு வளமுடன் வாழி!

**ச. நியந்தி**
*நிறுவன ஆசிரியை*

# கணிதத்தின் கலங்கரை விளக்கு

வயலும் வயல்சார்ந்த நிலமுமாகக் காணப்படும் இருபாலை என்னும் கிராமமாகும். இது கிராமமாகக் காணப்பட்ட போதிலும் நகர்ப்புறச் சாயல் அதிகம் காணப்படுகின்றது. இக் கிராமத்தின் மத்தியில் கல்வி அறிவூட்டிக் கொண்டிருக்கும் நிறுவனமாக எக்ஸ்பிறஸ் கல்வி நிறுவனம் காணப்படுகின்றது. இது 40 ஆண்டுகளுக்கு மேலாகத் தனது கல்விச் சேவையை இக் கிராம மக்களுக்கு வழங்குகின்றது.

கல்வி நிறுவனத்தை, தனக்கே ஓர் பணியை உருவாக்கி ஏனைய கல்வியியலாளர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்து பெரு மதிப்பைப் பெற்ற ஆசானாகத் திகழ்பவர் திரு. வரதராஜா ஆசிரியர் ஆவார். கணிதத்துறையில் இவருக்கு நிகர் இவரே.

ஒரு சிறந்த கணித ஆசானாக ஒரு நிறுவனத்தின் அதிபராக, கிராமத்தின் தொண்டனாக கற்பக விநாயகரின் அடியவனாகப் பல்வேறு பரிணாமங்களைக் கொண்டவர்.

ஒரு கல்வி நிறுவனத்தை ஆரம்பித்து 40 வருடங்களுக்கு மேலாகக் கல்வியூட்டி எந்தவித சிரமமும் இன்றி இயக்கி வருதல் என்பது ஓர் விசேட இயல்பாகும். இதற்கு ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர்கள் தேவை அறிந்து அவர்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டி இன்பதுன்பங்களில் கலந்து கொண்டு சிறப்பித்து வருதல். அவரின் தனித்துவத்திற்கு அதிக தொலைவிலிருந்து கூட மாணவர்கள் தேடி வருகின்றார்கள் என்றால் அதிபரின் ஆளுமைமிக்க கட்டுப்பாட்டுடன் கூடிய சிறந்த கல்வி அறிவூட்டும் நிறுவனமாகத் திகழ்வதே ஆகும்.



கல்வி என்னும் கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கும் மாணவசமூகத்திற்கு ஓர் கலங்கரைவிளக்காக இருந்து கரைசேர்த்து நல்ல வாழ்க்கைக்கு வழிகாட்டும் எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டும் இயக்குநர் வரதராஜா ஆசிரியர் அவர்களும் நீண்டகாலம் வாழ்ந்து மாணவச் செல்வங்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்று எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**இராசா. அரசகுலசூரியன்,**
*சேவைக்கால ஆசிரிய ஆலோசகர், விஞ்ஞானம்,*
*யாழ். கல்விவலயம்.*

அகவை அறுபதிலே அடிபதிக்கும் Express Institute அதிபர்

திரு. வரதன் அவர்களை வாழ்த்தும்

# வாழ்த்துப்பா



கரும்பினிலும் இனியதான - ஆனால்
கற்றுணரச் சற்றே கடினமான
விந்தை மிகு கணிதமதை
சிந்தையிலே இருத்தி நின்று
தன்னரிய அருந் திறத்தால்
மற்றவர்க்குப் புரிய வைத்து
வாய்மை வழி நேர்மை ஏற்று
வையகத்தில் வாழும் எங்கள்
அழகொளிரும் இருபாலை வாழ்
முடி சூடா மன்னன் அவர்
வாழிய வாழியவே...



கல்விக் கனியமுதை
அள்ளி வழங்கி என்றும்
மாண்புமிகு மாணவரை
தரணி போற்ற செதுக்கி நிற்கும்
விந்தை மிகு கல்விக் கூடம்
Express இன் பிதா மகன்
வாழிய வாழியவே...

கல்வியுடன் கட்டுப்பாட்டை
பண்புடனே பயிற்றுவித்து
நல்லதொரு சந்ததியை
நானிலத்தில் ஏற்றி வைத்து
கல்வியினால் தன் கிராமமதை
விண்ணறிய செய்து என்றும்

கல்விப் பணி ஆற்றி நிற்கும்
தன்னிகரல்லா தொண்டன் அவர்
வாழிய வாழியவே...
மழலைப் பூங்கா முதல்
கல்விக் கூடம் வரை - தன்
சிந்தனையில் உதித்திட்ட
நல்ல பல எண்ணங்களை
செயற்திறனில் காட்டி நின்று
வேண்டி பல மாணவர்கள்
நாடி நிதம் விரும்பி வர
ஊக்கலுடன் பணி செய்து
உத்தமராய் வாழும் அவர்
வாழிய வாழியவே...



கடினமதன் உள்ளே ஒரு
அருங் கனியிருக்கும் என்பதனை
நின்று நிஜத்தினிலே காட்டி என்றும்
நாடி வரும் மாணவரை
செதுக்கி நிற்கும் சிற்பி அவர்
தரணி போற்ற வாழியவே
வேண்டி நிற்கும் செல்வமெல்லாம்
நிலை பெற்று வாழியவே
நோயற்ற வாழ்வு பெற்று
என்றென்றும் வாழியவே
விண்ணவர்கள் மலர் தூவ
மண் சிறக்க வாழியவே
வாழிய வாழியவே...

**திரு. ம. நவஜீவா**
ஆசிரியர், எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்.

# மணிவிழா நாயகன்



மணிவிழா நாயகரே! மங்காத புகழொளியே!
கணித பாடத்தின் வித்தகரே! கலசமாய்த் திகழ்பவரே!
தணியாத எக்ஸ்பிறஸ் பயணத்தில் தயங்காது
தனிச் சிகரமாய் ஜொலிக்கும் வல்லவரே வாழியவே...

கற்றவர்க்கும் மற்றவர்க்கும் கல்வி பயில் மாணவர்க்கும்
எற்றவர்க்கும் தேவையறிந்து நல்லுள்ளத்துடன்
உற்றவராய் உடனிருந்து சேவை செய்யும்
வற்றாத நதியாய் உள்ளம் கொண்ட வற்றோன் வாழியவே...



திண்ணமாய் மாணவர்க்கு கணிதத்தைக் கற்பித்து
எண்ணமதில் உறைந்து நிற்கும் உயர்வோனே
வண்ணமாய் மாணவர் மனதில் பதிந்திருந்து
மண்ணில் நீடு புகழ் கொண்ட ஒளிரோன் வாழியவே...

வளம் பெருகும் வல்ல இருபாலை யூர்தனில்
வந்துதித்து இமயமாய் நிமிர்ந்து நிற்கும்
வரதன் ஆசானே! வளம் பல பெற்று
வையகம் தனில் இன்புற்று வாழி... வாழியவே....

**ச. ஜீவன்,**

*கணிதபாட ஆசிரியர்.*

# மணிநாயகரில் மாமனிதர்



"அறிவுடையார் ஆவ தறிவார்"

என்ற முதற்பாவலரது குறள் நிறுவன முதல்வருக்கே சாலப் பொருந்தும். எம்மைப் பொறுத்த மட்டில்; பிறந்தார் ஒருவரும் சாதிப்பதில்லை. ஒன்றை சாதிப்பதற்காகவே பிறந்த உத்தமர் எம்மதிபர்!

எளிமையான தோற்றம்; ஆடம்பரமற்ற வாழ்க்கை; தன்னையே உருக்கி ஒளிவிடும் தீபம்; அவரே வரததீபம்! வாழ்த்துவதில் என் சிந்தனையில், என் உணர்வில், என் நாவில் வார்த்தைகள் வரவில்லை. இனியும் வராது. ஏன்...? விடை பூச்சியம்! எம் முதல்வரது சேவைகளை வடிக்க இப்போது ஒரு கவிஞனும் இல்லை! சோழர்காலத்தில் வரததீபம் தன் ஒளியைப் பிரகாசித்திருந்தால் கம்பன் இன்னொரு காப்பியத்தைப் படைத்திருப் பான். வரத தீபத்தில் தவறா? கம்பனில் தவறா? சற்று சிந்திக்க வேண்டும் எம் கல்விச் சமூகம்!

அதிபரது கணித நுண்புலன்கள் அவரது சிந்தனையில் புகுந்து விளையாடும். கோப்பாய் ஆசிரியர் கல்லூரி மாணவர்கள் மாலை வேளைகளில் கணித பாடத்தினை கற்பதற்கு எக்ஸ்பிறஸ் நிறுவனத்திற்கு வருகை தருவது இதற்கோர் எடுத்துக்காட்டு.

"தனிமரம் ஒருபோதும் தோப்பாகாது" என்பதற்கமைய ஆன்றோர்கள், சான்றோர்கள், விரிவுரையாளர்கள், கல்விமான்கள், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள், பெற்றோர்கள் என பல்வேறுபட்ட துறையினரும் வரததீபத்தில் கலந்துள்ளனர். அதன் பயனாக இந் நிறுவனம் விரைவில் பொன்விழா காண உள்ளது. "நேற்று பெய்த மழைக்கு முளைத்த காளான்" அல்ல எக்ஸ்பிறஸ் கல்வி நிலையம். ஒரு தனி மனிதர் தொடங்கி வைத்த பெரும் ஆல விருட்சம்.

இன்றைய கல்விச் சமூகத்தில் கற்றல் - கற்பித்தல் முரண்பாடுகளை சீர்செய்து, நேர் வழியில் கற்றல் இடர்பாடுகளை நீக்கி, கணிப்பீட்டு நுட்பங்களை உள்வாங்கி கற்றலை மேம்படுத்துவது எக்ஸ்பிறஸ் கல்வி நிறுவனமே என்று கூறுவதில் மிகையாகாது. இவ்விடயம் உள்ளார்ந்த உணர்வுகளோடு கற்பிக்கின்ற எம் நிறுவன ஆசிரியர்களுக்கு மட்டுமே புரியும் ஏனையோருக்கு அது புரியாத புதிர்தான்.

என்னைப் பொறுத்த மட்டில் ஆசிரியர் கலாசாலைகள் வேண்டாம்; ஆசிரியர் கல்லூரிகள் வேண்டாம். இங்கு கற்பித்துத் தேர்ச்சி பெறுகின்ற ஆசிரியர்கள் எப்பாடசாலையிலும் தனது வினைத்திறனை வெளிப்படுத்துவர். இதுவே நிதர்சனம்; இது தான் உண்மை!

"தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெள்ளீர்க் கயத்துச் சிறுமீன் சினையிலும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே!"

இவ் வெற்றிவேற்கை பாடல் வரததீபத்திற்கு மட்டுமே உரியது. இன்று தொள்ளாயிரம் மாணவர்களையும், நாற்பத்திரண்டு ஆசிரியர்களையும் ஐந்து ஆளணியினர்களையும் கொண்டு மிகப் பிரமாண்டமான மாடிக்கட்டடங்களில், அமைதி யான கற்றல் சூழலில், நவீன வசதிகளுடன், கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறுவதைக் கண்டு கல்விச் சமூகம் வியப்பில் ஆழ்ந்துள்ளது. இந் நிறுவனமானது வெள்ளிவிழா, மாணிக்கவிழா என்பவற்றைக் கொண்டாடி; பொன்விழாவினை மிகப் பெரிய அளவில் கொண்டாடி மகிழ்வதற்குத் தன்னைத் தயார்படுத்தி வருகின்றது.

இந்நிறுவனத்தில் பாடசாலை முன்னாள் அதிபர்கள், ஆசிரியர் கல்லூரி விரிவுரையாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் கற்பித்து வருவது இவ்விடத்தில் குறிப்பிடத் தக்கது.

நிறுவன முதல்வரது உன்னத சேவை போற்றுதலுக்குரியதே; வாழ்த்துவதற்கு உரியதே. இன்று இந் நிறுவன செயற்பாடுகளைக் கூர்ந்து அவதானித்து ஏனைய கல்வி நிறுவனங்களும் இத்தகைய செயற்பாடுகளைப் பின்பற்றத் தொடங்கி தோல்விகளைச் சந்தித்து வருகின்றன. அதற்குரிய காரணங்களை அவர்களால் இன்னும் கண்டு அறியாதது வேதனைக்குரியது. அவர்களின் நோக்கம் வருமானம் மட்டுமே. ஆனால் இங்கு மாணவர்கள் நலன் கருதி நிறுவனத்தின் பேருந்து சேவையும், முன்பள்ளிச் சிறார்களுக்கென இன்னொரு பேருந்து சேவையும் இடம் பெறுகின்றன. மாணவர்களின் பாதுகாப்பு முழுமையாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு, Book Stall நிறுவனத்தில் ஆரம்பிக்கப்பட்டு மிகக் குறைவான விலையில் கற்றல் உபகரணங்கள் விநியோகிக்கப்படுகின்றன. மேலும், கிராமசேவகரால் உறுதிப்படுத்தப்பட்ட வசதி குறைந்த மாணவர்களுக்கு இலவசக் கற்பித்தல் செயற்பாடுகளும், இலவசப் போக்கு வரத்து சேவைகளும் இடம்பெற்று வருகின்றன. இவையாவும் எமது நிறுவன முதல்வரது உள்ளத்தில் உதித்த காருண்ய நிகழ்வுகள் ஆகும். வருமானம் என்பது இரண்டாம் கட்டம். கல்வியே முதன்மையானது என்பதே சமூகத்திற்கு முதல் தெளிவுபடுத்தியவர் எமது வரத தீபமே

எமது ஆசிரியர் குழாமினைப் பொறுத்த மட்டில் கலங்கரை விளக்காகத் திகழ்கின்ற எமது வரததீபம் பவளவிழா, அமுதவிழா, முத்துவிழா என்பவற்றோடு நூற்றாண்டு விழாவையும் சிறப்புறக் கொண்டாடி கல்விச் சமூகத்தினை மேன்மேலும் கட்டியெழுப்புவதே பேரவா! இவற்றுக்கு எல்லாம் வல்ல கற்பக விநாயகர் அருள் புரிய வேண்டி நிற்கின்றேன்.

வாழ்க நும்புகழ்!

வளர்க நும்பணி!

**ஐ. றமேஷன்**

நிறுவன ஆசிரியர்.

# தனக்குவமை இல்லாதான்

எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் அதிபராகவும், யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் ஆசிரியராகவும் கடமையாற்றி 01.03.2015இல் தனது 60ஆவது அகவையில் பிரவேசிக்கும் ஆசானுக்காக 'வரததீபம்' எனும் மலர் வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். கற்றவர்களையும் அதற்கேற்ப ஒழுகுபவர்களையும் கொண்ட இருபாலையில் தனக்கென ஒரு தனியிடம் பதித்த ஆசானுக்கு மணி விழா எடுப்பது சாலச் சிறந்த ஒன்றாகும். இருபாலையின் புகழை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் மூலம் உலகறியச் செய்து அவ் நிறுவன வளர்ச்சியில் அல்லும் பகலும் உழைத்து கணித பாட ஆசானாகப் புகழ் பூத்த இவ் விழா நாயகனை வாழ்த்துவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தமையை இட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். நேர முகாமைத்துவம் என்றால் என்ன என்பதனை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் அதிபரின் செயற்பாடுகள் மூலம் இலகுவில் அறிந்து கொள்ளலாம்.

எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டில் கல்வி கற்று உள் நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் பல உயர் பதவிகளில் இருப்பதற்கு அடித்தளம் அமைத்தவர் இன்று மணி விழாக் கொண்டாடும் நாயகன் என்றால் அதற்கு மாற்றுக் கருத்து இல்லை. இவரிடம் உள்ள முகாமைத்து வப் பண்பும் ஆளுமைத்திறனும் போற்றுதற்கு உரியது. தன்நலம் பாராது கடமை தன்னைக் கண்ணியமாய்ச் செய்த கருமவீரன். கல்வியை மட்டும் அல்லாது ஒழுக்க நெறிமுறைகளையும் போதித்து எதிர்காலத்தில் சிறந்த சிற்பிகளாய் மாணவர்கள் மிளிர அடித்தளம் இட்டவர்.



திட்டமிடலுடன் கூடிய இவரது நடவடிக்கைகள் ஒரு சிறந்த நிர்வாகியாக இவரை அடையாளப்படுத்துகின்றன. பழகும்போது பண்பாளராகவும் கடமைகளை நிறை வேற்றும் போது கண்டிப்பானவராகவும் தீர்க்கமானதும் திடமானதுமான முடிவுகளை மேற்கொண்டு அவற்றினை நடைமுறைப்படுத்தும் தற்துணிவாளன்.

கல்வித் தெய்வமாகிய சரஸ்வதிக்கு எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் வாயிலில் சிலை அமைத்து அருள் பெருகச் செய்த அதிபரின் முயற்சியில் இவ் நிறுவனம் அடைந்த சாதனைகள் ஏராளம். கல்வி நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் மேன்மைக்கும் ஓய்வின்றி உழைத்து இன்று மணிவிழாக் காணும் நாயகனைப் பல்லாண்டு பல்லாண்டு வாழப் எல்லாம்வல்ல முருகப் பெருமானைப் பிரார்த்தித்து மணிவிழா நன்றே சிறக்க நல் பிரார்த்தித்து வாழ்த்தும் ஆசியும் கூறி விடைபெறுகின்றேன்.

**கி. தவநேசன்,** *நிறுவன ஆசிரியர்*

# மணிவிழா நாயகனுக்கு பல்கோடி வாழ்த்துக்கள்



அன்பின் சிகரமே பண்பின் ஊற்றே
எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் பெற்ற முத்தே!
காரிருள் தன்னை அகற்றிட வந்த
நம் இன்ஸ்ரிரியூட் நித்தில விளக்கே!
எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் மடியில்
அகவை அறுபது காணும் நாயகனே!
முகிழ்த்துக் கிளம்பும் முத்தொளியாய்
ஆக்கிய சாதனை எண்ணிலடங்கா!

எண்ணியதெல்லாம் இனியவே எண்ணி
நிறுவனத்தை மாண்புறச் செய்து
கண்ணியமாகக் கடமையில் புகுந்து
துல்லியமாகச் செயல்தனைக் காட்டும்
தன்னிகரில்லாத் தலைவனாம் எம் தலைவர்
அள்ளி இறைத்த சாதனை பாட
பண்ணிசைப் பாவலர் யாவரும் வாரீர்
தெள்ளிய தமிழில் வாழ்த்துரைப்போமே!




ஒழுக்கமும் கல்வியும் ஒருங்கே புகட்ட
நாணாங் கயிற்றை இறுகவே கட்டி
அம்புகள் யாவையும் ஒவ்வொன்றாய்த் தூக்கி
இலக்கை நோக்கித் துணிவாய் நகர்த்த
வல்லமை மிக்க ஆசானாகி அதிபராகி
உங்கள் பணியில் பட்டம் தன்னை
பெற்று வந்த வைத்தியர் பொறியியலாளர்
ஆசானென்ற விழுதுகள் சொன்ன காட்சி.

பொங்கும் உணர்வுப் பெட்டகம் போல்
பொலிவு நிறைய அமர்ந்திருக்கும்
பல்துறை நாயகன் வரதராஜாவே
தென்றல் தழுவும் இவ்வேளை
மகிழ்வு நிறைந்த சபைகளிலே
உங்கள் காலம் பொன்னாக
உள்ளம் யாவும் கூடி நின்று
உவகை உடனே வாழ்த்துகின்றேன்.

வாழ்க நீர் பல்லாண்டு
வளமுடன் எந்நாளும்
வாழி! வாழி! வாழி!

**இ. கல்பனா**

*நிறுவன ஆசிரியை*



# அறிவுலக ஆசான்



யாழ் மத்திய கல்லூரியின் முதல்வராக அறிவுலக ஆசானாக முன்பு சிறப்பான முறையில் கடமை புரிந்து தற்போது கல்வி நிலையத்தின் முதல்வராய் இருந்து கடமையுணர்வுடன் செயற்பட்டு கல்வி கற்பிக்கும் மதிப்பிற்குரிய ஆசிரியர் திரு. தம்பிப்பிள்ளை வரதராஜா அவர்களை அறுபதாவது அகவையில் அகமலர்ந்து இனிய பிறந்த நாள் நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, நேர்மை, ஒழுக்கம் என்பவற்றை கல்வி நிலையத்தில் நிலைநாட்டுவதுடன் மட்டுமின்றி மாணவர்களின் கற்றல், கற்பித்தல், செயற்பாடுகளிலும், ஒழுக்க விதிமுறைகளிலும், மாணவர் வரவு ஒழுங்கிலும், அவதானத்துடன் செயற்பட்டு ஊக்கமளித்து வருபவர்.

வேகமும், விறுவிறுப்பும் நிறைந்த இன்றைய காலகட்டத்தில் பல்வேறு சிறப்புக்களுடன் விளங்கும் எமது கல்வி நிலையமான The Express Institute ஒரு தனித்துவம் மிக்க சிறப்பு வாய்ந்தது. இத்தகைய கல்வி நிலையத்தின் முதல்வராய் விளங்கும் எமது ஆசிரியர் ஓய்வு பெற்ற நிலையிலும் தனியார் கல்வியின் தனித்துவத்தையும், மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளையும் சிறப்பான முறையில் நிகழ்த்தி வருகின்றார். அவர்களது சேவை மேலும் மேலும் சிறப்பான முறையில் தொடர வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

கல்வி நிலையத்தில் கற்றல் செயற்பாடுகளுடன் மட்டும் நின்று விடாது இன்னும் பல்வேறு வகையான கலைநிகழ்ச்சிகள், விளையாட்டுப்போட்டி, சிறுவர்களுக்கான போட்டி நிகழ்ச்சிகள் என பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களையும் ஒவ்வொரு புதிய வருடத்திலும் திறம்படச் செய்து வருபவர் எமது கல்வி நிலைய முதல்வர். மாணவர்களின் எதிர்காலம் சிறப்பான முறையில் விளங்கும் வகையில் அவர்களுக்கான பரீட்சை வழிகாட்டிகள், மாதாந்தப் பரீட்சைகள் என்பன தவறாது ஒழுங்கான முறையில் நடாத்தப்பட்டு வருவதனை உறுதி செய்துள்ளார். இதன் மூலம் கல்வி நிலையத்தில் கற்கும் ஒவ்வொரு மாணவர்களும் சிறந்த பயிற்சியினைப் பெற்றுக் கொள்ள ஒரு வழிகாட்டியாக எமது கல்வி நிலைய முதல்வர் செயற்பட்டு வருகின்றார். இதற்கு உறுதுணையாக கல்வி கற்கும் மாணவர்கள், கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் சாதகமான முறையில் நடந்து கொள்ள வேண்டும். அது எமது பொறுப்பாகும்.

இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த எமது கல்வி நிலையத்தின் முதல்வர் அவர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பது மட்டுமல்லாமல் அவரது பணி இன்னும் மேலும் சிறந்து விளங்கும் என்றும், பல்லாண்டு காலம் பல சிறப்புக்களுடன் வாழ வேண்டும் என்று அவர்களுக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். வருடம் முழுவதும் வசந்தம் வீசட்டும் இனிய பிறந்த நாள் நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

நன்றி

**வி. ஹேமலதா,** *நிறுவன ஆசிரியை*



## உலகெங்கும் வியாபித்து விருட்சமான கல்வியூட்டலாளன் வாழ்கவே!

விழுமியம் என்பதனை நோக்கும் போது Value என்னும் ஆங்கிலப் பதம் பெறுமதி, மதிப்பு, விழுமியம் எனப் பொருள்படும். பொருட்களுக்குப் பெறுமதி அல்லது மதிப்பளித்தல் விசேட மனிதப் பண்பாகும். ஒரு பொருளுக்கு மதிப்பளிக்கப்படும்போது அம் மதிப்பை ஏற்றுக் கொள்ளும் நபருக்கு அது ஏனைய பொருட்களை விட விசேட தன்மை பெறுகின்றது. மனிதர்கள் பல பொருட்களுக்கு மதிப்பளித்து வருகின்றனர். அதற்குக் காரணம் அதனது பயன்பாடு, செயலுக்குப் பொருத்தமான தன்மை, அதன் அழகு, அளிக்கும் திருப்தி, நல்ல தன்மை, சக்தி போன்ற குணங்களாகும்.

இன்றைய வர்த்தக உலகில் மதிப்பு விலை மூலம் காட்டப்படுகின்றது. ஆனால் பொருளினது அல்லது மனிதனது எல்லா இயல்புகளையும் விலை மூலம் மதிப்பிட முடியாது. நல்ல செயல்கள், தீய செயல்கள், அழகு, அழகின்மை, உயர்வுகள், பின்னடைவுகள், பொதுவானது, பொதுவானதல்ல என்ற வகையில் மதிப்பளிக்கப்படுகின்றன. இங்கு மதிப்புக்கள் நேர்க்கணியமாகவும், எதிர்க்கணியமாகவும் மதிப்பிடப் படுகின்றன.

இத்தகைய மதிப்பு கல்வியியல் உலகில், கல்வியியல் வரலாற்றில் நேர்க்கணியமாக பேசப்படுவது சரித்திரப் புகழ் வாய்ந்த ஒரு சிலரது வாழ்க்கையில் மட்டுமாகும். அத்தகைய வரலாற்றுப் புகழ் மிக்க பெருந்தகையராக தம்பிப்பிள்ளை வரதராஜா ஆசிரியர்



மிளிர்கின்றார். குடும்ப உருவாக்கத்தில் சிறந்து விளங்கிய இவர் சமூக உருவாக்கத்தில் (Formation of Society) நின்று நிலைத்திட்ட சாலச் சிறந்ததோனாவார்.

குடும்ப உறவிற்கு அன்பு (love) எத்தகைய முக்கியத்துவம் நிறைந்ததோ அத்தகைய முக்கியத்துவம் சமூக உருவாக்கத்தில் கல்வி ஊட்டுதல் (learning education) என்னும் செயற்பாட்டுக்கு உண்டு. ஆழ்ந்த புலமையும் ஞானமும் கல்வியூட்டலுக்குத் தேவையான இரு படிகளாகும். இவற்றைத் தம் அகத்தே இருத்திச் செயற்படுபவர்களுக்குச் சென்ற இடமெல்லாம் வாழும் காலம் முழுதும் வாழ்வின் நிறைவின் பின்பும் மங்காத புகழ் நிறைந்திருக்கும்.

"மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையோன்"



என்பதற்கமைய தன் தேசத்தில் மட்டும் பேசப்படுபவன் மன்னனாவான். ஆனால் சென்ற இடமெல்லாம் கற்றோன் சிறப்புப் பெறுகின்றான். இதனை அனுபவித்து மகிழும் இன்றைய மணிவிழா நாயகனாம் வரதன் ஆசிரியர் உருவாக்கிய மாணவர்களும் அவர்களது வாழ்வும் உலகெங்கும் வியாபித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

பள்ளிப் பருவத்தே பாடத்தைக் கேட்டுக் கற்ற நல் மாணாக்கனாக மேன்மை பெற்று பள்ளி செல்லும் சிறார்களும் சிறப்புற வேண்டுமென என்றும் வாடாத வரதன் ஆசிரியர் ஒரு முகை ஆவார். அதாவது காலம் சென்றாலும் மீண்டும் மீண்டும் அரும்பாகி தளிர்விட்டு பூக்கள் மலர்ந்து விந்தைச் சுவையுடைய கனிகளை வழங்கும் பெருவிருட் சமாகி நிழல்பரப்பும் கல்வியூட்டலாளன் என்பதனை எவரும் மறுப்பதற்கில்லை. கல்வியூட்டலில் நேர்க்கணியமான ஆசான் என்றும் மங்காத புகழோடு நூறாண்டு காலம் வாழ சிரம் தாழ்த்தி வாழ்த்துகின்றேன்.

**திருமதி மேரி ராஜேஸ்கனி ஜெகதீஸ்வரன்**
ஸ்ரீ றுவன ஆசிரியை

அகவை 50 பொன்விழாவின் பதிவுகள்






ஐரோப்பிய நாடுகளுக்கான சுற்றுப் பயணத்தின் போது
உறவுகளுடனும் நண்பர்களுடனும்



ஜேர்மனி



பிரான்ஸ்

# கல்விப் பெருங்கடலாம் பெருந்தகையோனை வாழ்த்துகின்றேன்



பூமி மீது பிறந்த ஒவ்வொரு மனிதனும் மேன்மையுடையோனாவது கல்வியறி வினாலும் ஒழுக்க நெறிகளை நெறிப்படுத்தும் நல்லியல்பினாலுமாகும். இத்தகைய இயல்பு தாய் தந்தையரின் வளர்ப்பினாலும் சமூகம் சார்ந்த காரணியினாலும் மேன் மேலும் வளர்ச்சியடைகின்றது. குடும்ப அலகிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் பண்புகள் சமூகத்தில் பிரதிபலிக்கும் போது சமூகம் சீர்மை பெறும்.

இந்த வகையில் நல்லியல்பு குடும்ப அலகினூடாக சமூகத்தில், பிரதிபலிப்பதுமிகஅரிது. "யான்பெற்றசெல்வம்பெறுகஇவ்வையகம்" என்பதனை மெய்யாக்கியவர்கள் மிக மிக எல்லோராலும் போற்றப்படுபவர்களாவர். இவர்கள் சுயநலம் பாராட்டாது பொதுநலப் பண்புடன் அனைவரும் வளம் பெற்று வாழப் பணியாற்றும் சிறப்புப் பெற்றவர்கள் என்பதனை அவர்களது வாழ்வியல் அம்சங்கள் வெளிப்படுத்தும். இத்தகைய அரிய இயல்பைக் கொண்டவராக மிளிர்ந்து கொண்டிருக்கும் மணிவிழாத் தலைவனானவர் கல்வியில் தான் உயர்ந்ததுடன்: தான் வாழும் சமூகம் சார்ந்த பிள்ளைகளையும் அத்தகைய பண்புகளுடன் உருவாக்கியதுடன் ஒழுக்க நெறியுடன் ஓங்கி உயர்ந்த ஒரு கல்வி நிறுவனத்தையும் கட்டுக் கோப்புடன் காத்துவரும் பெருங்கடலாவர்.

இந்தத் திறன் மிக்க ஆசிரியர் மேலும் உயர்வு பெற்று உடல் உள நலத்துடன் வாழ வாழ்த்துகின்றேன்.


**இராசையா யமுனா**

*நிறுவன ஆசிரியை*




## Honourable Varathan Sir,



Your energy is our soul
Your inspiration is our vision
You always though for our succes
May god give you lots of happiness in this life
May the stream of love in you f ow forever like this
You are my teacher, my strengh and my support
You make many believe in me
I wish you a happy birth day.
"Varathan Sir"
May god bless you with god's car and love.

Heath, wealth and happiness are always with you.

The way you teach....
The knowledge you share .....
The care you take .....
The love you shower ......
Are
Makes you the world's best teacher.
Happy 60th b'day.

**Santhiravathanan Kukatharsana**
*9B (2015E.M)*

Dear Sir,

Although you are sixty
your mind is as young as twenty
although age will slow your body
you will still behave as it you have turnd 30
Although you will take things more easily
you will retain the focus you had ar fourty
so even though you've turned sixty
In everything they score perfectly

HAPPY BIRTH DAY SIR!
YOU ARE FROM 0-60
IN 1, 893, 456, 000 Seconds.

**Santhiravathanan kajani**
7B (2015)

## To A Special Teacher

When I Started in School
This day seemed so for away
Now it's here and I can't believe
That time has passed so quickly....
But though your encouragement & guidance
I feel I'm ready for tomorrow's challenges
Teacher's play such an important part
in shaping and guiding
Especially teachers like you
Thank you for caring so much...

Teacher's should have A special place
In every child's heart
Because in this game of life
They help them get their start.

I just want to thank you
"VARATHAN SIR"
for all the things you are done
You are a very special teacher
And to me you are NUMBER 1

YOU ARE NOT TURNING 60
YOU ARE JUST TURNING 20 FOR
THE THIRD TIME
HAPPY BIRTHDAY SIR....
MAY GOD BLESS YOU!




**Delaxshana Santhiravathanan**
O/L 2013 (Old Student)

# மணிவிழா நாயகனான ஆசானுக்கு ஓர் வாழ்த்துச் செய்தி

மணிவிழாக் காணும் மாண்புமிகு ஆசானே
மண்ணில் நல்ல வண்ணம் வாழ
மாணவர் எமக்கு என்றென்றும்
வழிகாட்டியாய் இருந்தீரே

அறுபது ஆண்டுகண்ட ஆசானே
பல்லாயிரம் ஆண்டு வாழ
வேண்டுகின்றேன் போற்றுகின்றேன்
உம் மாணவர் நாம்

கணித பாடம் கற்றுத்தருவதில்
கருத்துடனே காசினியில்
தடம் பதித்த ஆசானே
காலமெல்லாம் வாழ வாழ்த்துகின்றேன்

இருபாலைப் பதியிலே
ஈரிருபது ஆண்டுகள் மேலாக
இளம் சிட்டுக்கள் எமக்கு
இனிய கல்வி தந்த ஆசானே உமை வாழ்த்துகிறேன்

இனிய நல் நிறுவனமாம்
Exprss நிறுவனத்தின்
ஒளிவிளக்கே
60ஆவது அகவையில் உமைவாழ்த்துகின்றேன்

கல்விச்சுடராய் அறிவின் ஒளியாய்
கருணையின் வடிவாய்,
கற்பித்த ஆசானே
உம்மை நான் வாழ்த்துகின்றேன்.

மாணவர் எம் சிறப்பிற்காய்
மாண்புறு சேவைகள் பல ஆற்றி
பார்போற்றும் வகையில் நாம் வாழ
பாடுபட்ட ஆசானே நீர் வாழ்க பல்லாண்டு!

வளர்க உம் பணி! வாழ்க நீர் பல்லாண்டு!



**த. தக்ஷாஜினி,**
8A (2015)

# உம் பணி தொடர்ந்திட

அஞ்சில் எமை வளைத்து அமுதனைய கல்வியினை
நெஞ்சில் நிறைகின்ற நேர்த்தியெல்லாம் கற்றவரே
பேசரிய மாண்பெல்லாம் பிள்ளைகள் எமைசேர
ஆசிரிய பணி செய்யும் அன்பின் வரதன் மாஸ்டரே



பொற்போடு எமை நடாத்திப்புகழ் மணக்கும் கல்வியினை
கற்போடு கற்பிக்கும் கடமையிற் பெரியவரே
குன்றளவு கொடுத்தாலும் குறையாத செல்வத்தை
இன்றளவும் எமக்களித்து இன்புறும் வள்ளலே

ஈன்றோரின் மேலாக எம்நெஞ்சில் நிற்பவரே
சான்றோராய் எமை மாற்றும் சாதனைகள் புரிபவரே
எச்செல்வம் அளித்தாலும் எச்சமின்றி தீர்வதுண்டு
மெச்சி நீங்கள் அளித்த செல்வம் விளிவின்றி வருமெல்லோ

அன்றாடம் எமை நாடி அறிவு புகட்டி உம்மை
இன்றிந்நாள் எம் நெஞ்சில் இருத்திப் புகழ்கின்றோம்
வாழ் நாள் முழுவதையும் மாணவர் எமக்களித்து
வாழ்நாள் இலாக்கல்வி விளைவிக்கும் நீர் வாழியவே

இவ் அறுபது அகவையிலும் உம் குடும்பநலனைவிட
எங்கள் நலனில் தானே அதிக அக்கறை செலுத்தினீர்
இறந்த காலங்களிலும் ஓராயிரம் முறை உங்களை திட்டித் தீர்த்தாலும்
நிகழ்காலங்களில் உங்களை வாழ்த்தாத நாளில்லை
வாழ்க நீர் என்றும் வளர்க; என்றும் உம்பணி தொடர்ந்திட.....

**அன்புடன் உமை வாழ்த்தும் உங்கள் மாணவி**

**மதுஷா சிவாகரன்**

11 B (2015)

# வெற்றிப் பாதையில்...

"வரன் என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்

வரன் எனும் வைப்பிற்கு ஓர் வித்து"

எனும் பெருநாவலரின் கூற்றிற்கிணங்க அன்பு எனும் கருவியினால் ஐம்பொறிகளாகிய யானைகளை அடக்கி காக்க வல்லவராகத் திகழ்பவர் எங்கள் வரதன் ஆசிரியர். எங்கள் ஆசிரியரும் எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டும் மாணவ சமுதாயத்திற்குக் கிடைத்த ஒரு வைர ஏணி என்று கூறுவதே சாலப் பொருத்தமானதும் சிறந்ததும் ஆகும். ஒரு கல்விக் கூடத்தை நிறுவுதல் ஆயிரம் சிறைக்கூடங்களை மூடுவதற்கு ஒப்பானது என்பது மூத்தோர் வாக்கு அதற்கிணங்க எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் மாணவர்களுக்கு நற்பண்புகளை ஊட்டி நற்பிரஜைகளாக ஆக்கித் தந்துள்ளது. ஒரு மாணவன் கல்வியை முழுமையாகக் கற்க வேண்டுமானால் அவனுக்கு முதலில் நல் ஒழுக்கம் அவசியம். ஒழுக்கம் இல்லாவிட்டால் ஒருவன் கற்ற கல்விக்கு மதிப்பு இல்லாமல் போய்விடும். கல்விக்கு அடிப்படையான ஒழுக்கத்தை கருப்பொருளாகக் கொண்டு இயங்கி வருவது எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட். எல்லாக் கல்வி நிறுவனங்களும் கல்வியைப் போதிக்கின்றது ஆனால் எக்ஸ்பிறஸ் நிறுவனம் மட்டுமே கல்வியுடன் நற்பண்புகளைப் போதிக்கின்றது. இவையாவும் எங்கள் ஆசிரியர் அயராத உழைப்பின் பிரதிபலன்கள்.

மேலும் எந்த ஒரு விடயத்தையும் எடுத்துக் கொண்டால் நேரம் தாழ்த்தாமல் செய்ய வேண்டும். அதே போல் கல்வி கற்க செல்வதானாலும் நேரம் தாழ்த்தாமல் செல்ல வேண்டும். அதையே எமது அதிபர் எமக்குப் போதித்து வருகிறார். அத்துடன் வரவின்மை விடயத்தில் மிகுந்த கண்டிப்புடன் இருக்கிறார். ஒரு விடயத்தின் அணுகு முறை கடினாக உள்ளது என்று அதனைச் செய்யாது விடக்கூடாது. வெற்றிக்கனியைப் பறிக்க வேண்டுமானால் கஷ்டப்பட்டே பெற முடியும். அதே போல் தான் வரவின்மை தொடர்பாக அதிபரின் தண்டனைகள் கடினமாக இருந்தாலும் அதன் விளைவுகள் மிகவும் இனிமையானதாகவே இருக்கும்.



ஒருவர் வெற்றிப் பாதையை நெருங்கும் போது பல சவால்கள் எம்மைத் தாக்கும். ஆனால் அதை வெற்றி கொண்டு வாழ்வது போல எங்கள் அதிபரும் அவ்வாறு தான் பல கடினமான சவால்களைத் தாண்டி இந்நிலைக்கு வந்துள்ளார். என்பதைக் கருத்தில் கொண்டு அதிபரோடு சேர்ந்து மாணவர்களான நாம் தோளோடு தோள் நிற்போம்.

ஆக்கம்

**வர்ஷிகா வன்னியசிங்கம்**

மாணிக்க விழாவின் பதிவுகள்








ஆசிரியர் தின விழாவின் போது யாழ். மத்திய கல்லூரியில்




25 வருட ஆசிரிய சேவையைக் கௌரவிக்கும் விழாவில் யாழ். மத்திய கல்லூரியில்

# நல்லிசை கொண்டு நலம் பெற வாழி!

இருபாலை தன்னில்
இளவாலை யர்க்கு
பெரிதான கல்வி
இனிதாக ஊட்டும்
குருவான வரத
பேராசான் வாழ்க!
ஒரு காலும் மறவாத
உறவோடு வாழ்க!

அகவை அறுபதை
அறிந்ததுமே மணிவிழா
உவகை கொண்டுமை
ஏந்தினோம் ஏந்தலே!
பகைமை அற்றவா
பல்லாண்டு வாழி நீ!
மகவுடன் மனையும்
மகிழுவே வாழி நீ!

கல்வி உலகின்
கலங்கரை விளக்கே
வில்லின் கணையென
விரைந்துமே பேசும்
சொல்லின் வல்லவா
சோர்விலாச் செம்மலே!
நல்லிசை கொண்டு
நலம் பெற வாழி!




**ஜெ. தர்மிதா, 7B (2015)**

## பாசமிகு என் ஆசான் வாழ்கவே!

பள்ளிக்கு வந்த பாலர் என்னை
பக்குவமாய் பல கதை தான் சொல்லி
படிப்பில் ஆர்வம் கொள்ளச் செய்த
பாசமிகு என் ஆசான் வாழ்கவே

மணிவிழா என் று பலர் சொல்ல
தணியாத ஆர்வத்தால் நா னும் இங்கு
துணிந்து வந்து ஒரு கவிதை தந்து நின்றேன்

தண் தமிழ் தானெடுத்து என் தமிழில்
வண்மையால் புகழ் பாட வந்தேன்
ஆற்றல் மிகும் சி றுவர் என் று எமை
அழகான குடிசை கட்டி அரவணைத்து
தேட்டமாம் கல்விதனை இங்கு
தேனாக உரைத்து விட்ட ஆசான்

மணிவிழாக் கண்டு மண்ணிலே
பல வளமெல்லாம் தான் கொண்டு
வானளவாக உங்கள் புகழ் என் றும்
வளமுற பல்லாண்டு வழ்கவே.

**ஜெகதீஸ்வரன்**

*தரம் 4 மாணவி*

## விழா நாயகன்

நாளைய தலைவனே!
விழா நாயகனே
இதுவரை நீ பெற்ற
வெற்றிகளுக்கு தடைகள் இல்லை
சரித்திரத்தில் பதிவானது
உனது வெற்றிகள்

காலம் உனக்குக் கொடுப்பதை
மணலில் எழுதுகிறது
காலத்திற்கு நீ கொடுப்பதைக்
கல்வெட்டில் எழுதுகின்றது

மழை விழுந்தால் மயான மேட்டிலும்
காளான் குடைவிரிக்கும்
செத்துக்கிடந்தால் யானை காதிலும்
எறும்புகள் படை நடத்தும்

வெற்றியின் தேடல்கள்
உன் அனுபவங்கள்
உன் அனுபவங்கள்
மாணவர்களின் வாழ்க்கை

பகைவரின் காலில் நீ விழாதவரை
உன் புகழ் கொடி கட்டிப் பறக்கும்
ஆனந்தமான இந்நாளில்
ஆண்டவன் சந்நிதியில்
பூ மழை தூவி நீ பல்லாண்டு காலம்
வாழ வாழ்த்துகின்றேன்.

**ர. கஜீஸ்ரன்,**

*தரம் 11A*

## மணிவிழா வாழ்த்து

மாங்குயில் கீதம் பாட
மயிலினம் நடன மாட
வான்முகில் பன்னீர் தூவ
வண்டினம் தேனைச் சிந்த
தேன்கவி வாணர் வாழ்த்த
தேவியர் தீபம் ஏற்ற
மாண்புறும் வரதராஜா ஆசான்
மணிவிழா கண்டாய் வாழ்க!

அரும்பெரும் குணத்தோன்; எங்கள்
ஆருயிர் நிலத்தோன்; எந்தப்
பெருமையும் இல்லாப் பெரியோன்
பொறுமையும் திறமையும் முரியோன்
அருமையாய் வரதன் என்றே
அனைவரும் அழைக்கும் ஆசான்
சீரிய சேவை செய்தே
ஜெகமெலாம் போற்ற வாழ்க!

மரகத வாழ்வும் எங்கள்
மாதவ மொழியும் மண்ணும்,
இருவிழி என்றே போற்றி
இன்புறும் நெஞ்சே, அன்பே
அறிவினிற் சுடரே, குருவே
ஆயிரம் பாவால் உள்ளம்
உருகிட வாழ்த்துச் சொன்னோர்
உண்மையின் ஒளியே வாழ்க!

**உள்ளம் கனிந்து மனம் நெகிழ்ந்து வாழ்த்துபவர்**

**யோ. ஜிறுஷிகா**
Gr. 4 (2015)

## ஆசான்

மாணவர்களுக்கு வரமாகக்
கிடைத்த வரதன் ஆசானுக்கு
இன்றுடன் அகவை அறுபது
வாழ்த்துகின்றேன் வாழ்க.

சிக்கல் மிகு கணிதத்தை
இலகுவில் கற்றுத் தரும்
கண்டிப்பான ஆசானை
வாழ்த்துகின்றேன் வாழ்க.

நேர ஒழுங்கு மட்டுமன்றி
கட்டுப்பாடாய் வழி நடாத்தும்
எங்கள் ஆசானை மனதார
வாழ்த்துகின்றேன் வாழ்க.

நீங்கள் மட்டுமன்றி
எக்ஸ்பிறஸ் நிறுவனமும்
சிகரம் தொட வேண்டுமென
வாழ்த்துகின்றேன் வாழ்க.

அகவை இருபத்தைந்தைத் தொட்டு
ஐம்பதில் கால் பதித்து
அறுபது கடந்து நூற்றாண்டு விழா
வாழ்த்துகின்றேன் வாழ்க.

கண்களில் பயத்தைக் காட்டி
கண்டிப்பில் ஒழுக்கத்தைக் காட்டி
கல்வியில் அறிவைத் தந்த ஆசானை
வாழ்த்துகின்றேன் வாழ்க.

**நிதர்சா யோகராஜ்,**
Gr. 10B

# கரையில்லாக் கல்வியின் கற்பக தருவே வாழ்க



*கலங்கரை விளக்கமாய் காலமெல்லாம் விளங்கும்*
*கல்விச் சுடரை ஏற்றும் ஏணியாய் மலரும்*
*கற்பகத்தான் கருணையுடன் இருபாலையில் மிளிரும்*
*எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்டின் இணையில்லா*
*தலைவரே நீர் என்றென்றும் நீடூழி வாழ்க.*

*கட்டுக்கடங்காத காளையராய் திரியும் இளவல்களை*
*துள்ளித் திரியும் வயதில் அவர்தம் துடுக்கடக்கி*
*தெள்ளத் தெளிவாய் கணிதத்தைக் கசடறக் கற்பித்து*
*கலாசாலை செல்ல வழியமைத்த கற்பக தருவே நீர் வாழி.*

*பத்து மாதம் சுமந்து பாலூட்டித் தாலாட்டி*
*பக்குவமாய் பள்ளிக்கனுப்பும் பாலகர்களை*
*தெள்ளத் தெளிவான மனதுடன் பொறுப்பேற்று*
*மழலைப் பூங்காவில் மடக்கி வைத்து*
*ஆரம்பக் கல்வியை அத்திவாரமாய் வழங்கும்*
*அறிவுச் செம்மலே நீர் ஆண்டாண்டு வாழ்க.*

*ஐந்து எட்டு வருடங்கள் இருவை மண்ணில் ஒளிபரப்பி*
*மங்காப் புகழுடன் மாணவர்களாய் நாம் திகழ*
*வங்கக் கடலாய் வந்துதித்த வரதன் ஆசிரியரே*
*வானளாவ உயர்ந்து நிற்கும் எக்ஸ்பிறஸ்*
*வையகத்தில் நிலைபெற்றுய்வதற்கு - வழியமைத்த*
*வல்ல ஆசானே வருடங்கள் பல நூறுவாழ்வாங்கு வாழவென வாழ்த்துகின்றேன்.*

**துளசிகா . த**
*தரம் 4 (2015)*

## வாழ்த்துச் செய்தி

எமது இருபாலை மண்ணிற்கு கலங்கரை விளக்காக விளங்கும் எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட் எங்களைப் போன்ற மாணவர்களைக் கட்டி அணைத்து அரியகல்வி புகட்டி வரும் நிறுவனத்தின் அதிபர் அவர்களின் 60ஆவது மணிவிழாக் கொண்டாடுவதை இட்டு உளம் கனிந்த இதமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு நேரமுகாமைத்துவம் வரவு என்பவற்றை சிறப்பாகக் கற்றுத் தரும் நிறுவனம் எமது இணைப்பாட விதான செயற்பாடுகளையும் ஒழுங்கமைத்து கற்றுத் தருவதோடும் அலகுரீதியான மாதாந்தப் பரீட்சைகளை உரிய நேரத்தில் உரிய காலத்தில் எமக்கு நடாத்தி வருவதும் நாம் சிறப்பாக இறுதிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு உதவுவதாக அமைந்துள்ளது. அத்தோடு சிறந்த ஆசிரியர்களின் கற்பித்தல் நுட்பத்தினைக் கொண்டுள்ள இவ்வாறான நிறுவனத்தின் ஒழுங்குவிதிகளை நாம் கடைப்பிடித்து உயர்ந்த நல்வாழ்வு வாழ எமது அதிபர் நோய் நொடி இன்றி பல்லாண்டு காலம் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**த. துளசிகா**
*தரம் 5 (கோப்பாய்)*

## மணிவிழா காணும் எம் அன்பு ஆசான்

கல்விப் பணியில் நான்கு தசாப்த கால சேவையின்பின் கிடைக்கும் வாழ்வு சிறப்பாக அமைய வேண்டுமென முதலில் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். சைவசமய மரபின் அடையாளமாக வாழ்ந்து பிறரை வாழ வழிகாட்டிய அன்பு ஆசான். நாம் கற்றுக் கொண்டவையோ சில. தங்களிடம் உள்ள முன்மாதிரி மூலம் பெற்றுக் கொண்டவை பல.

நல்லாசானாகவும் நல் அதிபராகவும் இருந்து கருமமாற்றும் செயல்வீரன் நீங்கள் எளிமை, நேர்மை, இரக்கம், நட்புரீதியான தொடர்பு எம் அன்பு நெஞ்சங்களில் உருவாக்கி எம்மை சிறந்த மாணவர்கள் ஆக்கியதும் நீரே.

கடமை, கண்ணியம், கண்டிப்பும் கட்டுப்பாடும் கூடவே இருந்து சேவை செய்த அன்பு ஆசானே; நெஞ்சம் மறுக்கும் வஞ்சக வார்த்தைகளை அஞ்சாது கேட்கும் வஞ்சகமற்ற நெஞ்சு படைத்த ஆசானே. எம் மீது வைத்த அன்பையும் அக்கறையையும் நான் என்றுமே மறக்க மாட்டேன். நீங்கள் 60 அகவையைப் பூர்த்தி செய்து எங்களுக்குரிய கல்விச் சேவையை நீங்கள் மீண்டும் வழங்கவேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

Whish your happy Birth day.

**த. லஜீதா**
*தரம் 10 A*

# வரதம் எனும் சகாப்தத்திற்கு ஓர் வாழ்த்து




அன்பிற்கினிய வரதன் ஆசானே
கணித பாடமென்றால் கலக்கமுற்றுச் செல்லும்
மாணவர்களுக்கு கலங்கரை விளக்குப் போல்
வழிகாட்டியாக நின்று வழிகாட்டுபவரே!

கல்வியுடன் சேர்த்து ஒழுக்கத்தையும்
மாணவர்களிடையே வளர்த்த பெருமைக்குரியவரே
கல்வியெனும் வரத்தை எமக்களித்து
நல்ல மாணவராக்கிய வரதன் ஆசானே!

கூட்டல், கழித்தல், வகுத்தல், பெருக்கலென
பாடங்களை நன்கு வழக்கமாகக் கற்றுத்தருவீரே
தங்களுடைய வழிகாட்டலால் கணிதபாடத்தை
தயக்கமும் அச்சமுமின்றி ஆர்வத்துடன் கற்போமே.

ஊரெல்லாம் பேசுமே தங்களுடைய புகழ்
கணிதத்திற்கொரு மேதாவியாவும் எமது
நிறுவனத்திற்கொரு நல் அதிபராகவும்
குடும்பத்திற்கொரு நல் தலைவராகவும் விளங்கும் ஆசானே!

தங்களுடைய புகழ் இன்று மட்டுமன்றி
என்றும் நிலைத்து நிற்பதோடு நல்
ஆரோக்கியத்துடன் நீண்ட காலம் வாழ
இன்றைய மணிவிழா நாயகனை மனமுகந்து வாழ்த்துகின்றேன்.

Miss. Dilaksha Jeyakumar
11A (2015)

# எங்கள் இனிய ஆசான்

பள்ளிப் பாடங்களை
பாங்குடன் சொல்லி
அன்புடன் எங்களுக்கு
அறிவை ஊட்டி
அயராது உழைக்கும்
அன்பு ஆசானே!

ஏணியாய் நிற்கும்
ஆசான் படியில்
ஏறிச் சென்று
உயர் பதவிகளை
பெற்றுக் கொள்ளும்
மாணவர் நாங்கள்.

மாதா பிதா குரு
தெய்வம் என்று
பெற்றோருக்கு சமனாக
பேணிட வேண்டியவர்
பெருமை மிகுந்த
எங்கள் ஆசானே!

நாளைய தலைவனாக
உன்னை இன்றைய செயலே
அழைத்துச் செல்லும்
வாய்ப்பு என்று எண்ணி
இலட்சியங்கள் நிறைவேற
வாழ்த்துவோம் நாங்கள்.

உண்டி கொடுத்த ஆசான்
உழைப்புக்காக சென்றிட
உயிராகப் பேணிய மகனை
ஆரத்தழுவி அரவணைத்து
அபயமளித்து காத்திடும்
எங்கள் ஆசானே!

சிறகை விரியுங்கள்
பறவையாய்ப் பறக்க
கூண்டை உடையுங்கள்
விண்ணை வீழ்த்திட
கல்வி பயிலுங்கள்
மாணவராய் திகழ்ந்திட
கற்பித்த ஆசானை
போற்றுவோம் நாங்கள்.

புத்தாண்டு பிறக்கையில்
புதுமை எங்கும் பூத்திடும்
விதியும் நலமாய் மாறிடும்
வினை எல்லாம் தீர்ந்திடும்
மதியும் கூர்மை தந்திடும்
மடமை எல்லாம் நீங்கிடும்
இவ் இனிய நாளிலே கல்வி
கற்றுத் தந்திடும் எங்கள் இனிய ஆசானே!

கட்டிட அறையில் கற்பது
மாத்திரம் தான் கல்வியல்ல
கழிவு மேடை ஏறி கவனத்துடன்
கற்பதும் கல்விதான் நண்பனே
கற்றிடலாம் கற்றிடலாம்
களிவோடு வா நண்பனே
ஆசானின் கற்பித்தலை
மதிப்போம் நாங்கள்.

அறியாமை அகற்றி அறிவொளி
தரும் ஆசான் என்றும்
பாரினில் பணிகளைப் பாங்குடன்
செய்து பல்லாண்டு காலம் வாழ
மணி விழாக் கொண்டாடும் எங்கள்
ஆசானுக்கு இனிய வாழ்த்துக்கள்.

**ம. பவிராஜ்,** 10 A

# O/L மாணவி நிஷாந்தினி கூறுவது

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனில் கற்றோன் சிறப்புடையன்
மன்னவர்க்கு தன் தேசம் அல்லால் சிறப்பில்லை
கற்றவருக்கு சென்ற இடம் எல்லாம் சிறப்பு.

என்ற நற் செய்யுள் இடைவிடா தழைத்திட
தானத்தில் அவதானத்தை அதிகமாய்க் கொண்ட
எம் அன்பு நிறை அதிபர் வரதராஜா
கணிதம் இல்லாதார் கண்ணியம் இல்லாமல்
காலத்தைக் கடக்கக் கலங்கியே நிற்பார்கள்
என்றிட உணர்ந்து கல்வியில் கணிதத்தை
கற்றுத் தெளிந்து எம் மக்கள் கூடத்தில்
ஆக்கிய சென்ரறில் வழிமுறையாக வகுத்துக் கொடுத்த
கல்வியில் கணிதத்தை தனக்கெனக் கொண்டு
மாணவ மணிகளுக்கு ஆண்டுகள் நாற்பது
அள்ளியே கொடுத்த மன்னவரே
மாணவர் கூடியே கொண்டாடிட
நாமும் கலந்து ஆடுவோம் பாடுவோம்.

எமது அயல்தனில் கற்றவர் கற்க
ரியூசன் சென்றாராம் எக்ஸ்பிரஸ் எனப் பெயர் பெறு
கூடத்தை ஆக்கிய பெரும் மதிப்புடையோன் வரதராஜா
ஆண்டுகள் அறுபது ஓடிடக் கண்டு
மாணவர் கூடியே மணிவிழா கொண்டாடிட
நாமும் கலந்து ஆடுவோம் பாடுவோம்.

கல்வியில் கணிதமும் கனமுறைப்படி ஆக்கியே தந்தவர்
கவனமும் கனவழி காட்டியே தந்தவர்
கல்வியின் சிறப்பை கவனத்தில் கொண்டு
அவ்வழி நடந்து உயர்வினைத் தேட
உதவியாய் நின்றிடும் உத்தமர்
அவரது நிலையை சொல்லிட முடியுமா
சொல்லித்தான் அடங்குமா
நாற்பது ஆண்டுகள் கற்ற நல் மாணவர்கள்
உயர்நிலை கொண்டு
ஓங்கியே நிற்கின்றார்கள்
அத்தனையும் கண்டு எம் இனிய அதிபர் வரதராஜா
இறை அருளோடு வாழிய வாழிய என வாழ்த்துகிறோம்.

**விக்னேஸ்வரன் நிஷாந்தினி,** O/L (2015)



## எங்கள் இனிய ஆசான்

மணிவிழாக்காணும் நாயகனைப் புகழ்
பெற்றுவாழ வாழ்த்துகின்றேன்.

செய்யும் தொழிலையே தெய்வமென்று
இருபாலை எனும் பதியிலே
எம்குல விளக்காய் திகழுகின்ற
எம் ஆசானே வாழ்க வாழ்க.

மணிவிழாக் காணும் நாயகனாய்
நீர் இன்று போல் என்றும் - இறைவன்
துணையோடு சேவையைத் தொடர- நான்
மனதார வாழ்த்துகின்றேன்.

ஓய்வு பெற்ற போதிலும் - உன்
வாழ்வை எமக்காக்கி- கசப்பாய்
உள்ள கணிதத்தைத் தேனாக இனிக்கச்
செய்யும் ஆசானே வாழ்க வாழ்க.

தினத்தந்தியிலும் சரி - மாணவர்
மனத்தந்தியிலும் சரி உம்புகழ்
என்றென்றும் தொடர நான்
வாழ்த்துகின்றேன் வாழ்க வாழ்க.

அறுபது அகவைகளும் சரி அறுநூறு அகவைகளும்
உம் நற்பணியை கற்பக விநாயகர் அருளோடு
எக்ஸ்பிறஸின் சுடரொளியாய் மிளிர நான்
வாழ்த்துகின்றேன் வாழ்க வாழ்க.

**தர்சிகா திருவருட்செல்வன்**
10 A (2015)

## எனது ஆசான்

என் அறிவை வளர்த்த
என் அருமை ஆசான் அவர்
எண் எழுத்து இரண்டையும்
எழுத வைத்த இறைவன் அவர்.

பார்போற்றும் உத்தமனாய்
பாரினிலே நான் வாழ
பண்புடனே பாடம் சொன்ன
பண்பான ஆசான் அவர்.

தனக்காக இல்லாமல் எனக்காக
தன்னையே தினம் உருக்கி
தரணியிலே உயர்வு பெற
ஒளியேற்றும் ஆசான் அவர்.

கைபிடித்து மண்ணதிலே
அரிச்சுவடி எழுத வைத்து
கற்றுயரத் தினம் உழைக்கும்
உழைப்பாளி ஆசான் அவர்.

கூடாத பழக்கத்தை
என்னை விட்டு விரட்டிடவே
கூடவே தண்டனையும் வழங்கிடும்
வழிகாட்டி ஆசான் அவர்.

கடிகாரம் போல் தினமும்
கணநேரம் ஓயாமல்
கண்டிப்புடனே கல்விதரும்
கலங்கரை விளக்கு ஆசான் அவர்.

என் ஆசான் சொல் கேட்பேன்
என்றும் அவர் வழி நிற்பேன்
அவர் அடிதினம் தொழுதே
என் வாழ்வில் உயர்ந்திடுவேன்.

**செல்வி சிலோத்தனா உதயகுமார்,** 10 A

## அறுபதின் சாதனையாளரே!

பெயர் வேறு அடையாளம் வேறு
ஆனால் அனைவரிலும்
இருப்பது ஒன்றே
அதுதான் ஆத்மா.

பயணம் வேறு பாதைவேறு
ஆனால் குறிக்கோள் மட்டும் ஒன்று
குறிக்கோள் ஒன்றாயினும் பெறுவது
புகழ் அல்லது இகழ்.

இரவு வேறு பகல் வேறு
ஆனால் நாள் மட்டும் ஒன்று
நிமிடங்கள் பலவாயினும்
நாம் சாதிக்க ஒருநிமிடம்.

தொடக்கம் வேறு முடிவு வேறு
ஆனால் எம் கல்விக்காய் எக்ஸ்பிறஸ் ஒன்றே
எக்ஸ் பிறஸின் புகழுக்கு
விளக்கம் ஒன்றே Sir வரதராஜா

விஞ்ஞானம் என்றார் நியூட்டன் போல
எக்ஸ்பிறஸின் கணிதம் என்றால்
எம் தலைவர் Sir வரதராஜா
எக்ஸ்பிறஸ் கணிதத்தின் கலைக்கூடம்.

இக்கலைக்கூடம் கண்டது மாணிக்கவிழா
இன்று எம் தலைவர் காண்பதோ மணிவிழா
எம் அறிவுக்கண்ணைத் திறந்து வைத்தார்
நிலையான அவர் புகழ் மீண்டும் மீண்டும்
சாதனை படைத்து வாழ்க வளமுடன்!

**ஜீவிதா பத்மநாதன்,** 11 A

## மகுட நாயகனுக்கு ஒரு வாழ்த்துப்பா

மணி விழாவைக் கொண்டாட
எக்ஸ்பிறஸ் எனும் கல்விக்கூடத்தை
பொன்போல் காத்து வழிநடாத்தும்
மகுடநாயகரை வாழ்த்துகிறேன்
பல வந்தனங்கள் கூறி.

எக்ஸ்பிறஸ் எனும்
கல்விகிளைக்குள்
வண்ண வண்ண பூக்களாய்
மலர வைத்தீரே எம்மை இதற்கு
உண்டோ? ஈடு இணை.

எம் தவறுகளுக்காய்
தாம் தரும் தண்டனைகள்
பெரியதாயினும் அதன் மூலம்
உம் அனுபவங்களை
பகிர்ந்தளிக்கின்றீர்கள்.

கணித இராச்சியத்தின்
மன்னர் தாங்களே
தம் கணிதக்கல்வியை
இலகுவாகப் போதித்தீர்
வற்றாத நீரூற்றாய் விளங்குகின்றீர்

என்றும் அழியாத எக்ஸ்பிறஸின்
அத்திவாரம் தாங்கள்
உம் புகழ் என்றும் நிலைக்கும்
என்பதில் ஐயமில்லை - தமது
ஜனனத்திற்காய் எமது வாழ்த்துக்கள்.

**ஹம்ஸா - செல்வசேனக் குருக்கள்**
தரம் 11 A

நிறுவனத்தின் வெள்ளிவிழாப் பதிவுகள்





மாணவர் தலைவர்களுடன்



1998



2013

# வளர்க பல்லாண்டு



நீல வானில் நிதமும் ஒளிரும்
நட்சத்திரம் போல
காலகாலமாகக் காரிருள் அகற்ற
தடம்பதித்த எக்ஸ்பிறஸ் நிறுவனத்தில்
பாலமாகநின்று பண்புடனே பணி புரிந்து
கணிதத்துறையில் சிறந்த ஆசானாய்
சீலமாக வளர்ந்து சிந்தையில் நிறையும்
தம்பிப்பிள்ளை வரதராஜா ஆசிரியர்
அகவை கண்டதோ ஆண்டுகள் அறுபது
உவகையுடன் உங்கள் கரம்
தொடுகின்றோம்.....!

நிறைந்தன உள்ளங்கள்
இளமையில் கல்வி சிலையில் எழுத்து
என்பதை இதயத்தில் நிறுத்தி
வளமான கல்வியை வருங்காலம் சிறந்திட
உரமாக நின்று
பணியாற்றியுள்ளீர்கள்.....!

கணிதத்தில் பயின்றோரும் சிறந்து
விரைந்து போற்ற
வந்ததோ ஆண்டுகள் அறுபது
ஒன்று மூன்று இரண்டாயிரத்துப்
பதினைந்தில் மணிவிழாக் காணும்
ஆசிரியர் தம்பிப்பிள்ளை வரதராஜா
என்றென்றும் நலமுடனே தொடர்ந்தும்
கணிதத்துறைதனில் சேவைபுரிய
இறையருள் துணைவேண்டி நாமும் வாழ்த்துகின்றோம்
வளர்க பல்லாண்டு.....!

**லினோட்சிகா ஜெயராசா,** 11 A (2015)

# அறுபதின் அறிஞரே!

எம் ஜனனங்கள்
எங்கெங்கோ நிகழ்ந்த போதும்
மாணவர்கள் ஆனோம் அனைவரும்
எம் கல்விக்காய்
எக்ஸ்பிறஸ் தாயின் கருவில்
மறுபிறப்பாய் அவதரித்தோம்!

தம் கருவில் எம்மைத் தாங்கி
நட்பெனும் வரமளித்து
கல்விமானாய் அவதரிக்க வைத்த
எக்ஸ்பிறஸ் தாயின்
தூணாய் நின்றார்
கணித மாமேதை!

எம் கல்விக்காய்
தம் உதிரத்தை வியர்வையாய்ச்
சிந்தி ஆசிரியர் எனும்
அரும்பணிச் சேவையாற்றுகின்றீர்!
தம் சேவைக்காய்
தலை வணங்கி நிற்கின்றோம்!

கட்டுப்பாடு மூலம் நிறுவனத்தைக்
கட்டியெழுப்பி - கல்வி மூலம்
மாணவரைப் பூரணப்படுத்தி
வாழவைப்பரே!
எம் கலங்கரை விளக்கமாய்த்
திளைக்கின்றீர்!

உம் கணிதக் கல்வி மூலம்
மாணவரைக் கவர்ந்திழுத்தீரே!
உம் கணிதத்தில் Engineer எனும்
கனவை உணர்கின்றோம்
அக்கனவு இன்று குறிக்கோளானதே
அதை நிஜமாக்கத் தவிக்கின்றோம்!

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பரே!
கல்வியே கண் என்பதை
எக்ஸ்பிறஸ் மூலம் புரிய வைத்தீரே
எக்ஸ்பிறஸ் மாணவர் நாம்
என்பதில்
பெருமை அடைகின்றோம்!

எம் வெற்றியின் படிக்கட்டாய்
விளங்குபவரே!
தம் அறுபதாவது பிறந்ததினத்திற்காய்
வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றோம்!
எக்ஸ்பிறஸ் எனும் வரத்தை
எமக்குப் பரிசளித்தீரே!
உம் பிறந்த தினத்திற்காய்
ஓர் சிறிய சமர்ப்பணம்...!

**தனுஜா வெங்கடகிருஷ்ண சர்மா**
தரம் 11A (2015)

## 60 ஆவது பிறந்த நாள்

வாழ்வில் எத்தனையோ - பல
தடங்களைத் தாண்டி
60 வயதை எட்டியது - சாதனையே
உம் வாழ்வில்....
அன்பால் எம்மைக் கொள்ளை கொண்டு - நல்ல
பண்புடன் எம்மை மாற்றினீரே
கண்டிப்பு என்பது உம் கால் வாசி - ஆனால்
மன்னிப்புக்கு என் றுமில்லை விலை வாசி
வாழ்க்கை எனும் படகில் அதிபரானீர்- இன் று
அழகாய் எம்மைக் கரையேற்றினீர்
அதிபர் வரதன் சொல்லும் கதைகளிலே - பல
படிப்பினைகள் உருவாகும்
எண்ணிய ஐயமெல்லாம் தெளிவாக்கி - எம்மை
ஏணியாய் இருந்து ஏற்றினீர்
காணிபோல் நிலைத்து உம்மைப் பற்றிப் பாடுவேன்
அழகான தோட்டம் நீர் அமைத்தீர் - அங்கே
அரும்பாய் நாங்கள் முளைத்துநின்றோம்
எண்ணிய போதெல்லாம் அறிவூட்டி - நீர்
புண்ணியம் தேடிக் கொண்டீரே.

**செ. செலக்ஷன்,** *தரம்* 09 A



## Principal of Express Institute

Wishing you happiness
To wel come each morning
Wishing you laughter
To make your heart sing
Wishing you sharing
and caring
And all of the joy
The birthday can bring.

HAPPY BIRTH DAY
VARATHAN SIR

**Sujeeskaran Jathusha**
*Gr. 7 B*

## மணி விழா நாயகனே!

எம் தாய் மண்ணில்
இன்னோர் தாயாய்
உருவெடுத்தாள்
எக்ஸ்பிறஸ் எனும்
கல்வித்தாய்!

எம் அறிவுப் பசி நீக்க
ஓர் அறிவுக் களஞ்சியம்
எக்ஸ்பிறஸ் - இங்கு
எம் அறியாமை இருளை
நீக்கி வைத்தார் அதிபர்.

எக்ஸ்பிறஸ் வளாகத்தை
எமது சொர்க்கம் போல்
எமக்குப் பரிசளித்தார் - அதை
கண்ணை இமை காப்பது போல்
நிலை நாட்டுகின்றார்!

தலை குனிந்து கற்ற
பலர் இன்று தலை நிமிர்ந்து
வாழ வழி வகுத்தார் - இன்று
அவ்வழியை எமக்குப்
போதிக்கின்றார்!

பாடசாலை மாணவர்களை
பல்கலைக்கழக மாணவர்களாய்
உருவாக்கி பொறியியலாளராய்,
வைத்தியராய், சட்டத்தரணியாய்
மாற்றுகின்றார்!

புகழ் பல பெற்று - எக்ஸ்பிறஸின்
மாணிக்கவிழாக் கண்டு இன்று
தன் அறுபதாவது பிறந்ததினத்தில்
அமைதியாய்த் திளைக்கின்றார்
அவரது புகழ் பாடி நீடூழி வாழ
வாழ்த்துகின்றோம்!

**கோவின்ஜா சிங்கராஜா**
*தரம் 11 A (2015)*

## பார் போற்றும் ஆசான்

பார் போற்றும்
ஆசான் நீங்கள்
கல்வியுடன் ஒழுக்கமும்
கற்றுத் தந்து
எம்மை வழிகாட்டும்
குருவே!
மணிவிழாக் காணும் நீங்கள்
நூற்றாண்டு காலம் வாழ்ந்து
இன்னும் எம்மாணவர்கள்
பயன் பெற வேண்டும் என்று
இறைவனை வேண்டுகிறேன்.

**ச. தருணிகா,** *தரம் - 3*




கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் செயலாளராக ஆண்டுப் பொதுக்கூட்டத்தில்




கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியின் 150 ஆவது ஆண்டு நிறைவின்
கரப்பந்தாட்டப் போட்டியில் பிரதம விருந்தினராக

மாணிக்க விழாவின் பதிவுகள்





# அறுபது கழிந்தாலும் அழியாத புகழ் உங்களுக்கு ஆசானே!

காலம் அகவை அறுபது கழிந்தது
கோலம் மட்டும் இளைஞனாய் மிளிர்வது
ஞானம் எங்கும் உங்கள் புகழ் பரப்பிடும்
சாலவும் சிறந்த ஆசானே.

பற்றுவைத்துபல சிறுவர்கள்
கற்கக்கசடற கற்றவை கற்றபின்
நிலைபுகழ் நிற்கவைத்திடும் ஆசானே
நற்றவம் செய்துவரும் நாயகா வாழி!

ஏற்றிறத்தும் குறைவிலாற் படிக்கும் நிலையம் - மனச்
சித்திரங்கள் வடிக்கும் எண்ணம் துள்ளி
வித்தைகள் அளிக்குமே அதிகபுள்ளி - புகழை
முத்திரையாய்ப் பெற்றிடுமே எக்ஸ்பிறஸ் அள்ளி.

அறுபது கழிந்தது உண்மைதான் - என்றும்
சுறுசுறுப்புக்குறையாத ஆசானாய்
விறு விறுப்பு குறையாத வீரனாய் இருக்கின்ற
மறு அற்ற மாணிக்கமே வாழிய!

வீசுகின்ற தென்றலாய் - கவி
பேசுகின்ற புலவனாய் - புகழ்
பேசுகின்ற வள்ளலாய் - எக்
காலமெல்லாம் வாழியவே!



தேசத்தில் சிறந்திடும் சிறாரின் சிந்தையினை
பாசத்துடன் அடக்கி பல இலக்கிய
வாசகங்களையும் தாங்கிவருகின்ற
ஆசானே வாழியவே!

ஆரம்பத்தில் மிகவும் சிறியதாய்
இப்பொழுது பெரும் சிகரமாய்
அன்னம் போல் எமை ஆக்கி
பல தடைகளைப் புறந்தள்ள நிற்கும் ஆசானே வாழியவே!

அகவை அறுபது அல்ல, நூறுகடந்தாலும்
அழியாப் புகழ் பெற்று வாழ வாழியவே.

**ஆ. ஷங்கீதா,**
*யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி, 07 (2015)*

## அகவை அறுபதிலும் அழியாத வெற்றிகள் கண்ட எம் ஆசான் வரதராஜா

மாணவ குலத்தின் ஒளி விளக்காய்
மிளிர்ந்திடும் ஆசான் வரதராஜா
வையத்துள் வாழ்வாங்கு வாழ்கவென
வாழ்த்துகின்றேன் நான் மகிழ்வுடனே!

அகவைகள் 60 போனால் என்ன?
உம் சேவைகள் என்றும் - அழியாதப்பா
கண்ணியம் மிக்க எம் ஆசானே - உம்
பணிகளோ என்றென்றும் தொடர வேண்டும்.

அகிலம் போற்றுகின்ற நாயகனே
உம்புகழை நாம் அடைவதெப்போது?
காலங்கள் மாறினாலும் - உம்
புகழ்பூத்த பணி என்றும் அழியாதப்பா

எம் வாழ்வில் என்றும் ஒளியேற்ற
தன்னை மெழுகைப் போல உருக்கிடுவார்
கற்பகவிநாயகர் அருள்பெற்று - நீங்கள்
நீடுழி வாழ வாழ்த்துகின்றேன்.

கணிதத்தினை கனியாக்கி எமக்கு
மகிழ்வுடனே ஊட்டிடுவார் - என்
அறிவுக்கண்ணைத் திறந்த உங்களை
வாழ்த்துகின்றேன் வாழ்கவென.

**தனுஷாயினி ரஜிந்தன்**
*தரம் 10 A (2015)*

## ஆசான்

பாடம் சொல்லித் தருவார் - நல்ல
பழக்கம் சொல்லித் தருவார்
ஆட ஓட எல்லாம் - அவர்
அழகாய்க் காட்டித் தருவார்.

உணவைப் போல பாடம் - தினம்
ஊட்டும் எங்கள் ஆசான்
கணமும் அவரை மறவோம் - இரு
கண்ணைப் போல மதிப்போம்.

வகுப்பறைக்குள் வருவார் - நாம்
வணக்கம் சொல்ல வேண்டும்
சுகமாகப் பாடமெல்லாம்
சுவையாகச் சொல்லுவார்.

வீட்டில் தீபம் போல - அவர்
வீற்றிருப்பார் வகுப்பில்
காட்டும் அவர் வழியை - நாம்
கவனமாகத் தொடர்வோம்.

அன்னை தந்தை போல - எங்கள்
ஆசான் தெய்வமானவர்
முன்பு ஔவை சொன்னார் - அந்த
மொழியை மறக்கலாமோ?

**ற. கெனீஸ்ரன்**, *தரம் - 06B*

## Many Many Happy Birth Day

நம் இயற்கைத் தாயானவள்
இயற்கைப் பூமியிலே அவதரித்து
நமக்காக ஒரு அரிய ஆசானை
உருவாக்கினாள்
ஆண்டாண்டு கால மெல்லாம்
ஆண்டு வந்த எம் ஆசானே
தலை நிமிர்ந்து கூறுவோம் இத் தரணியில்
நீ பிறந்தது நம்மை சாதனையாளர்களாக
உருவாக்குவதற்கே!

உன் 60ஆவது வயதினிலே
நான் உன் புகழ் பற்றிக் கூறவே
எக்ஸ்பிறஸ் மண்ணில் கால் வைத்தேன்
விடியற் பொழுதில் மலரின் மொட்டு விரிந்து
செழிப்புடன் காட்சி தருவதைப் போல்
நீ புன்னகையுடன் இம் மண்ணில்
வாழ வேண்டும்

நாம் 5ஆம் தரத்திற்காய் இந்த
ரியூட்டரியில் கால் வைத்த போதே
நமக்குள் ஓர் பலம் உருவானது
ஏன் தெரியுமா?

நாம் சமுதாயத்தில் நல்ல பிரஜையாக
வருவதற்கு கடவுளே அனுப்பி வைத்த
அன்பின் குரு நம் வரதராஜா
அதிபர் அவரைப் பற்றிப் பேசுவதே
மாணவர்களாகிய நமக்குப் பெருமை தானே.





நம் எக்ஸ்பிறஸ் ரியூட்டரியில்
முன்னர் ஒரு காலம்
புன்னகை பாதியும் புழுதியுமாய்
மாரியிலே குளிரும்
மாசியிலே மூசிப் பெய்யும்
பனியும் வெள்ளோட்டமும்
பெருகிப் பாய்ந்தது.

ஆனால் இப்போ
எம் குரு எமக்காக
கட்டடங்கள் பல கட்டி
01 தொடக்கம் O/L வரையான
கல்விச் சேவையை
நடாத்தி வைத்த நம் குருவே
உன்னை உயிர் உள்ளவரை
மறக்கமுடியாது.

எம் அன்பின் வடிவமாய்
எம் அறிவின் உருவமே
எம் சக்தியின் பலமே
எம் உயிர் நாடியே என்றும்
எம் அதிபர் வரதராஜா உனைப்
பாடுவது நம் கல்விக்குப் பெருமை தானே.

எமக்காக வீர நடை போட்டு
எம்மை உருவாக்கி நமக்கு
ஒரு விழிப் புணர்வை ஏற்படுத்திய
நம் ஆசானை வாழ்த்துகின்றேன்.

**இ. பிரசாந்தி** - 11A (2015)

# மணிவிழாக் காணும் அதிபரே!



யாழ் நகரிலிருந்து பருத்தித்துறை
நோக்கிச் செல்லும் பாதையில்
இருபாலை என்ற ஊரில்
எக்ஸ்பிறஸ் என்ற பெயரோடு
ஓங்கிநிற்கும் வரதன் ஆசிரியரே!

இன்முகத்தோடு எம்மை வரவேற்று
அன்போடும் பாசத்தோடும் எங்கள் அறிவுவளர
எம்மைப் படிக்க வைத்து ஒரு தவறை
100, 200 தடவைகள் எழுதச் செய்து
எம் தவறை உணரவைத்த மகானே!

இன்றும் உங்களிடம் படிக்க
மனம் துடிக்கிறது
எம் நிலைமையை அறிந்து பல உதவி செய்து
எம்மைப் படிப்பித்து நன்றாக வரவேண்டுமென்ற
நல்ல மனம் கொண்ட உங்களை என்றும் மறக்க மாட்டேன்.

இன்று பெருமையுடன் புன்னகைத்துக்
கொண்டிருக்கும் இருபாலை
'எக்ஸ்பிறஸ்' வரதன் என்ற பெயர்
என்றும் நிலைத்திருக்க
இறைவனை வேண்டுகின்றேன்.

இன்று அறுபது வயதைக் கொண்டாடும் கணித ஆசானே
நீங்கள் என்றும் நீடூழி வாழ வேண்டும்
நீங்கள் நூற்றாண்டு காலம்
வாழ வேண்டுமென்று
கடவுளைப் பிரார்த்திக்கின்றேன்.

**ஹம்சியா வெங்கடகிருஷ்ணசர்மா,** தரம் - 08B

# வைரவிழா நாயகனுக்கு....



வரமாகப் பெற்றோம் - எமது
வரதர் எனும் நல் ஆசானை
வைரம் போல் ஒளி வீசும் எம் குருவை
வைரவிழாப் பிறந்தநாளாம் இன்று
மனமாற வாழ்த்துகின்றோம் - இன்னும்
நூறாண்டு வாழ வேண்டுமென
வெறுப்பான கணித பாடம்
விருப்புடன் விளங்க வைப்பார்
கண்டிப்பான பார்வையாலும்
கனிவான நல் பேச்சாலும்
கணிதத்தின் நாயகனுக்கு
கவிதை எழுதுவதில்
மனநிறைவு கொள்கின்றேன்
மன்றாடுகின்றேன் கற்பக விநாயகனை
நூற்றாண்டுகள் நல் ஆரோக்கியமாக வாழ
நூறாயிரம் நல் மாணவ சந்ததியை உருவாக்க
போற்றி வணங்குகின்றோம் எம் சிரம் தாழ்த்தி
பேரோடும் புகழோடும் இன்று போல் என்றும் வாழ
வைரவிழாக் காணும் நாயகனே!
வைரவிழாக் காணும் நேரமதில்
புகழ்பாடி வாழ்த்துகின்றோம் - இன்னும்
கோடி ஆண்டுகள் வாழ்கவென....

**பணிவுள்ள மாணவி**
**சுவேந்திரா அருச்சுனன்**
*தரம் 11 A (2015)*



ஐரோப்பிய நாடுகளுக்கான சுற்றுப் பயணத்தின் போது
உறவுகளுடனும் நண்பர்களுடனும் - நோர்வே



டென்மார்க்

ஐரோப்பிய நாடுகளுக்கான பயணத்தின் போது
சுவிற்சர்லாந்து





# கணிதத்தின் கலங்கரை விளக்கே!

*அணி பெறு எக்ஸ்பிறஸ் நிலையம் தந்த முதல்வோனே*
*அரும்பணி ஆற்றி அறுபது அகவை நிறைவதனில்*
*மணிவிழாக் காணும் மாண்புறு நாயகனே*
*மாணவர் கல்விக்கு நல்லதோர் கலங்கரைவிளக்கே!*

*கணித ஆசான் வரதனே! கணிதத்தின் ராஜா நீரேதான்*
*கழித்தல் தீர்வை களிப்புடன் காட்டியவரே*
*கணித வகுத்தல் தனை வகையாய் வகுத்தே*
*கலக்கம் போக்கி கலகலப்பை ஏற்படுத்தியவரே!*

*பெருக்கல் விருத்தியால் மாணவர் கணிதத்தில்*
*பெருகிய அறிவு பெற்றனர் நன்றே*
*கூட்டல் விருத்தி கூட்டியே காட்டி*
*குதூகலமாய் கணிதக்கல்வியை மாற்றினீரே!*

*மடக்கை விதியைத் தடக்காமல் எடுத்துரைத்து*
*மெய் எண்களின் மெய்மை அறிவித்து*
*அடக்கமாய் அட்சரகணிதக் கோவையை*
*ஆர்வமுடன் அறிய வைத்த ஆசானே!*

*தொடைகள் எல்லாம் தடையின்றி அறியவைத்து*
*தொடுவானம் கணிதமதில் தூரமில்லை எனக்காட்டி*
*தொடலிகள் தன்னை திடமுடன் பயிற்றி*
*தொடர்ந்த பணி தொடர்க தோன்றவே வாழ்க நன்றே!*

**தர்ஷனா விசுவாசம்**
*தரம் 11 A (2015)*

# எக்ஸ்பிறஸ்

*தேனினும் இனிய எக்ஸ்பிறஸில்*
*தேனீக்களாக வந்து கூடினோம்*
*பள்ளியில் கற்பதை மீட்க*
*பலவகை அறிவைப் பெற்றிட*
*துள்ளியே நாமும் வருவோம்*
*துயர்கள் இன்றிக் கற்போம்*
*எக்ஸ்பிறஸ் என்றும் சிறப்பு*
*மகத்துவமான பிறப்பு*
*உள்ளே வருகையில் பேதை*
*வெளியே செல்கையில் மேதை*
*பாலரை ஏற்கும் எக்ஸ்பிறஸ்*
*நாளைய தலைவர் ஆக்கும்*
*தசாப்தம் கடந்த எக்ஸ் பிறஸ்*
*வாழிய பல்லாண்டு*
*வளமுடன் நூறாண்டு.*

**ற. ரம்மியா**
*தரம் - 05 (2015)*

# நெஞ்சில் இடம் பிடித்த அதிபரை நான் மறவேன்

நான் தற்பொழுது தரம் 11 இல் கல்வி பயின்று கொண்டு இருக்கிறேன். என்போன்ற பல மாணவர்கள் சிறந்தமுறையில் கல்வி பயில ஊன்று கோலாகத் திகழ்ந்த எம் நிறுவன அதிபர் திரு. தம்பிப்பிள்ளை வரதராஜா அவர்களின் தன்நலம் பாராத பங்களிப்பும், அன்பான கண்டிப்பும் என்றுமே மறக்க முடியாது.

இவர் எனக்கு தரம் 5 இல் இருந்து தரம் 11 வரை அதிபராகவும், தற்போது கணித பாட ஆசிரியராகவும் இருக்கின்றார். பல கல்வித் திறன்களை தம்மகத்தே கொண்டிருந்தும் , சரியான வழிகாட்டி இல்லாமல் இருந்த பல மாணவ, மாணவிகளுக்கு "கல்வி" என்னும் உந்து சக்தியை வழங்கி அவர்களை ஆர்வத்தோடும் விடாமுயற்சியோடும் கல்வி கற்க வழி வகுத்தவர் எமது அதிபர் ஆவார்.

அவரது பேச்சில் உள்ள திடகாத்திரம், உறுதி என்பவற்றை நாம் அவரது தோற்றத்திலும் காணலாம். சில வேளை நான் உற்சாகம் இன்றி மந்தமாகப் பாடம் கற்கும் வேளையில் எமது அதிபர் கையில் பிரம்புடன் நிமிர்ந்த நேர் கொண்ட நன்னடத்தையுடன் மண்டபத்தினூடே செல்வார். அந்த வேளையில் அவரது கம்பீரத்தைப் பார்த்து நான் எனக்குள்ளே கம்பீரத்தை வரவழைத்துக் கொள்வேன்.

மாணவர்களிடம் உள்ள குறைகளை சக மாணவர் மத்தியில் கூறி அவர்களை தாழ்த்துவதோ, மனக்கலக்கத்திற்கு உட்படுத்தும் பழக்கம் எமது அதிபரிடம் அறவே இல்லை. அவ்வாறான குறைகள் உள்ள மாணவர்களை தனியே அழைத்து அறிவுரைகள் வழங்குவார். இல்லையெனின் அவர்களது தனிப்பட்ட விடயமெனில் அவர்களது பெற்றோரை வரவழைத்து கலந்துரையாடுவார். மாணவர்களது பெருமைக்குரிய விடயங்கள் மாத்திரமே சக மாணவர்கள் மத்தியில் கூறி, குறிப்பிட்ட மாணவ, மாணவிகளைப் புகழ்வார்.

நிறுவனத்திலுள்ள அனைத்து மாணவர்களுக்கும் "வரதன் சேர் வாரார்" என்று சொன்னதுமே ஒரு கணம் நிதானித்து அமைதி காப்பார்கள். எம் அனைவருக்கும் வரதன் சேர் என்று சொன்னாலே எம்மை அறியாமலே பயம் ஒன்று தலை காட்டும். சாதாரணமாகக் கதைப்பதற்குக்கூட ஒரு வார்த்தை வாராது. இவ்வாறு பணியாற்றியதன் நோக்கம் ஒவ்வொரு மாணவரையும் சிறந்த ஒழுக்கமும், ஆன்மீகப் பற்றும் கொண்டவர்களாக்கி சமூகத்திற்குச் சேவை செய்யக்கூடியவராக வளர்த்து எடுக்கவே ஆகும். இப்படிப்பட்ட எமது நிறுவன அதிபருக்கு மணிவிழா எடுப்பது காலத்தின் அவசியமாகும்.

எமது பெற்றோர் நிறுவனத்தை அணுகி வரும் பொழுது அவர்களை இன்முகத்துடன் வரவேற்று ஒவ்வொரு பெற்றோரையும் இனங்கண்டு அவர்கள் பிள்ளைகளின் பலவீனங்களைச் சீர் செய்திடுவார். சிறந்த இறைபக்தி நிறைந்தவர். தன் மாணவர் மீது அன்பும், அக்கறையும் கொண்ட அதிபராக, ஆசிரியராக த் திகழ்கின்ற எம் நிறுவன அதிபர், அவர்களுடைய அகவை அறுபதிலும், 42 வருட கல்விப் பணியில் சிறந்த விழுமிய

பண்புகளைக் கொண்ட மாணவ சமுதாயம் உருவாக்கப்பட்டுள்ளமை பெருமைக்குரிய விடயமாகும்.

இவ்வாறு தனது வாழ்வினை எமது நிறுவனத்திற்கு அர்ப்பணித்த எமது அதிபர் பல வருடங்கள் இறை ஆசியுடன் நோய் நொடிகள் இன்றி வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

**மால்மருகன் யோகவாணி**
(தரம் 11- மாணவி)

## Congratulation

Indeed, I am very pleased to send Congratulatory Message to Mr. Thambipillai Varatharajah. The Director of Express Institute. Irupalai on his Golden Jubilee Celebration.

He stands ahead of many other persons of his calibre because of his devotion to his duty. interest in the welfare of the students under his charge, and above all.

His great love for the uplitt of the nation in general and the Tamils in particular.

May the Almighty grant him many more years of service to the cause of Education and guide in all his actiontis.

I wish him all success in life.

**A. U. Vaheesar**
*J.P (Whole Island)*
*English Teacher*



# வைரவிழாவில் ஜொலித்திடும் வைரம்

விழுமியம் போற்றி நின்று
சீர்மிகு கல்வி தேடும்
மாண்புறு யாழ்ப்பாண மண்ணில்
கசந்திடும் கணிதம் தன்னை
கசடுகள் நீக்கியே நன்றாய்
உணர்த்திடும் எங்கள் ஆசான்
வைரவிழாவில் ஜொலித்திடும் வைரம்

Express இன்சிரிரியூட் எனும்
இன்றைய மாபெரும் அறிவாலயத்திற்கு
சிறு குடிசையாய் அன்று ஒரு பொழுது
அகரமிட்டு ஆரம்பித்து வைத்த
உத்தம நெஞ்சம் இன்று
காண்கிறது அகவை அறுபது

கணிதத்தின் கருவறை மட்டுமல்ல
கண்ணனைய எங்கள் ஆசான்
பாத்திரங்கள் பலவும் ஏற்று
பண்புடன் கடமை செய்வார்
நல்லினிய எங்கள் நிர்வாகியாய்
எக்ஸ்பிறஸ் மாணவரை என்றும்
ஒழுக்கமாய் வளர்த்து நிற்கும்
உன்னதம் கண்டதா வன்றோ
தேசிய பாடசாலைகளில் ஒன்றாய்
யாழ் மண்ணில் மிளிர்ந்து நிற்கும்
மத்திய கல்லூரிச் சமூகமும்
ஒழுக்காற்றுக் குழுவைப் பேணும்
உயரிய பொறுப்பைக் கூட
"தம்பிப்பிள்ளை வரதராஜா" என்றிடும்
எங்கள் வரதன் Sir இற்கே
உவப்புடன் அளித்து நின்றது
ஐயைந்து வருடங்கள் தாண்டியும்
ஒழுக்காற்றுக் குழுவை மனதார
நேர்மையாய் நெறிப்படுத்தி இன்று
ஓய்வு நிலையிலும் ஓய்வின்றி
நிறுவனத்தின் வளர்ச்சிக்காய் உழைக்கும்
உன்னத ஆசான் இவர் - இன்று
வைரவிழாவில் ஜொலிக்கும் வைரம்

கட்டமைப்பு, கட்டுப்பாடு, ஒழுங்கு
இவையெல்லாம் சீர்குலைந்து போகாது
யாழ் மண்ணின் கண்ணனைய கலாசாரம்
சரிவு கண்டு விழாமல்
என்றும் நிமிர்ந்து நிற்க
ஈடு இணையிலாக் கல்வியை
ஏற்றமுடன் வழங்கி நிற்க
ஊக்கியாய் நின்று உழைத்திடும்
உன்னத ஆசான் இவர்
வைரவிழாவில் ஜொலித்திடும் வைரம்

1973 ஆம் ஆண்டதனில்
வித்தாய் விழுந்த சிந்தனை போற்றி
முத்தாய் ஓர் அறிவாலயம் மலர்ந்து
அட்சய பாத்திரமாய் அரிதான கல்விதர
ஆரம்பக் கல்லென்று ஆகியே நின்று
மாணிக்க விழா தாண்டியும் இன்று
மகுட ஜோதியாய் ஒளிதரும்
Express Institute வானுயர்ந்தோங்கவே

கல்விச் சுற்றுலாவில் மாணவர்களுடன்





யாழ். மத்திய கல்லூரியிலிருந்து ஓய்வுபெறும் போது
கல்லூரி சமூகத்தினால் கௌரவிக்கப்பட்டபோது





எண்ணங்கள் தோறும் சிந்தனை செய்திடும்
சீர்மிகு ஆசான் இவர்
வைரவிழாவில் ஜொலித்திடும் வைரம்
பார் போற்றும் எங்கள்
யாழ் மண் இதன்
கல்விப் பாரம்பரியம் தனை
கட்டிக் காத்து நிற்கும்
காத்திரமான பணி தன்னில்
தன்னிகரற்ற நிறுவனமாய் என்றும்
தலை நிமிர்ந்து பணி செய்யும்
The Express Institute
வானுயர்ந்து ஓங்கி நின்று
தடைகளைப் படிகளாக்கிச் சென்று
சிகரங்கள் தொட்டு வென்று
வித்தாய் விழுந்து முத்தாய் எழுந்த
இவர் எண்ணங்கள் யாவும்
இனிதாய் ஈடேறி வெற்றிகள் காண
அகவை அறுபதில் உங்களை
அகமகிழ்ந்து வாழ்த்துகிறேன்
வைரவிழாவில் ஜொலித்திடும்
வைரமாய் மட்டுமல்ல
மணிவிழாவில் ஜொலித்திடும்
மகுடமாய் மட்டுமல்ல
நூற்றாண்டு விழாவில்
நிகரற்ற நாயகனாகவும்
யாழ் மண்ணின் மாந்தர்கள்
மகிழ்வோடு உமைக்காண
மங்காத புகழோடு
நீர் வாழ்க நூறாண்டு

**சா. ஷானுகா**
(மாணவி), தரம் 8A

Dear Sir,

May your special day,
Surrounded wid happiness,
Filled wid Laughter,
wropped wid preasure,
Bright ened wid fun,
Blessed wid Love,
Remembered wid joy,
And
Enriched wid hopes,
Hurra 60 years
Many Many Happy
Returns of the
Day.

**By. M. Priyanka**
*Gr. 07 B*

## Live A Long!

In the age of sixty,
You've done some good things
made us so bright and trusty
Gave some lessons and bring
A good opportunity to go
Through a way for,
Which is full fo thrones
And get victory in the path
To move qiucker as drones

How would we forget you
You gave us practice too
To enter through the vulture
Getes and get ready for our bright future
By chang our abilities as our
willingness - To your.

Live a long without any troubles
And make others to feel doubles
of your tallents as your
Student's results Further
up and go on a best way
As others excegerately say

**10 B (2015)**
*Girls*

## Number One Teacher

I' m happy that you're my teacher;
I enjoy each lesson you teach
As my role model you inspire me
To dream and to work and to reach

With your kindness you get my
attention;
Every day you are planting a seed
of cariosity and motivation
To know and to grow and succeed

You help me fulf ll my potention
I'm thankful for all that you've done.
I admire you each day, and I just
want to say,
As a teacher, you're number one.

We respect you cause
You are our mentor and quide
we love your lessons
Happy birthday, dear teacher
may these wishes
make you smile

HAPPY BIRTHDAY SIR...

**By. J. Mithusha**
*Grade. 05*

## Congratulation

*1) Congratulations and celebrations when I tell*
*Every one that you're in love with me*
*Congratulations and jubilations*
*I want to know that I am happy as can be*

*2) Who would believe that I could be happy and contented*
*I used to think that happiness had been invented*
*But that was in the bad old days befor I met you*
*When I let you walk in to my heart.*

*3) I was a fraid that may be you thought you loved me*
*That I was only falling myself think you'd loved me*
*But then to night you said you couldn't live without me*
*There around about me you wated to stay.*

**R. Laxshajini**
*Gr. 05*



# செயலாளரின் எண்ணத்தில் இருந்து....



ஆசிரியர் என்பவர் ஓர் ஒளிரும் சுடரைப்போன்றவர். ஏனெனில் ஒளிரும் சுடரில் இருந்தே ஏனைய விளக்குகளுக்கு ஒளியேற்ற முடியும். அந்த வகையிலே எனதாசான் திரு. தம்பிப்பிள்ளை வரதராஜா அவர்களது மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் நான் பேரானந்தம் கொள்கின் றேன்.

இவர் 01.03.1955ஆம் ஆண்டு பிறந்தவர். ஆரம்பக் கல்வியை கோப்பாய் மகா வித்தியாலயத்திலும், இடை நிலைக் கல்வியை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் உயர் கல்வியை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியிலும் கற்று கணித ஆசானானார். தமது பயிற்சியை பலாலி ஆசிரியர் கலாசாலையில் முடித்ததுடன் கல்வி மாணிப் பட்டப்படிப்பினை தேசிய கல்வி நிறுவகத்தின் மூலம் முடித்துக் கொண்ட கல்விமானாவார்.

23.05.1978 தொடக்கம் 05.09.2011வரை 33 வருடங்கள் ஆசிரியப் பணிக்காகத் தம் வாழ்நாளில் பாடுபட்டவர். நீண்டகாலம் யா/மத்திய கல்லூரி கணித ஆசிரியராகவும், ஒழுங்காற்று அதிபராகவும், மாணவர் முதல்வர் சபைப் பொறுப்பாசிரியராகவும் பணியாற்றினார்.

01.03.1973இல் தமது சொந்த முயற்சியால் இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ரிரியூட்டை ஆரம்பித்து இன்று சுமார் 800 மாணவர்கள் வரை கற்று வருகின்றனர். மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய வகுப்பறைகள், ஆசிரியர் ஓய்வு அறை, கணித விஞ்ஞான மூலவள நிலையம், மலசலகூட வசதிகள், முன்பள்ளிச் சிறார்களுக்கான கல்வி வசதி மற்றும் பேருந்துச்சேவை என்பனவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளமையும் இவர் கல்வி உலகிற்குச் செய்த அளப்பெரிய சேவை எனலாம்.

இத்துடன் இவர் சேவைகள் நின்றுவிடவில்லை, நிறுவனத்தின் வெள்ளி விழா, 40 ஆவது ஆண்டு மாணிக்கவிழா மற்றும் 50ஆவது அகவை பொன்விழா கொண்டாடி முறையே "அன்னை", "மகுடஜோதி", "வரதம்" போன்ற நூல்களும் வெளியிடப் பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.



இருப்பினும் நானும் இந்த "வரதராஜா என்னும் மாபெரும் கல்விச் சாகரத்தின் ஓர் சிறு துளியாவேன். 1987 முதல் 1992 வரை இதே ஆசானிடம் இதே கல்வி நிறுவனத்தில் கல்வி கற்றேன் என்பதனை மிகவும் பெருமையுடன் கூறிக் கொள்வதில் மகிழ்ச்சியடை கின்றேன்.

அத்துடன் 1996ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை இந்நிலையத்தில் என் ஆசானின் வழிகாட்டலின் கீழ் "வணிகக்கல்வியும் கணக்கீடும்" என்ற பாடத்தைக் கற்பித்து வருகின்றேன். கல்வி கற்ற இடத்தில் கற்பித்த ஆசானுடன்

சமகாலத்தில் சேர்ந்தே கற்பிப்பது என்பது எல்லோருக்கும் கிடைப்பதில்லை. அந்தப் பாக்கியத்தைப் பெற்றமையை இட்டு பெரும் மகிழ்வும் இறுமாப்பும் எய்துகின்றேன்.

இம் மலருக்கு ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகள், கட்டுரைகள், செய்திகள், தகவல்கள் யாவற்றையும் உரிய காலத்தில் வழங்கி உதவிய பெரியோர்கள், சான்றோர்கள், அறிஞர், பெருமக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் யாவர்க்கும் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் இம் மலரிற்கும் மணிவிழாவிற்கும் நிதி உதவிகளை வழங்கிய திரு. த. பஞ்சராஜா - டென்மார்க், திரு. க. ஜெயதயா - பெல்ஜியம், திரு. க. கோபிராஜ் - பெல்ஜியம், திரு. க. மயூரன் - பெல்லியம், திரு. க. சஞ்சே - லண்டன் ஆகியோர்களுக்கு எமது நிறுவன சமூகத்தின் சார்பிலும், மணிவிழா குழுவின் சார்பிலும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். உங்கள் பேராதரவினாலும், ஆலோசனையினாலும் இம் மலர் அழகுற அமைந்துள்ளது. அதன் அறிவியல் நறுமணம் யாவரின் நுகர்விற்குப் பயன்படும் என பெரிதும் நம்புகின்றேன்.

"வாழ்க எமது ஆசான் புகழ்
வளர்க அவரது சேவைகள்"

**ந. மோகநேசன்**
*பழைய மாணவன், ஆசிரியர், செயலாளர்,*
*மணிவிழாக் குழு,*
*இருபாலை எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்,*





Harikanan, Jaffna.